திரு மந்திரம்-ஓர் அறிமுகம்

(பாயிரம்)



மு.பெ.சத்தியவேல் முருகனார்

திருமந்திரம் - ஓர் அறிமுகம்

(பாயிரம்)

மு.பெ.சத்தியவேல் முருகனார்

கலைஞன் பதிப்பகம்
9, சாரங்கபாணி தெரு,
தி.நகர்,
சென்னை - 600 017.

Rs.80.00

THIRUMANDHIRAM - ORU ARIMUGAM (PAAYIRAM)

By
Mu.Pe.Sathiavel Muruganar

First Edition : 2002
Second Edition : 2010
Third Edition : 2019

Published By
KALAIGNAAN PATHIPPAGAM
9, Sarangapani Street,
T.Nagar, Chennai - 600 017
Phone : 044 - 2834 9488 / 2834 3224

Typest by
Star Graphics

Printed at
Professional Printers,
Chennai

திருமந்திரத் திறவு

வாழ்வுக்குரிய ஒழுக்க வழக்கங்களை வலியுறுத்துவதும், சான்றோர் வகுத்த சமய நெறிப்பாட்டை வரையறுப்பதும், ஒரு சமயத்தில் உள்ளடங்கிய மெய்ப்பொருட் கூறுகளைத் தெளிவுறுத்துவதும் ஆகிய மும்மைசான்ற கோட்பாடுகள் ஞான நூல்களின் திறத்தைக் காட்டும் என்பர். அவ்வகையில் ஓதுவார்க்கு எளிதாயும், உணர்வார்க்கு அரிதாயும் ஒழுகுவார்க்கு இன்பத்தை ஊட்டுவதாகவும் திருமந்திரம் அமைந்தது என்பர். 'யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நல்லுணர்வு திருமூலரிடத்தில் திகழ்ந்து மிளிர்ந்ததால் திருமந்திரத்தின் பெருமையை நாம் என்றும் புகழ்ந்து போற்றுகின்றோம்.

திருமந்திரம் யோகத்தைப் பற்றித் தோய்ந்து சிந்தித்த ஞான நூலாகும். திருமந்திரத்தை உரை காணவும் மேற்கோள் காட்டவும் தயங்கிய நிலையும் இருந்தது. குறிப்பாகச் சைவ நன்மக்கள் யோகப்பயிற்சியைப் பெரிதாகக் கருதவில்லை என்றும் சிலர் கூறுவர். யோகப்பயிற்சி தமக்கு உண்டு என்று சொல்லிக் கொண்ட சிலரும் போலிகளாக வாழ்ந்து முடிந்தனர்.

இந்நாளில் திருமந்திர மாநாடு நடத்தும் போக்கு மன்றங்களிடையே மலர்ந்துள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பாக சிவப்பிரகாச தேசிகர் எழுதிய உரை வடகலை, தென்கலையில் அடங்கிய நுண்ணிய விளக்கங் களைக் கொண்டது. மகாவித்துவான் தண்ட பாணி தேசிகர் திருமந்திர முழுமைக்கும் உரை செய்தார். லால்குடி ஜி. வரதராச பிள்ளை சிறந்த உரை வரைந்தார். சைவக் கடலாக வாழ்ந்த ப. இராமநாதம் பிள்ளையவர்களின் உரை கழகப் பதிப்பாக கவினிய தமிழில் வந்துள்ளது. முனைவர் பேராசிரியர் சுப. அண்ணாமலை திருமந்திரச் செம்பதிப்பும் விளக்கமும் வெளியிட்டார்கள். பொருளியல் அறிஞர் பா. நடராசன் வரைந்த ஆங்கில உரை உலகில் பலரால் பாராட்டப்பட்டது. துடிசை கிழார் சிதம்பரனார் பா. வரதராசன் ஆகியோர் திருமந்திரத்தை ஆராய்ந்தனர். சிறிதும் பெரிதுமாகிய நூல்கள் பல கருத்துரைகளாகவும் வந்துள்ளன.

சித்தாந்த சீலராகவும், பொறியியற் புலமைப் பணியோடு இளம்பருவந் தொட்டே வழி வழிப் பயிற்சியால் ஆகம நூல் ஆராய்ந்த செம்பொருட் செல்வராகத் திகழும் பெ. சத்திய வேல் முருகனார் திருமந்திரத்தை தொடர்ந்து ஆராயத் தனிப்பட்டதன் விளைவாக முதன் முதலாக 'திருமந்திரம் அறிமுகம்' என்ற இந்நூல் மலர்கிறது. இப்பதிப்புக்கள் தொடர்ந்து திருமந்திரக் களஞ்சியமாக வெளி வரவுள்ளன.

பொறியியல் கற்றுப் பல் ஆண்டுகள் பணியாற்றி விருப்ப ஓய்வு பெற்று சைவமும் தமிழும் தழைக்கச் சலியாது தொண்டாற்றி வரும் நூலாசிரியரைச் செந்தமிழ் வேள்விச் சதுரர்

என்று உலகம் அறியும். ஆயிரக்கணக்கான குடமுழுக்குகள், திருமணங்கள் முதலிய வற்றைத் தமிழ் மந்திரங்கள் ஓதிச் சிறப்பான முறையில் நிகழ்த்தி வரும் செயன்மை கொண்டவர். திருமுருக கிருபானந்த வாரியாரின் நெருங்கிய உறவினராயும், அவரிடத்தே நுணுகிய சமயப் பொருண்மைகளைக் கேட்டுத் தெளிந்த மாணாக்கராயும் விளங்குபவர். திருமுறைகள், திருவருட்பா, பாம்பனடிகள் பாடல்கள், சிவப்பிரகாசர் படைப்புகளைச் செம்மையாக ஓதி உணர்ந்தவர். திருமந்திரத் தைப் பற்றி அறிமுகம் செய்வதற்கு இவற்றிலும் தகுதிப்பாடு வேறென்ன வேண்டும்?

தமிழகத்தில் தொன்றுதொட்டு நிலைத் திருக்கும் சிவ வழிபாட்டுக்கும், சிவநெறிக் கோட்பாட்டுக்கும் காலத்தால் முந்திய நூலாகத் திருமந்திரமே அமைந்தது எனலாம். சைவ சித்தாந்தம் என்ற சொல்லும் சித்தாந்தக் கோட்பாடுகளும் திருமந்திரத்திலேயே முதல் முதலாக இடம் பெற்றிருக்கவும் காணலாம்.

திருமூலர் இந்திய நாடு முழுமையும் சுற்றியவர்; ஆங்காங்கு அவர் கண்ட அருள்நெறிச் செய்திகளையெல்லாம் ஆராய்ந்து திருமந்திரமாகத் திரட்டித் தொகுத்தாரென்றும் குறிப்பாக, வங்க நாட்டில் விளங்கிய சத்தி வழிபாட்டுக் குறிப்புகள் திருமந்திரத்தில் விளக்கப்பட்டிருப்பதையும் ஆன்றோர்கள் குறித்துள்ளனர்.

சமய நுண்பொருளோடு வாழ்க்கை ஒழுக்க நெறிகளும், இல்லறமும், இல்லறத்தின் நெறி

முறைகளும் துய்ப்பும் துறவும் வேறெங்கும் காண இயலாநிலையில் திருமந்திரம் ஓதுவதைக் காணலாம். திருமந்திரத்தின் ஆசிரியர் காலத்தை கி.மு.5000-ஐ ஒட்டிக் கணக்கிடுகிறார் அறிஞர் சத்தியவேல் முருகனார். எப்படியாயினும் தேவார காலத்துக்கும் இந்நூல் முற்பட்டது என்று கொள்ளத் தடையில்லை. திருமந்திர நடை எளியது. பிற்காலத்துச் சித்தர்கள் கையாண்ட நடையும், செய்திகளைச் சொல்லும் பாங்கும் இதில் காணலாம். சித்தர் உலகத்துக்கென்றே சில கோட்பாடுகள் உண்டு. நூல் வழக்கல்லாது மக்கள் வழக்காகிய மொழி யிலக்கணங்கள், அங்கதம், உருவகம், இறைச்சி, உள்ளுறை, உவமம் முதலியவை அவற்றுள் சில. திருமந்திரத் தெளிவுக்கு இவை துணைபுரியும்.

அறிஞர் சத்தியவேல் முருகனார் சிவாகமங் களைப் பற்றிய செய்திகளை இந்நூலில் தெளிவாக வரையறுத்துள்ளார். சிவாகமங்கள் 28 என்பது இதுவரை அனைவரும் கூறும் கணக்காகும். இவரோ சிவாகமம் ஒன்பதே என்பார். மற்றவை இருப்பதாகச் சொல்வது கற்பனை என்றும் குறிப்பிட்டுள்ளார். நவ ஆகமங்களைப் பற்றி மட்டும் திருமந்திரம் பேசுகிறது. எல்லா ஆகமங்களும் கிடைக்க வில்லை. முதன்மையான காமிகாகமம் சமண பவுத்த நெறிகளைப் பேசுவதால், அந்த நெறிகள் தோன்றிய பின்னரே ஆகமங்கள் மலர்ந்தன. வேத வியாசரையும் காமிகம் சுட்டுகிறது. அவரது காலம் 7ஆம் நூற்றாண்டு இந்த அடிப்படையில் வடமொழி ஆகமங்கள்

திருமந்திரத்துக்குப் பிற்பட்டவையே என்று ஆசிரியர் முடிவு செய்கிறார். திருமூலர் சதாசிவத் திருநாமம் சாத்தப்பெற்றவர். அவர் தம் நூலுக்கு இட்ட பெயர் திருமந்திரமாலை என்பதும் ஆசிரியர் துணிபு. சைவத்திறம் என்ற சொல்லை ஆராய்ந்து, சமயம் கடந்த பெரு நெறியாகச் சைவம் அமைவதென்றும் எந்தச் சமயத்தவரும் இந்த நெறியைப் பின்பற்றலாம் என்றும் கூறும் திறம் பாராட்டுதற்குரியது. நான்கு உணர்ந்தான், ஐந்து வென்றனன், ஆறு விரிந்தான் எட்டாய் உணர்ந்தான் என்ற திருமந்திரத் தொடர்களை விளக்கும் ஆசிரியர், ''இவற்றைத் தன் வினை யாகவே கூறினார், இறைவனை வினைப் படுத்துவார் இல்லை என்னும் காரணத்தால்'' என்று கூறும்போது பண்டைய உரையாசிரியர் கடைப் பிடித்த உரை மாட்சி இவரிடத்தும் மிகச் சிறந்து திகழ்வதைக் கண்டு மகிழலாம்.

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்'' என்பது தொல்காப்பியம். ஆகையால் இன்ப வடிவினன் என்ற பொதுப் பொருளிலேயே இறைவனுக்குச் சிவன் என்ற பெயர் வழங்குவது பொருத்தம் என்பது ஆசிரியர் முடிவு.

வடமொழியில் இன்றுள்ள இருக்காதிய நான் மறைகள் பண்டைத் தமிழ் மறைகள் ஆகமாட்டா என்று கூறும் அறிஞர் கா.சு. பிள்ளை, துடிசைகிழார் ஆகியோர் கருத்தை இவரும் வழிமொழிகின்றார். அறமே வேதம் என்பதும், அறங்கங்கள் எழுத்து, சொல்,

மந்திரம் முதலிய ஆறு வழிகள் என்பதும் புதுமையான விளக்கங்களாகும்.

சைவ சித்தாந்தச் சான்றோராகிய சதுரர் சத்தியவேல் முருகன் தெளிவாகத் தோற்றுவாய் செய்துகொண்டு முப்பத்தாறு தத்துவங்களையும் முறையே விளக்குவது குறிக்கத்தக்கதாகும்.

சிவாகமங்கள் ஒன்பதே என்பதைப் பிறர்மத மறுப்பும் தன்மத மறுப்புமாக ஆய்ந்துணர்த்துகிறார். பார்ப்பார் என்ற சொல்லுக்கு இளமைப் பொருளன்றிப் புதுப் பொருள் ஒன்றும் வழங்குகிறார். திருவள்ளுவரையும், திருமூலரையும் ஒருங்கிணைத்துப் பேசும் பெற்றியை ஆசிரியடத்தே ஆங்காங்குக் கண்டு அக மகிழலாம். திருமந்திரப் பாயிரத்தை மட்டும் விரிவுரை செய்து வெளியிடப்பெறும் இந்த நூல் தமிழர்க்கு வாய்த்த தனிப் பெருங் களஞ்சியமாகும். ஏனை ஒன்பது தந்திரங்களும் விரைவில் வெளிவர வேண்டும் என்று விரும்பி வாழ்த்துகிறேன்.

பொறியாளர் - செந்தமிழ் நெறியாளர் சிவனைப் பிணித்துக் கருத்தால் பின்னும் தறியாளர் - உலகெல்லாம் புகழும் சிவநெறி உறவாளர் சத்தியவேல் முருகனார் வாழ்க! வளர்க!

- டாக்டர் ஔவை நடராசன்

திருமந்திரம் - ஓர் அறிமுகம்

பாயிரம்

திருமூலர் வணக்கம்

"திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்"

என்று திருமந்திரத்தை அருளிய திருமூலரை வணங்கிக் கொண்டு தொடங்குவோம். ஏனெனில் எதைக் கற்றுக் கொள்ளத் தொடங்கினாலும் அல்லது அறிந்து கொள்ள முயன்றாலும் அதன் ஆசிரியரை வணங்கித் தொடங்கி னால் தான் ஆசிரியரது திருவுள்ளம் நமக்குப் புலப் படும்.

ஒரு நூலைப் பாடம் கேட்டல் எப்படி?

ஒரு நூலை எப்படிப் பாடம் கேட்க வேண்டும் என்று இலக்கண நூலான நன்னூல் கூறுகிறது:

கோடல் மரபே கூறுங்காலைப்
பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்து
இருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர் வத்தனாகிச்

சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவி வாயாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாது உளத்தமைத்துப்
போவெனப் போதல் என்மனார் புலவர்

இதெல்லாம், அந்தக் காலத்துத் திண்ணைப் பள்ளிக் கூடத்திற்குத்தான் பொருந்தும் என்று ஏகடியம் பேசக் கூடாது. இதில் கூறப்படும் இரண்டு விஷயங்கள் எக்காலத்திற்கும் பொருந்தும். அதாவது நூலாசிரியரைப் 'பொழுதொடு சென்று வழிபடல், குணத்தொடு பழகி அவன் குறிப்பில் சார்தல்' என்பவை மிகவும் கட்டாயம். இல்லாத ஆசிரியரை எப்படிப் பொழுதொடு சென்று வழிபடுவது என்று கேள்வி எழலாம். இங்கே நூலாசிரியர் எந்தக் காலத்தைச் சேர்ந்தவரோ அந்தக் காலத்தை மனக்கண்ணால் வருவித்து அந்தப் பொழுதின் பழக்க வழக்க கலாச்சாரங்களுடன் சென்று நூலாசிரியரை வழிபட அந்நூலாசிரியரின் குணமும், குறிப்பும் நமக்குத் தெளிவாகும். அந்தப் பொழுதில், குணத்தில், குறிப்பில் சார்ந்தால் ஆசிரியர் திருவுள்ளம் தெரியும். அதன் வழி நூலை அணுகுதல் வேண்டும். இப்படி நூலாசிரியர் திருவுள்ளத்தை அறியாமையால்தான் இன்று மூல ஆசிரியரின் கருத்துக்கு மாறாக பல உரை நூல்கள் வெளிப்படுகின்றன.

ஒரு நூலை மாணவன் எப்படிப் படிக்க வேண்டும்?

மேற்கண்டது நூலாசிரியரை அறிதல் பற்றியது. இரண்டாவது மாணவனைப் பற்றியது. மாணவன் எப்படிப் படிக்க வேண்டும்? பருகுவன் அன்ன ஆர்வத்தனாய் இருத்தல் வேண்டும். சித்திரப் பாவையின் அத்தக அடங்கி நூலைப் படிக்க வேண்டும். தொலைக் காட்சி நிகழ்ச்சிகள், கிரிக்கெட்டு விளையாட்டைக் காணல்

போன்ற பிற பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் அவ்வப் போது கவனம் சிதறச் சிதற இடையிடையே ஒரு நூலைப் படித்தால் அதன் உட்கிடை சரியாக புத்தியில் படியாது. செவி வாயாக நெஞ்சு களனாக, கேட்டவை கேட்டவை விடாதுளத்து அமைத்துக் கொண்டு நூலின் ஒவ்வொரு பகுதியாகப் படித்தல் வேண்டும்.

இவ்வாறு நூலாசிரியரை அறிதலைப் பற்றியும் ஒரு நூலைப் படித்தலைப் பற்றியும் கூறிய நன்னூல் மேற்கோள் எந்தக் காலத்திற்கும் பொருந்துவதாகும்.

பாயிரத்தின் அவசியம்

அதன் வழி திருமந்திரம் என்ற கருத்துக் கருவூல நூலாசிரியர் திருமூலரை வழிபட்டு வணங்கித் தொடங்குகிறோம்.

இனி, எந்த நூலைப் படிக்கத் தொடங்கினாலும் அந்த நூலாசிரியரின் திருவுள்ளம் அறிந்து கொள்ள வேண்டும் என்று பார்த்தோம். அதற்கு என்ன செய்வது? நூலாசிரியரோ நம்மோடு உடன் இருக்க மாட்டார். அப்படியானால் அவர் திருவுள்ளம், அவரது திருக்குறிப்பு எப்படி நமக்குத் தெரிவது? அதற்கு நம் முன்னோர்கள் ஒரு உத்தியை வகுத்தார்கள். அந்த உத்திதான் பாயிரம் என்பது. நூலைப்பற்றிப் பொதுவாகவும், நூலாசிரியரைப் பற்றியும் சில விவரங்களை அடக்கி நூலுக்கு முன்னால் எழுதி வைப்பார்கள் நமது முன்னோர். அதற்குப் பாயிரம் என்று பெயர் வைத்தார்கள்.

இரம் என்றால் இருத்தலைக் குறிக்கும். பா என்ற சொல் பாவுதலைக் குறிக்கும். நெசவு செய்யும்போது கூட நூலென்றும் பாவென்றும் கூறுதலைக் கவனத்தில் கொள்க. நூலை நெய்தற்கு ஏற்றபடி பரவி வைத்தல் பாவு எனப்படும். எனவே இங்கே பா + இரம் என்ற இரு

சொற்களின் கூட்டத்தில் ஒரு நூலைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டிய விவரங்கள் பரவி இருப்பதால் பாயிரம் என்ற சொல் தொடர் உருவாயிற்று.

பாயிரம் - முற்காலமும், இக்காலமும்

தற்காலத்தில் செய்யுள் நூல்கள் குறைவு. அந்தக் காலத்தில் நூல்கள் என்றாலே செய்யுள் வடிவில்தான் இருக்கும். இன்று தலைகீழாக நூல்கள் எல்லாம் உரைநடை நூல்களாகவே மலர்கின்றன. எனவே அவ்வக்காலத்திற்கு ஏற்றபடி பாயிரம் அமைந்தன. அந்தக் காலத்தில் செய்யுள் நூல்களுக்குப் பாயிரமும் செய்யுள் வடிவிலேயே இருக்கும். தற்காலத்தில் உரைநடை நூல்களுக்கு அமையும் பாயிரத்தை அணிந்துரை, முகவுரை, தந்துரை, முன்னுரை, என்னுரை என்று பல வடிவங்களில் கூறுகிறோம். இவை மட்டும் இல்லாது இக்காலப் பதிப்புகளுக்கு ஏற்ப பதிப்புரை என்ற ஒன்றும் இவ்வகையில் சேர்ந்துவிட்டது.

இவை எல்லாம் இல்லாத நூலை நூலென்றே கூற முடியாது. அதனால் தான்,

'ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே'
என்று நன்னூல் கூறியது. அதுமட்டுமல்ல;

பாயிரம் இல்லாது போனால்?

மாடக்குச் சித்திரமும் மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்கு அணியும்போல் -
நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது

என்று பாயிரத்தை மாடமாளிகைக்கு சித்திரமும் மாநகரிற்கு உள்நுழை கோபுர வாயிலும் போல என்று நன்னூல் சிறப்பித்துப் பேசுகிறது. இதற்கு உரை எழுதியவர்கள்

குருவி ஒன்று பறந்து சென்று திசைதெரியாமல் ஒரு குன்றின் மீது முட்டிக் கொள்வதுபோலவும், காட்டில் திசை தெரியாமல் தடுமாறும் மான்போலவும், பாயிரம் இல்லாத நூலிடைச் சென்ற மாணவன் தடுமாறுவான் என்று உவமை கூறினர்.

பாயிரம் - பொது, சிறப்பு

இந்தப் பாயிரம் பொது, சிறப்பு என இருவகைப்படும். அதாவது பொதுப் பாயிரம், சிறப்புப் பாயிரம் என இரண்டாக பாயிரத்தை வகுப்பர். பொதுப் பாயிரம் நூலைப் பற்றி பொதுவாக நூலாசிரியரே எழுதியருளுவது. சிறப்புப் பாயிரம் என்பது நூலைப் பற்றி பிறர் எழுதி உதவுவது. பிறர் என்பது நூலாசிரியரின் ஆசிரியர், மாணவர், நூலைக் கேட்ட பிற விற்பன்னர்கள் என்று இன்னவர்களில் எவர் வேண்டுமானாலும் இருக்கலாம்.

திருமந்திரத்திற்குப் பொதுப் பாயிரமும் உண்டு; சிறப்புப் பாயிரமும் உண்டு. ஆனால் இப்போதுள்ள திருமந்திரப் பதிப்புகளில் இந்த வரையறை சரியாக செய்தமைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல இயலவில்லை. இதைப் பற்றி இந்நூலின் இறுதியில் பார்ப்போம்.

சிறப்புப் பாயிரம்

இனி ஒரு நூலைப்பற்றி பிறர் கூறும் சிறப்புப் பாயிரமே முதலில் நாம் கருதத்தக்கது. அப்படியானால் சிறப்புப் பாயிரம் என்பது எதையெதைக் கூறுவதாக இருக்க வேண்டும்? இதையும் நன்னூல் கூறுகிறது:

"ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே"

இதன்படி சிறப்புப் பாயிரம் எட்டு விஷயங்களைக் கூறுவதாக அமைய வேண்டும். அந்த எட்டும் இவை: 1) நூலாசிரியர் பெயர் 2) நூல் முதனூலா, வழிநூலா அல்லது புடைநூலா என்று இம்மூன்றில் எவ்வழியைச் சேர்ந்தது என்று கூறுவது 3) நூல் எந்த எல்லை வரை பரவியிருப்பது என்று கூறுவது 4) நூலின் பெயர் 5) யாப்பு 6) நூல் எந்தப் பொருளைப் பற்றியது 7) நூலைப் படிக்கத் தக்கார் யார் (அந்நாளில் கேட்கத்தக்கார் யார் எனக் கொள்க) 8) நூலினால் விளையும் பயன்.

சிறப்புப் பாயிரத்தின் இந்த எட்டு உறுப்புகளையும் திருமந்திரத்தின் பாயிரத்தில் பார்க்கலாம்.

இந்நூலாசிரியரின் பெயர் திருமூலர். இந்தப் பெயரிலேயே பல விஷயங்க்ளும், வரலாறுகளும் அடங்கியுள்ளன. அவற்றைப் பார்ப்பதே திருமூலரைப் பற்றிய நல்ல அறிமுகமாக அமையும்.

திருமந்திர நூலாசிரியர் பெயர்

திருமூலர் என்பது நூலாசிரியரின் சொந்தப் பெயரல்ல. வேறொருவரின் பெயர் இவரைச் சார்ந்தது. இதிலேயே ஒரு வரலாறு அடங்கியிருக்கிறது. தற்காலத்தில் கூட ஒருவருக்கே இரண்டு பெயர் வழங்கக் காண்கிறோம். அது திருமண அழைப்பிதழ்களில் வெளிப்படுவது வழக்கம். ராணி என்கிற பத்மினிக்கு கோபு என்கிற வைத்திய நாதனுக்கு மணம் செய்விக்கிறோம் என்பது போல் எல்லாம் திருமண அழைப்பிதழை நாம் பார்ப்பது உண்டல்லவா? அதுபோல் திருமந்திர நூலாசிரியரை சுந்தர நாதன் என்ற திருமூலர் என்று கூறுவதே பொருத்தம். என்ன ஒரே வேறுபாடு என்றால் ஒருவர்க்கு உள்ள ஒரே உடம்புடன் இரண்டு பேர் அமையும். ஒருவர்க்கு வாய்த்த இரு வேறு உடம்புகட்கு அமைந்த இருவேறு பெயர்களாக சுந்தரநாதன் என்பதும் திருமூலர் என்பதும் அமைந்தது.

கயிலை ஆகமப் பல்கலைக் கழகம்

சுந்தரநாதன் கயிலை மலையில் தவம் செய்த முனிவருள் ஒருவர். நந்தியெம்பெருமானைக் குருவாகக் கொண்டவர். அவரிடம் ஆகமம் பயின்றவர். கயிலையில் இந்த ஆகமப் பல்கலைக் கழகத்தில் நந்தியெம் பெருமான் எட்டு பேருக்கு ஆகமங்களை உபதேசித்தாராம். அந்த எட்டு பேர்கள்: 1) சனகர் 2) சனந்தனர் 3) சனாதனர் 4) சனற்குமாரர் 5) சிவயோக மாமுனி 6) பதஞ்சலி 7) வியாக்ரமர் 8) சுந்தரநாதர். இதை திருமூலரே கூறுகிறார்:

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடில்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே!

மேல் பாடலில் நந்திகள் நால்வர் என்று தனியாகப் பிரித்ததால் அது ஓர் அணியாக (Batch) பயின்றவர்கள் என்றும் அடுத்த நால்வர் அணியில் தம்மோடு உடன் பயின்றவர்கள் பெயரைத் தனித்தனியே இப்பாடலில் கூறியுள்ளார் என்றும் அறிகிறோம்.

இதில் கவனிக்க வேண்டியது என்னவெனில் இரண்டாவது நால்வர் அணியில் தம்மோடு பயின்றவர்களின் பெயர்களைக் கூறிய திருமூலர் தமக்கு முன்னால் பயின்ற நால்வர் அணியில் உள்ளவர்களின் பெயர்களைக் கூறவில்லை. நந்திகள் நால்வர் என்று பொதுவாகக் கூறி உள்ளார். உரை எழுதிய முன்னோர்கள்தான் அந்த நால்வர் சனகர், சனந்தனர், சனாதனர், சனற்குமாரர் என்று எழுதி வைத்தார்கள். கயிலாயத்தில் சிவபெருமானிடம் நால்வர் உபதேசம் கேட்டனர் என்றும் அப்போது சிவபெருமான் தென்முகமாக கல்லால மரத்தினடியில் இருந்து மேலே கூறிய நால்வர்க்கும் உபதேசித்தார் என்றும் புராணங்களும், காவியங்களும் இன்னும் பல சமய

நூல்களும் கூறுகின்றன. சிவபெருமானையே நந்தி என்றும் கூறுவதுண்டு. எனவே மேலே கூறிய சனகாதியரை அந்த நால்வர் அணியில் சேர்ப்பது தவறாகாது.

ஆகம உபதேச வழி

சிவபெருமானாகிய நந்தியிடம் ஆகமங்களை உபதேசமாகக் கேட்டவர்களில் அதிகார நந்தியும் ஒருவர். யார் யார் எந்தெந்த வழியில் ஆகமங்களை உபதேசம் கேட்டவர்கள் என்று ஒரு திருமந்திரப் பாடலில் திருமூலர் கூறுகிறார். அது வருமாறு:

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திரதேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆகமம் எங்கள் நந்திபெற்றானே

அதாவது பரசிவம் சத்திக்கும், சத்தி சதாசிவத்திற்கும், சதாசிவம் ஈசுர தத்துவம், சுத்த வித்தை ஆகிய இரு தத்துவ அதிபதிகளான மகேசுவரர்க்கும், மகேசுவரர் உருத்திர தேவர்க்கும், உருத்திரர் திருமாலுக்கும், திருமால் பிரமனுக்கும் ஆகமங்களை வழி வழி பெற்று உபதேசித்தனர் என்பது பாடலின் கருத்து. இந்த நவ ஆகமங்களை சிவனிடம் அதிகார நந்தி பெற்றார் என்கிறார். வழி வழியாகக் கூறி வந்தவர் மேல்பாடலில் பிரம்மன் நந்திக்கு ஆகமங்களை உபதேசித்தார் என்று கூறவில்லை. வழிமுறையை சிவபரத்திலிருந்து தொடங்கி பிரம்மன் வரை விவரித்து அவர்கள் தம்மில் தாம் பெற்றனர் என்பதுடன் நிறுத்தி இருக்கிறார். இப்படி இவர்கள் எல்லாம் தம்மில் தாம் பெற்ற ஆகமத்தை எங்கள் நந்தி பெற்றான் என்றவர், நந்தி யாரிடம் பெற்றான் என்பதைக் கூறாமல் பாடலை முடிப்பதால் இது பூட்டுவில் பொருள்கோளாக நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே சிவமாம் பரத்தினில் என்று கொள்வதே சரியாகும்.

உபதேசக் கொடி வழி இரண்டு

எனவே பரசிவம் ஆகமங்களை இரண்டு பேருக்கு நேரடியாக உபதேசித்தது என்று அறிகிறோம். ஒருவர் சத்தி; மற்றொருவர் நந்தி. சத்தியிடம் சதாசிவர், சதாசிவரிடம் மகேசுவரர் இருவர், மகேசுவரரிடம் உருத்திரர், உருத்திரரிடம் திருமால், திருமாலிடம் பிரம்மன் என வழிவழியாக ஆகமம் கேட்ட வழிமுறை ஒன்று; இன்னொரு வழிமுறை சிவபெருமானிடம் நேரடியாக ஆகமம் கேட்ட நந்தி பரம்பரை.

அந்த நந்தி பரம்பரையில் ஒருவர்தான் திருமூலர். எனவேதான் உரிமையோடு எங்கள் நந்தி என்று பாடலில் கூறுகிறார்.

சுந்தரநாதர் - திருமூலரானது

இங்கே ஒரு கேள்வி எழுவது இயல்பு. திருமூலர் திருமூலர் என்று கூறுகிறீர்களே, பாடலில் தம் பெயரை அவர் திருமூலர் என்று கூறவில்லையே, அது ஏன்? என்பது தான் அந்தக் கேள்வி.

திருமூலர் என்ற பெயர் தமக்கு இடையில் வந்தது என்று வேறொரு பாடலில் குறிப்பிடுகிறார். பாடல் வருமாறு:

நந்தி அருளாலே நாதனாம் பேர் பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவது என்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந்தேனே!

இந்தப் பாடலில் மூன்று உண்மைகளைத் தெரிவிக்கிறார். அதாவது மூலனை நாடியது, அதற்கு முன்னால் நாதன் என்ற பட்டம் பெற்றது, மூலனை நாடியபின் இது நந்தியருள் என்று நந்தி வழிகாட்ட மூலனாகவே இருந்தது என்பன.

நாதன் என்பது ஒரு பட்டப்பெயர்

சரி, நாதன் என்பது ஒரு பட்டப் பெயர் என்பதை எப்படி அறிந்தீர்கள் என்று கேள்வி எழும். அது அவரது இயற்பெயர் அல்ல என்பதை "நந்தி அருளால் நாதன் ஆகின்ற பெயரைப் பெற்றோம்" என்பதில் இருந்து அறிகிறோம். இவர் நந்தியிடம் ஆகமங்களைப் பயின்றவர் என்பதை ஏற்கெனவே கூறி இருக்கிறார். ஆகமங்களை நந்தி அருளால் பயின்று தேர்ச்சி பெற்றவுடன் அத்தேர்ச்சி காரணமாக நாதன் என்ற பட்டப் பெயர் கிடைத்தது என்பது தெளிவாகிறது. பல்கலைக் கழகத்தில் பயின்று தேர்ச்சி பெற்றவுடன் இளநிலை அல்லது முதுநிலைப் பட்டம் கிடைப்பது போல இது எனக் கருதலாம்.

இயற்பெயர் சுந்தரன் தான்

எனவே நாதன் என்ற பட்டப் பெயரோடு வேறு எந்தப் பாடலிலாவது நூலாசிரியர் குறிப்பிடப்பட்டிருக்கிறாரா என்று பார்ப்போம். திருப்பனந்தாள் மடம் பதிப்பில் திருமந்திர நூலின் 101ஆவது பாடலாக வருவதில் பெயர் பற்றிய குறிப்பு காணப்படுகிறது. பாடல் வருமாறு:

வந்த மடமேழும் மன்னும்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற மூலன் மடவரை
தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்
சுந்தரன் ஆகமச் சொல்மொழிந்தானே

மேற்கண்ட பதிப்பில் சுந்தரன் என்று கூறப்படாமல் 'சுந்தர ஆகமச் சொல் மொழிந்தானே' என்று வேறுபாடாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்தப் பதிப்பில் திருமந்திர வரலாறு என்று துடிசை கிழார் ஆய்வுடன் வழங்கிய உரையில் 24-ஆம் பக்கத்தில் 'சுந்தரன் ஆகமச் சொல்மொழிந்தானே' என்றே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகமத்தைச் சுந்தர ஆகமம் என்று கூறினார் இதுவரையிலும் எவரும் இல்லை. எனவே 'சுந்தர'

என்பது ஆகமம் என்ற சொல்லிற்கு அடைமொழியாகக் கொள்வது பொருந்தாது. அதோடு 'சொல் மொழிந்தானே' என்று அந்த அடி முடிவதால் மொழிந்தவன் பெயர் சுந்தரன் என்று கூறுவதாக்கி 'சுந்தரன் ஆகமச் சொல் மொழிந்தானே' என்று கொள்வதே சரி.

மாறாக, 'சுந்தர ஆகமம்' என்பது தான் சரி என்று கூறினால் மேற்கூறிய பதிப்பில் மூலச் செய்யுளில் அப்படிக் குறிப்பிட்டு உரை மேற்கோளில் தவறாக 'சுந்தரன் ஆகமச் சொல்மொழிந்தானே' என்று பதிப்பித்திருக்கக் கூடாது. அப்படியே மூல பாடம் அதுவாக இருந்தது என்றாலும் உரை மேற்கோளில் சுந்தரன் என்று பதிப்பித்த போது அங்கே நட்சத்திரக் குறியிட்டு கீழே மூல பாடம் 'சுந்தர' என்பதில் துடிசை கிழார் 'சுந்தரன்' என்று பாட பேதம் கொண்டார் என்று குறிப்பிட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாததால் மூலச் செய்யுள் பதிப்பில் சுந்தரன் என்றில்லாமல் 'சுந்தர' என்று அச்சுப் பிழையாக பதிப்பிக்கப்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ப. ராமநாதம்பிள்ளை அவர்களின் உரையுடன் வெளியிட்ட திருமந்திர பதிப்பில் கூட 87-ஆம் பக்கத்தில் 'சுந்தரன் ஆகமச் சொல்மொழிந்தானே' என்றே பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

மூலபாட ஆய்வு செய்து டாக்டர் சுப. அண்ணாமலை பதிப்பித்த திருமந்திர நூலின் முன்னுரையில் பக்கம் XXXI (31)-இல் சுந்தர ஆகமம் என்பதே செவ்விய பாடமாகக் கொள்ளத்தக்கது என்று தனது கருத்தை சொன்னாரே ஒழிய எந்தெந்தச் சுவடிகளில் 'சுந்தரன்' என்றும் எந்தெந்தச் சுவடிகளில் 'சுந்தர ஆகமம்' என்றும் குறிப் பிடப்பட்டுள்ளது என்ற விவரங்களைக் கொடுத்தாரில்லை. எனவே இது அவர் கருத்து என்று கூறலாமே ஒழிய

எல்லோராலும் ஏற்கப்படுவதற்கு சான்று காட்டி நிறுவிய கருத்தாகக் கொள்ள இயலாது.

இக்காரணங்களினாலும், பாடல் போக்கில் மொழிந்தான் என்று வருவதால் அது யார் என்ற கேள்விக்குச் சுந்தரன் என்று வருவதே நிறைவு செய்யும் என்பதாலும் (இதை அவாய் நிலை நிறைவு என்று பெரியோர் கூறுவர்) 'சுந்தரன் ஆகமச் சொல் மொழிந் தானே' என்பதே சரி என்று நிலைநாட்டப் படுவதாயிற்று.

எனவே திருமந்திரத்தின் ஒன்பது தந்திரங்களை அதன் சார்வாக மூவாயிரம் பாடல்களை மொழிந்தவரின் இயற் பெயர் சுந்தரன் என்பது தெரியவருகிறது.

சுந்தரன் நாதன் என்ற பட்டம் பெற்றது

இந்தச் சுந்தரனுக்கு நாதன் என்ற பட்டப் பெயர் இணைத்து வழங்கப்பட்டதா என்பதை ஆராய வேண்டும்.

திருமூலர் பாடிய மூவாயிரம் பாடல்கள் அடங்கிய திருமந்திரத்தில் நாதன் என்ற பேர் பெற்றோம் என்று வருகிறதே ஒழிய சுந்தரன் என்ற பெயரோடு அல்லது திருமூலர் என்ற பெயரோடு அது இணைந்து காணப்பட வில்லை. திருமூலர் வேறு ஏதாவது நூல் எழுதி யிருந்தாரேயானால் அந்த நூலிலாவது ஏதாவது இது பற்றிய செய்தி கிடைக்கிறதா என்று தெரிந்து கொள்ளலாம் அல்லவா?

திருமூலர் மூன்று நூல்கள் செய்ததாக ஒரு பாடல் கூறுகிறது. பாடல் வருமாறு:

மூலன் உரைசெய்த மூவாயிரந் தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே

இதில், மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் திருமந்திர நூலாக நாம் காணக் கிடைக்கின்றது. முப்பது உபதேசம் என்பது இந்த மூவாயிரம் தமிழ் ஆகிய திருமந்திரத்திலேயே இணைத்துக் காணப்படுகிறது. 'மந்திரம் முந்நூறு' என்பதை மட்டும் தனி ஒரு நூலாக அண்ணாமலைப் பல்கலைக் கழகம் பதிப்பித்திருக்கிறது. அதில் 915-ஆம் பக்கத்தில் ஒரு பாடலும், அதற்கு வழங்குகின்ற பாடபேதங்களும் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அதனைத் துடிசை கிழார் எழுதிய 'திருமூல நாயனார் வரலாறு' என்ற பகுதியில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக திருமந்திரப் பதிப்பில் 67-ஆம் பக்கத்தில் கொடுத்திருக்கிறார்கள். பாடல் வருமாறு:

"மந்திரம் கொண்டு வழிபடு வோர்க்குச்
சுந்தர நாதன் சொல்லிய மந்திரம்
நந்திஎன் நாதன் நாவார ஓதினேன்
பைந்தொடி மேனிப் பயனிது தானே!"

இப்பாடல் மூலம் திருமந்திரம் பாடிய ஆசிரியர் பெயர் பட்டப் பெயராகிய நாதனுடன் இணைந்து சுந்தர நாதன் என்பது வெளியாயிற்று.

எனவே கயிலாயத்தில் சிவயோக மாமுனி, பதஞ்சலி, வியாக்கிரமர் ஆகிய மூவருடன் நந்தியெம்பெருமானிடம் ஆகமங்களைக் கேட்டபோது நூலாசிரியரின் இயற்பெயர் சுந்தரன் என்பதும் ஆகமங்களில் தேர்ந்து பட்டம் பெற்றபின் சுந்தரநாதன் என்பதும் நிறுவலாயிற்று. ஆனால் 'நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்' என்று முன்கூறிய பாடலில் 'என்றிவர் என்னோடு எண்மருமாமே' என்று பாடிய போது தன் பெயரைக் குறிப்பிடாமைக்குக் காரணம் சுந்தரநாதன், திருமூலர் உடம்பில் நின்று மேற்கூறிய பாடலைப் பாடியதனால் என்று கொள்ளலாம்.

மந்திரம் முந்நூறு - சுந்தரநாதன்;
திருமந்திரம் - மூலர்

இதில் ஒன்று நினைவில் வைக்க வேண்டும். துடிசை கிழார், நூலாசிரியர் திருமந்திரம் பாடியபோது மூலன் உடலில் நின்று பாடினார் என்றும், மந்திரம் முந்நூறு என்ற நூலையும், முப்பது உபதேசம் என்ற நூலையும் சுந்தர நாதனாக நின்று பாடினார் என்றும் குறிப்பிடுகிறார். இதற்கான ஆதாரங்களை அவர் கூறவில்லை. ஆனால் மந்திரம் முந்நூறு என்ற நூலில் மேற்குறிப்பிட்டவாறு சுந்தர நாதன் என்று குறிப்பிடப்படுவதால் அந்த நூலை சுந்தரநாதனாக திருமூலர் இருந்தபோது பாடியது எனக் கொள்ளலாம்.

இனி, இந்தப் பின்னணியில் திருமந்திர நூலை ஆக்கியோனின் இயற்பெயர் சுந்தர நாதன் என்பதும், அவர் ஒரு நிகழ்வின் முறையில் மூலன் என்ற இடையனின் உடலில் புக வேண்டி இருந்தது என்றும், பின்னர் நந்தியின் வழிகாட்டுதலில் அந்த உடலிலேயே தங்க வேண்டி இருந்தது என்றும், அதனால் அவர்க்கு திருமூலர் என்ற பெயரும் கிடைத்தது என்றும், திருமூலரான பின்னரே திருமந்திரத்தை அவர் அருளினார் என்பதும் புலனாகிறது.

சுந்தரநாதன் திருமூலரான வரலாறு

அடுத்து அதென்ன ஒரு நிகழ்வின் முறையில் அவர் மூலனின் உடல் புகுந்தது? அதென்ன நிகழ்வு? என்ற கேள்விகள் எழுவது இயல்பு.

இதுபற்றி பெரிய புராணத்தில் தெய்வச் சேக்கிழார் கூறும் வரலாறே நமக்கு ஆதாரம். அதில் திருமூலரை நமக்கு அறிமுகப்படுத்தும் போது அவர் கயிலாயத்தில் உள்ள சித்தர்; நந்தி அருள் பெற்றவர்; யோகி என்கிறார்.

ஆனால் கயிலாயத்தில் அவர் இருந்தபோது அவர் பெயர் என்ன என்று குறிப்பிடவில்லை. அவர் பெயர் சுந்தரநாதன் என்றும் குறிப்பிடவில்லை; சுந்தரநாதன் இல்லை என்றும் குறிப்பிடவில்லை. பாடலைப் பார்ப்போம்.

அந்திஇளம் பிறைக்கண்ணி அண்ணலார்
கயிலையினில்
முந்தைநிகழ் கோயிலுக்கு முதற்பெருநா யகமாகி
இந்திரன்மால் அயன்முதலாம் இமையவர்க்கு
நெறியருளும்
நந்திதிரு வருள்பெற்ற நான்மறையோ கிகள் ஒருவர்

இளம் பிறைக் கண்ணி சூடிய சிவபெருமானாகிய இறைவன் எழுந்தருளிய கயிலாயம்; அதுவே கோயில் களுக்கு எல்லாம் முதற்கோயில்; அந்தக் கோயிலுக்குள் நுழையும் திருமால், பிரமன், இந்திரன் போன்ற தேவர்களை எல்லாம் நெறிப்படுத்தி உள்ளே அனுப்பும் நாயகமாகிய அதிகாரத்தைச் செய்யும் அதிகார நந்தி, அவரின் அருள்பெற்ற ஒருவர்; நான்மறை காட்டும் யோக நெறியில் தலைப்பட்ட நல்ல யோகி. இப்படித்தான் மேற்பாடலில் சேக்கிழார் திருமூலரை அறிமுகம் செய்கிறார்.

இதில் சுந்தரநாதன் என்ற பெயர்தான் இல்லையே தவிர, திருமூலரைப்பற்றிய மற்ற செய்திகள் எல்லாம் திருமந்திர நூலில் காணப்படுவதாக நாம் முன்கூறிய செய்திகளோடு ஒத்து அமைவதைக் காணலாம்.

சரி! இவர் என்ன செய்தார்? சேக்கிழார் அதை அடுத்த பாடலில் கூறுகிறார். அதாவது அந்தப் பெயர் கூறப்படாத கயிலாயத்து நந்தியின் ஞான வாரிசான யோகி, கயிலாயத்திலிருந்து தன்னுடைய நண்பரான அகத்தியரைக் காண தென் தமிழ்நாட்டில் உள்ள பொதிகை மலைக்குப் புறப்பட்டாராம்.

மற்றவர்தாம் அணிமாதி வரும்சித்தி பெற்றுடையார்
கொற்றவனார் திருக்கயிலை மலைநின்றும் குறுமுனிபால்
உற்றதொரு கேண்மையினால் உடன்சில நாள் உறைவதற்கு
நற்றமிழின் பொதியமலை நண்ணுதற்கு வழிக்கொண்டார்

சேக்கிழார் அந்த யோகிகளைப் பற்றி முன்பாடலில் கூறாத இன்னொரு செய்தியை இங்கு அடுத்தபாடலில் கூறுகிறார். அதாவது அந்த யோகி அணிமாதி சித்திகளை ஆற்றும் வல்லமை படைத்தவர் என்பது அது. அணிமாதி சித்திகளில் வல்லமை உடையவர் என்று கூறாமல் 'அணிமாதி வரும் சித்தி பெற்றுடையார்' என்று கூறியதனால் ஒரு கருத்தை முன் வைக்கிறார் சேக்கிழார். அதாவது அணிமாதி சித்தி பெற்று, அவற்றைத் தம் உடைமையாக உடையவர் அவர்; அந்த சித்தி அவரோடு வந்தது என்றார். ஆகவேதான் 'வரும் சித்தி' என்று பாடலில் சேக்கிழார் கூறினார். இல்லையெனில் 'அணிமாதி அரும்சித்தி பெற்றுடையார்' என்று கூறியிருப்பார். 'வரும் சித்தி' என்றதனால் அதில் ஒரு கருத்தைக் கூற சேக்கிழார் முயல்கிறார் என்பது தெளிவாகிறது. அது என்னவெனில் எஜமானன் புறப்படும்போது அவனுக்கு உடைமையாகிய நாய் அவன் வேண்டினாலும், வேண்டாவிட்டாலும் அவன் பின்னே ஓடி வருவதுபோல, கயிலாயத்திலிருந்து அந்த யோகி பொதிகைக்குப் புறப்பட்டபோது அவரோடு பின்னே அணிமாதி சித்திகள் ஓடி வந்து தொடர்ந்தன என்பதே அது.

இதன்மூலம் சேக்கிழார் இன்னொரு கருத்தையும் நிலை நாட்டுகிறார். அதாவது அருளாளர்கள் சித்துகளை நாடிப் போவதில்லை; ஆனால் அணிமாதி சித்திகள்தாம் அருளாளரை நாடி வரும் என்பதே அது. திடீரென்று

லிங்கம் வரவழைப்பது, விபூதி குங்குமம் வரவழைப்பது போன்ற சித்துக்களை செய்து கொண்டிருப்பவன் ஒரு சர்க்கஸ்காரன் போல; அவன் அருளாளன் அல்ல என்பதை இந்தச் சமூகம் உணர வேண்டும் என்பது சேக்கிழார் கருத்து. தேவை ஏற்படும் போது தம்பின் தொடரும் சித்துக்களை அருளாளர் பயன்படுத்துவார்களே ஒழிய இதையே தொழிலாகக் கொள்ளமாட்டார்கள். எனவே இதையே தொழிலாகக் கொண்டு வேடிக்கை காட்டும் சிலரை அருளாளர் என்று எண்ணாதே என்று கூறியதாயிற்று.

இனி, அந்த யோகிகள் பின் அணிமாதி சித்துகள் வந்தன என்பதை ஏன் சேக்கிழார் கூறினார் என்றால் அந்த சித்துகளில் ஒன்றான கூடு விட்டுக் கூடு பாய்தல் என்ற சித்தை அவர் வழியில் பயன்படுத்தப் போகிறார் என்பதை முன்னமே உணர்த்துவதற்காகத் தான்.

இதன்பின் வரும் பாடல்களில் வடக்கிலிருந்து தெற்காக வழியில் உள்ள தலங்களை எல்லாம் அந்த யோகி தரிசித்துக் கொண்டு பயணம் செய்து வந்தது விவரிக்கப் படுகிறது. அது வரன் முறையாக விவரிக்கப்படுவதும், அவ்விவரணையில் இலக்கியச் சுவைகளையெல்லாம் இனிக்க இனிக்க எடுத்தாளப்படுவதும் சேக்கிழாரின் தனி மாண்பு. இனி, அந்த யோகியின் பயணத்திற்கு வருவோம்.

தெற்கே சாத்தனூர்க்கு வந்து விடுகிறார் அந்த யோகி, சாத்தனூர், திருவாவடுதுறைக்கு அருகாமையில் உள்ளது. திருவாவடுதுறை என்பது கோமுத்தீஸ்வரர் இருக்கும் கோயில் வளாகத்திற்கு உள்ள பெயர். இன்று அதுவே ஊர் பெயராக ஆகிவிட்டது.

மதுரை என்பது ஊர் - அங்கே சொக்கீசர் உள்ள கோயில் வளாகத்திற்கு ஆலவாய் என்று பெயர்; திருவெண்ணெய் நல்லூர் என்பது ஊர் - அங்கே உள்ள சிவபெருமான் ஆலய வளாகத்திற்கு திருவருட்டுறை

என்பது பெயர்; கரூர் என்பது ஊர் - அங்கே சிவபெருமான் உள்ள ஆலய வளாகத்திற்கு ஆநிலை என்பது பெயர்; பெண்ணாகடம் என்பது ஊர் - அங்கே சிவபெருமான் உள்ள ஆலய வளாகத்திற்கு தூங்கானை மாடம் என்பது பெயர்.

அதுபோல திருவாவடுதுறை என்பது கோயில் வளாகத்தின் பெயர். அந்த கோயில் அமைந்துள்ள ஊர் சாத்தனூர். இப்போது சாத்தனூர் என்பது மறைந்து திருவாவடுதுறை என்பதே அவ்வூரின் பெயராக வழங்கி வருகிறது - தில்லை சிதம்பரம் ஆனது போல. (தில்லை ஊர் - சிதம்பரம் சபையைக் குறிப்பது)

இனி, அந்த யோகியைப் பார்ப்போம். சாத்தனூரில் ஒரு மேய்ச்சல் நிலத்தின் வழியாகச் சென்று கொண்டிருக்கிறார் அந்த யோகி. அவர் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தது ஒரு காட்சி. ஒரு மனிதனின் உடல் வீழ்ந்து கிடக்கிறது; பல பசுக்கள் அந்த உடலைச் சூழ்ந்து கொண்டு நின்று நக்கி விடுகின்றன. சில பசுக்களின் கண்களில் சொல்லில் வாராத சோகத்தால் நீர் பொழிகின்றது.

''ஓ! இவன் அநேகமாக இந்தப் பசுக்களை மேய்க்கும் இடையனாக இருக்க வேண்டும். இவன் ஏன் படுத்துக் கிடக்கிறான்? ஒருவேளை இறந்து விட்டானோ? ஆம்! அப்படித்தான் இருக்க வேண்டும். இந்தப் பசுக்கள் எல்லாம் இவன் உடலை நக்கி விடும்போது இவன் பேசாமல் இருக்கிறானே. சில பசுக்களின் கண்களில் கண்ணீர்! எனவே இவன் இந்தப் பசுக்களைக் கொடுமைப் படுத்தாது நன்கு கவனித்து மேய்த்து இருப்பான்போல் இருக்கிறது. எனவே தான் அவை அவனை நன்றியுடன் நக்கி விடுகின்றன. அவனது பிரிவாற்றாமல் கண்ணீர் விடுகின்றன'' என்றெல்லாம் அந்த யோகியின் சிந்தையில் எண்ணங்கள் ஓடலாயின.

''ஐயோ! பாவம்!'' அருளாளர் அல்லவா? அவரது உள்ளத்தில் இரக்கம் பொங்கி எழுந்தது.

''இவன் உயிர்பெற்று எழுந்தாலொழிய இந்தப் பசுக்களின் துயரம் நீங்காது. இப்பசுக்களை அப்படிப் பாதுகாத்திருக்கிறான் இவன். ஐந்தறிவு விலங்குகளுக்கு எப்படி ஆறுதல் சொல்வது?'' யோசிக்கிறார் யோகி.

அவருடன் தான் அணிமாதி சித்திகள் கைகட்டி ஏவல் புரிவதற்கு காத்துக் கொண்டு பின் தொடர்கின்றனவே. அதில் ஒன்றுதானே பரகாயப் பிரவேசம்; கூடுவிட்டுக் கூடு பாய்தல். அதற்கு உடம்பில் உள்ள பத்து வாயுக்களில் ஒன்றை எழுப்பி விட்டால் போதும்! உடனே மளமளவென்று செயலை மேற்கொள்கிறார் யோகி. உரிய வாயுவை எழுப்பி தம் உடலிலிருந்து இறந்த இடையனின் உடலில் புகுந்தார். அப்போது அவரது எண்ணம் இது தற்காலிகமான ஏற்பாடு என்பதுதான். அதாவது இறந்த வன் உடலில் எழுந்தால் இந்தப் பசுக்கள் துயர்நீங்கி மகிழும். மாலையானவுடன் இவற்றை ஊருக்குள் ஓட்டிச் சென்று அவையவை சேர வேண்டிய வீட்டில் சேர்த்து விட்டு, தாம் பழைய தம் உடலில் புகுந்து தம் பொதிகைப் பயணத்தை மேற்கொள்ளலாம். இதுதான் யோகியின் எண்ணம். எனவே இடையனின் உடலில் புகுந்த உடன் முதல் வேலையாக தம் உடலை ஓரிடத்தில் பத்திரமாக வைத்துப் பாதுகாப்பு செய்துவிட்டு வந்தார்.

இறந்த அந்த இடையன் பெயர் மூலன். அவன் உடலில் இவர்! இதுவரை மூலன் என்று ஒருமையில் கூறிவந்த சேக்கிழார் இப்போது மூலன் உடலில் இருப்பது யோகி என்பதால் மரியாதையுடன் மூலர் என்று கூறுகிறார்.

பாடல்களைப் பார்ப்போம்.

இவன் உயிர்பெற்று எழிலன்றி ஆக்கள்இடர்
நீங்கா என்று
அவனுடலில் தம்முயிரை அடைவிக்க அருள்புரியும்
தவமுனிவர் தம்முடம்பிற்கு அரண்செய்து
தாம்முயன்றப்
பவனவழி அவனுடலில் தம்முயிரைப் பாய்த்தினார்

(பவன வழி - காற்று வழி)

பாய்த்தியபின் திருமூலராய் எழலும் பசுக்கள்
எல்லாம்
நாத்தழும்ப நக்கிமோந்து அணைந்துகனைப்
பொடுநயந்து
வாய்த்தெழுந்த களிப்பினால் வாலெடுத்துத்
துள்ளிப்பின்
நீத்த துயரினவாகி நிரந்து போய் மேய்ந்தனவால்.

பசுக்களைப் பொறுத்தவரை இறந்த மூலன் என்னும் இடையன் எழுந்துவிட்டான்! அவற்றிற்கு ஒரே மகிழ்ச்சி! துள்ளிக் குதித்து கனைத்து மீண்டும் மேயப் போய் விட்டன.

மாலை ஆயிற்று! திருமூலர் பசுக்களை சாத்தனூர்க்கு ஓட்டிச் சென்றார். அங்கே வந்தபின் தான், தாம் புகுந்த உடலில் வாழ்ந்த இடையனுடைய பெயர் மூலன் என்பது தெரிகிறது. ஏனென்றால் அங்கே ஊரார் எல்லாம் அவரை 'மூலா! மூலா' என்றே அழைத்தனர்.

அங்கே மாடுகளை ஓட்டிச் சென்றவர் மாட்டிக் கொண்டார் இடையன் மூலனின் மனைவியிடம்! அவளிடமிருந்து தப்பி மீள்வதற்குள் இவருக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. அவள் இவரை இறந்த மூலன் என்றே எண்ணிக் கொண்டு தொடர்கிறாள். இவர் 'ஐயோ! இதென்ன வம்பு!' என்று விலகுகிறார்.

ஊர்ப் பெரியவர்களிடம் அவள் முறையிட்டாள். ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி இவன் பழைய மூலன் அல்லன்; மிகப் பெரிய யோகி என்று கண்டு நடந்ததை அவர்மூலம் கேட்டறிந்து, மூலனின் மனைவிக்கு அமைதி கூறி அனுப்பி வைத்தார்கள். இரவு அந்த ஊரில் இருந்த பொதுச் சத்திரத்தில் தங்கி மறுநாள் வைகறையில் பசுகள் நேற்று வந்த வழியிலேயே திரும்பி தாம் முன் பாதுகாத்து வைத்த தமது உடலைத் தேடிப் பார்த்தால் அது அங்கே காணோம்! எப்படி இருக்கும் யோகிக்கு!

இங்கே இறைவன் விளையாடினான். ஓர் உடல் என்பது ஒரு பிறவி. நாம் நினைக்கும் ஒவ்வொரு அவாவிற்கும் ஒரு பிறவி என்பது நியதி.

அவாஎன்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்புஈனும் வித்து.

என்பது திருக்குறள். இதில் யார்க்கும் விதிவிலக்கு கிடையாது. அதனால்தான் 'எல்லா உயிர்க்கும்' என்றும் 'எஞ்ஞான்றும்' என்றும் கூறினார் வள்ளுவர். அவா தவறாது பிறப்பைக் கொடுத்துவிடும் என்ற இந்த நியதியை வள்ளுவர் மிகத் தெளிவாகக் காட்டுகிறார்.

இங்கே என்ன நடந்தது? பொதிகைக்குப் போக வேண்டிய யோகி நேராகப் பொதிகைக்குப் போயிருக் கலாம். இடையில் சாத்தனூரில் இறந்த இடையன் மூலனைப் பார்த்தபோது அவன் விதி முடிந்துவிட்டது. அவ்வளவு தான் என்று போயிருக்கலாம். அப்புறம், பசுக்களின் துயர் தீர்வது எப்படி? ஏன், இவருக்குத்தான் எவற்றையும் எல்லாரையும் வசியம் செய்யும் வசித்துவம் என்ற சித்தி தெரியுமே! அதுவும் அணிமாதி சித்திகள் எட்டில் ஒன்றுதானே! அதைப் பயன்படுத்தி பசுக்களை வயப்படுத்தி நீர்காட்டி, நிழல்காட்டி, பசிக்குப் பயிர்காட்டி

மேய விட்டு விட்டுத் தம் பயணத்தை மேற்கொண்டிருக் கலாமே! ஆனால் யோகிக்கு பசுக்களுக்கு இயல்பான உண்மையான மகிழ்ச்சி ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறார். காரணம், ஐந்தறிவே உடையவையானா லும் அந்தப் பசுக்கள் அந்த இடையன் மூலனிடம் காட்டிய நன்றி உணர்வு அவரது உள்ளத்தை நெகிழ்த்தி விடுகிறது. எனவே கண்கட்டு வித்தை எல்லாம் வேண்டாம்! அவற்றிற்கு அவை வேண்டும் மூலனையே காட்டி விடுவோம் என்று விரும்புகிறார். சரி! யார் விரும்பினாலும் எப்படி விரும்பினாலும் விருப்பம் விருப்பம் தானே!

கடவுளின் நியதி ஒரு விருப்பத்திற்கு ஒரு பிறவி! பிறவி என்பது என்ன? ஓர் உடல். யோகிக்கு இப்போது அவர் புகுந்துள்ள மூலனின் உடல் ஒரு புதுப் பிறவி போல. அந்த உடலில் அவரது விருப்பம் அனுபவமாகக் கழிந்தபின் அவரை ஆட்கொள்ளலாம் என்பது கடவுளின் திருவுள்ளம். அது மட்டுமல்ல. உயர்ந்த நோக்கத்திற்காக அந்த யோகியே ஏற்படுத்திக் கொண்ட புதுப்பிறவி இது. இது அதைவிட உயர்ந்த நோக்கத்திற்குப் பயன்படட்டும் என்பது கடவுள் எண்ணம்.

அதாவது இங்கே பசுக்களின் துயர்தீர வேண்டும் என்பது யோகியின் விருப்பம். இறைவன் எண்ணுகிறான் உயிர்களும் பசுக்களே. பசு என்றால் கட்டப்பட்டவை என்று பொருள். ‘பச்’ என்ற தாதுவிலிருந்து உருவாகிய சொல் பசு. ‘பச்’ என்றால் வடமொழியில் கட்டு என்று பொருள். தமிழில் பசுவிற்கு ஆ என்று ஒரு சொல் உண்டு. (ஆவின் பால் என்பதை நோக்குக.)

இந்தப் பசுக்களின் துயர்நீக்க எண்ணினாயே! உயிர்களாகிய பசுக்கள் பலப்பல பிறவிகளை எடுத்து துயரப்படுகின்றனவே! அவற்றின் துயரை எப்படிக் களைவது! இந்தப் பசுக்களின் துயரத்தை நீக்கியது

போலவே உயிர்களாகிய பசுக்களின் பிறவித் துயரை நீக்கி இன்ப நிறைவை ஏற்படுத்து! உனக்குத்தான் ஆகமத்தில் தேர்ச்சி உண்டே! ஆகமம் என்பது என்ன? ஆ - உயிராகிய பசு; கமம் - நிறைவு. உயிர்களுக்குப் பேரா இயற்கைப் பேரின்ப நிறைவைக் கொடுப்பது தானே ஆகமம்! இதுதானே தமிழ்ச் சொல்லான ஆகமத்தின் பொருள்! எனவே ஆகமத்தைத் தமிழில் இதே உடலில் இருந்து உலகினர்க்கு உதவு! அதுதான் பொருத்தமான செயல். எனவே உனக்கு பழைய உடல் தேவையில்லை. அது கழிந்தது கழிந்ததாகவே போகட்டும்' என்று இறைவன் யோகியின் பழைய உடலை மறைத்து விட்டான்.

மறைப்பது இறைவனது ஐந்தொழில்களில் ஒன் றல்லவா? திருநீலகண்ட நாயனாரின் ஓட்டை மறைத்தான். அமர்நீதி நாயனாரின் கோவணத்தை மறைத்தான். அவ்வப்போது அருளாளர்க்குக் காட்சி கொடுத்துக் கொண்டிருக்கும்போதே மறைந்து விடுவான். தான் ஒரு அருட்பெரும் சோதியாக இருந்து கொண்டே நம் கண்ணுக்குத் தெரியாமல் கரக்கும் கள்வனல்லவா அவன்! 'கருவார்ச் சோதியில் கரந்த கள்ளமும்' என்பாரே மணிவாசகர். இங்கேயும் அவனது தொழில் நேர்த்தியைக் காட்டி யோகியின் அந்தப் பழைய உடலை மறைத்து விட்டான்.

யோகிக்கு திகைப்பு! அவரது திகைப்பு அப்படியே இருக்கட்டும்.

ஆகமத்தை இறைவன் எந்த மொழியில் அருளினான்

இங்கே ஒரு கேள்வியைப் பார்ப்போம். ஆகமத்தைத் தமிழில் வகுக்க வேண்டும் என்றால் ஆகமம் இதற்கு முன் எந்த மொழியில் சொல்லப்பட்டது?

"மன்னு மாமலை மகேந்திர மதனில்
சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்"

என்று பாடுகிறார் மணிவாசகர். எனவே யோகிகளுக்கு ஆகமத்தை இறைவன்தான் உபதேசித்தான். எந்த மொழியில்?

இங்கே ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். மொழி என்பது ஒரு கருவி. கருவியின் துணையில்லாமல் செயல்பட முடியாதவர்கள் நாம். கருவி கரணங்களின் துணை வேண்டாதவன் இறைவன். அதனால் தான் ஆலமர நீழலில் தென்முகக் கடவுளாய் சனகாதியர் நால்வருக்கு உபதேசம் செய்தபோது இறைவன் மௌன உபதேசம் செய்ததாக வரலாறு கூறுகிறது.

"நன்னல மைந்தர்காள் ஞான போதகம்
சொன்னடை யன்று"

என்பது கந்த புராண வாக்கு.

"சொல்லாமல் சொன்னவரை நினையாமல் நினைந்து பவத்தொடக்கை வெல்வாம்" என்பது திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதியார் வாக்கு. இன்னும் 'மோன ஞானமது உணர்த்தியே' என்று பாடுவார் தாயுமானவர்.

"சொற்பிரிவு இலாத மறை பாடி நடமாடுவர்" என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

'சொல்லே அதற்கு உரிய எழுத்துக்களே இல்லாத மறையை இறைவன் பாடியருளினான்' என்பது சம்பந்தர் பாடலின் பொருள்.

ஒரு தலைவனும் தலைவியும் சந்தித்துக் கொள் கிறார்கள்; தலைவியின் இசைவு தலைவனுக்கும், தலைவனது இசைவு தலைவிக்கும் மொழியால் பேசித் தெரிவிப்பதில்லை. கண்ணும் கண்ணும் பேசிக் கொள்ளுமாம்; மொழியால் அல்ல - பார்வையால்.

"கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல" என்பார் திருவள்ளுவர்.

இதுதான் தமிழர் நாகரிகம்! கண்ணின் மூலம் இதயங்கள் பேசிக் கொள்ளும். அங்கே வாய்ச் சொற்களுக்கு வேலை இல்லை. தற்காலத்தில்தான் மேனாட்டு கொச்சை வழக்கம் நம்மிடம் புகுந்து 'ஐ லவ் யூ' என்று இவளும், 'ஐ லவ் யூ டூ' என்று அவனும் கூறிக் கூடி கடைசியில் 'டூ' விட்டுப் பிரிந்து போகிறார்கள். தமிழன் காதலை இதயத்தில் வைத்தான்; எனவே அது இதயம் உள்ளவரை நின்றது. மேனாட்டான் காதலை வாய்ச் சொல்லில் வைத்தான்; எனவே அது காற்றோடு கரைந்து போயிற்று.

இனி, உலகியலில் காதல் செய்யும் தலைவனுக்கும் தலைவிக்குமே மொழியாகிய கருவியின் உதவி தேவைப்படவில்லையே! அப்புறம், கருவி கரணங்களே வேண்டாத இறைவனுக்கு மொழி என்ற கருவி ஏன்?

மோன மொழியில் ஆகமம்

எனவே இறைவன் யோகியர்க்கு ஆகமத்தை அருளியது மொழியால் அல்ல. அது அவர்க்கு மோனமாக உணர்த்தப்பட்டது.

எனவே மோனமாக தாம் முன்னர் யோகியர்க்கு மட்டுமே உணர்த்திய ஆகமத்தை எல்லோருக்கும் புரிய தமிழில் வகுக்க சரியான சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது என்று எண்ணியே யோகியின் முந்தைய உடலை இறைவன் மறைத்தான்.

வரலாறு தொடர்கிறது

தம் பழைய உடலை வைத்த இடத்தில் காணாது திகைக்கிறார் கயிலாயத்து யோகி. சுற்றுமுற்றும் தேடிப்

பார்க்கிறார். எங்கும் கிடைக்கவில்லை. என்ன செய்வது என்று புரியாமல் விழிக்கிறார். யோகியர்க்கு ஞானக் கண் பார்வை உண்டு. (Clair voyance) கிளேர் வாயன்ஸ் என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். ஆழ்நிலைத் தியானத்தில் மூழ்கினார்; மூழ்கி ஞானக் கண்ணினை விழிப்பித்தார். அந்த யோகக் காட்சியில் இறைவன் தாம் மோனத்தில் உணர்த்திய ஆகமத்தைத் தமிழால் வகுக்க தம்மைப் பணி கொள்கிறான் என்பதை, அந்த திருவருள் குறிப்பை எண்ணி அமைதியுற்றே அந்த இறைபணிக்கே தம்மை அர்ப்பணித்து அந்த இடத்திலேயே ஓர் அரச மரத்தடியில் யோகத்தில் அமர்ந்து விடுகிறார். இதை அவர் வாயாலேயே கூறுகிறார். பாடல் வருமாறு:

''சேர்ந்திருந்தேன் சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந்தேன் சிவன் ஆவடு தண்துறை
சேர்ந்திருந்தேன் சிவபோதியின் நீழலில்
சேர்ந்திருந்தேன் சிவன்நாமங்கள் ஓதியே''

(போதி - அரசமரம்)

இப்படி அரச மரத்தடியில் அமர்ந்து ஆண்டுக்கொரு பாடலாக, மூவாயிரம் பாடல்களாக அருளியதுதான் திருமந்திரம் என்கிறார் சேக்கிழார். மூவாயிரம் ஆண்டா? எப்படி? என சந்தேகம் எழலாம். இதை வேறிடத்தில் ஆராய்வோம்.

இந்த வரலாற்றையே மிகச் சுருக்கி,

''நந்தி அருளாலே மூலனை நாடினோம்

....

நந்தி வழிகாட்ட நானிருந்தேனே''

என்று பாடினார் என்பதை முன்னரே கண்டோம்.

இனி, இந்த வரலாற்றின்படி திருமந்திரத்தை ஆசிரியர் அருளியபோது அவரது பெயர் திருமூலர் என்பதும்

அதற்குமுன்னர் கயிலாயத்து யோகியாக வந்தபோது அவர் பெயர் சுந்தரநாதன் என்பதும் அறியக் கிடக்கின்றது.

ஆக்கியோன் பெயர்

எனவே ஆக்கியோன் பெயர் என்ன என்று கேட்டால் இந்நூலைப் பொறுத்தவரை சுந்தரநாதன் என்கிற திருமூலர் என்று கூறுவதே மிகச் சரியானதாக இருக்கும். ஆனால் நமது முன்னோர்கள் சுந்தரநாதன் என்பதை அதிகம் வற்புறுத்துவதில்லை. திருமூலர் என்பதையே கொண்டார்கள். சிலர் சுந்தரனாக இருந்து பெற்ற நாதன் என்ற பட்டத்தை பின்னே ஒரு காரணத்தால் அல்லது நிகழ்வால் அமைந்த திருமூலர் என்ற பெயரொடும் கூட்டி திருமூலநாதர் என்றும் அழைக்கின்றனர்.

பெயர் சிறப்பு

இந்தப் பெயரில் ஒரு சிறப்பு உண்டு. இந்தப் பெயர் சுந்தர நாதருக்கு எப்படி வந்தது? 'மூலன் என்னும் இடையனின் உடலில் சுந்தரநாதர் புகுந்தமையால்' என்பதை வரலாற்றில் கண்டோம். சுந்தரநாதரின் எண்ணத்திற்கு மாறாக இறைவன் மூலன் என்னும் உடலிலேயே அவரை இருக்கச் செய்து ஆகமத்தைத் தமிழில் அருளச் செய்தான் என்றும் பார்த்தோம். இறைவன் ஏன் மூலன் என்கிற இடையன் உடலில் தங்கச் செய்தார் என்பதிலும் ஒரு திருவருட் குறிப்பு உண்டு.

அதாவது எல்லா ஆகமங்களுக்கும் இதுவே மூலம்; மொழிபெயர்ப்பல்ல. பின் வருகிற சைவ சித்தாந்த சாத்திரங்கள் எல்லாவற்றிற்கும் இதுவே மூலம்; பின் வருகிற பன்னிரு திருமுறைகளுக்கும் இதுவே மூலம். பின் வருகிற திருப்புகழுக்கும் இதுவே மூலம். பின்வருகிற தாயுமானவர் பாடல்களுக்கும் இதுவே மூலம்; பின் வருகிற வள்ளலாரின் திருவருட்பாவிற்கும் இதுவே மூலம்; பின்வருகிற சமய நூல் கருத்துகளுக்கு எல்லாம் இதுவே

மூலம் என்ற குறிப்பு தோன்ற இறைவன் மூலன் என்னும் இப்பெயருடைய இடையனின் உடலில், சுந்தரநாதரைப் புகுத்தியருளினான் என்பது நுனித்து உணரவேண்டிய உண்மை எனலாம்.

நூல் வந்த வழி

இதுவரை ஆக்கியோன் பெயர் என்கிற சிறப்புப் பாயிர உறுப்பை திருமந்திரம் என்ற இந்நூலைப் பொறுத்தவரை என்ன என்று காரண காரிய விளக்கங்களோடு பார்த்தோம். இனி வழி என்கிற சிறப்புப் பாயிர உறுப்பைக் காண்போம்.

நூல்வகை மூன்று

வழி என்பது நூல் வந்த வழியைக் குறிக்கும். ஒருவர் ஒரு பொருள்பற்றி ஒரு நூலை எழுதுகிறார் என்று வைப்போம். அந்த நூலை அவரே முதன்முதலாக எழுதி இருக்கலாம். இன்றேல், வேறு ஒரு நூலை இன்னும் வேண்டும் என்று தோன்றுகிற சில விவரங்களைக் கூட்டி விரிவாக்கி நூலாக்கலாம். அன்றி ஒரு பொருள் பற்றி ஏற்கெனவே வெளிவந்துவிட்ட ஓர் அற்புதமான நூலில் உள்ள விஷயங்கள் சிலவற்றைக் காலத்திற்கு ஏற்ப மாற்றியமைத்து விட்டால் சரிவர அமையும். எனவே மூலக் கருத்தைச் சிதைத்துவிடாமல் காலத்திற்கு ஏற்ப சிற்சில மாற்றங்களை அமைத்து புதுநூல் ஒன்று எழுதுவதும் உண்டு. இப்படி நூற்களில் மூன்று வகை உண்டு.

முதனூல்

முதலாவது சிந்தனை அடிப்படையிலேயே முதலாவது ஆவதால் அதற்கு முதனூல் என்று பெயர். இதற்கு சொந் தச் சிந்தனை அவசியம். மனிதர்களாகிய நம்முடையது எல்லாம் சொந்தச் சிந்தனை அல்ல. பிறர் சிந்தித்து

வழிகாட்டியதை நாம் தொடர்கிறோம். நம்முடைய சிந்தனையில் பலவேறு முந்தைய சிந்தனைகளின் தாக்கம் இல்லாமல் இராது.

சொந்தச் சிந்தனை என்பது இறைவன் ஒருவனுக்கே இயலும். நமது சிந்தனைகள் எல்லாம் வினையின் வயப்பட்டு மங்கும்; மறையும்; சரியான திசையில் முழுமையாகச் செல்லும் என உறுதி கூற இயலாது. இறைவனோ வினையினால் கட்டுண்ணாதவன். எனவே அவனது சிந்தை தூயதாய், முழுமையானதாய் இருக்கும். அந்த அறிவே விளங்கிய அறிவு. அதனைக் கொண்டு இறைவன் உதவுவது முதனூல். அதனால்தான், நன்னூல்

''வினையின் நீங்கிய விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதனூலாகும்''

என்று பாடியது.

இறைவன் ஒரு நூலை எழுதுவானா? எழுதினால் எந்த மொழியில் எழுதுவான்? முன்னே நாம் பார்த்த அந்த பழைய கேள்வி எழும். அதற்கு விடையும் முன்னே கூறப் பட்ட பழைய அதே விடைதான். அதாவது இறைவன் மொழி என்ற கருவியைப் பயன்படுத்துவதில்லை. தக்க சான்றோர்க்கு அவன் மோனமாக உணர்த்த, அவர்கள் அதனை மொழி வடிவில் நூலாக்கித் தருவார்கள். அதுவே முதனூலாகும்.

வழி நூல்

இனி, அடுத்த நூல் வகையைப் பார்ப்போம். இரண்டாவது வகை வழி நூல் என்று பெயர் பெறும். அதாவது முன்னூலில் உள்ளவற்றை எவ்வகையிலும் சிதைக்காமல் அதற்கு மேலும் வேண்டுவன கூட்டி உரைப்பது வழிநூல். எனவே தான்,

'முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து
பின்னோன் வேண்டும் விகற்பம் கூறி
அழியா மரபினது வழிநூலாகும்'

என்று நன்னூல் பாடியது.

சார்புநூல் (அ) புடைநூல்

இதற்கு அடுத்த மூன்றாவது வகை, சார்பு நூல் அல்லது புடைநூல் எனப் பெயர் பெறும். முன்னரே கூறியபடி முதனூலின் மூலப் பொருளின் அடிப்படையை அப்படியே வைத்துக் கொண்டு காலத்திற்கேற்ப அதில் சிற்சில மாற்றங்களைச் செய்தமைப்பது புடைநூல் அல்லது சார்புநூல் எனப்படும். எனவேதான்,

இருவர்நூற்கும் ஒருசிறை தொடங்கித்
திரிபுவேறு உடையது புடைநூலாகும்

என்று நன்னூல் பாடியது.

திருமந்திரம் முதனூல்

இம்மூன்று வகையில் 'திருமந்திரம்' எந்த வகையைச் சேர்ந்தது? இதைக் காண்போம். இதுபற்றி சேக்கிழார் கூறுவது என்ன என்று பார்ப்போம்.

தண்ணிலவார் சடையார்தாம் தந்தஆ கமப்பொருளை
மண்ணின்மிசைத் திருமூலர் வாக்கினால்
தமிழ்வகுப்பக்
கண்ணியஅத் திருவருளால் அவ்வுடலைக் கரப்பிக்க
எண்ணிறைந்த உணர்வுடையார் ஈசர்அருள் என
உணர்ந்தார்

இந்தப் பாடலில் இறைவன் தந்த ஆகமப் பொருளை திருமூலர் மூலம் மண்ணின்மிசை தமிழால் வகுக்க திருமூலர் எண்ணவில்லை; இறை திருவருள் எண்ணிய

தாம். இதனை 'கண்ணிய அத்திருவருள்' என்று சேக்கிழார் குறிப்பிடுகிறார். கண்ணிய என்றால் கருதிய என்று பொருள். எனவே திருவருள் கருதிச் செய்தது இது என்பது புலனாகிறது. இறைவன் திருமூலர்க்கு மோனமாய் உணர்த்த திருமூலர் தமிழில் திருமந்திரத்தை அருளினார் என்பதால் இது முனைவனாகிய இறைவன் திருமூலர் மூலம் அருளிய முதனூலாகும் என்பது தெளிவாகிறது. முதனூல் என்பதற்கு முன்னே கூறிய இலக்கணத்திற்கு இது ஒத்து வருவது காண்க. அதாவது இறைவன் மோனமாகத் தான் அருளாளர்க்கு உணர்த்துவான்; மொழியால் அல்ல. அருளாளர்கள் சிந்தையில் உணர்ந்ததை மொழி செய்த மைப்பது முதனூல் என்று கண்டோமல்லவா? அதுபோல மோனமாய் இறைவன் திருமூலர்க்கு உணர்த்த அதை சிந்தை செய்து திருமந்திர நூலாக தமிழில் வகுத்தருளினார். எனவே இத்திருமந்திர நூல் முதனூலே. இதனைத் திருமூலரே தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"அந்தி மதிபுனை அரனடி நாடொறும்
சிந்தைசெய்து ஆகமம் செப்பல் உற்றேனே"

இங்கே சிவனடியைச் சிந்தை செய்து ஆகமத்தை சொன்னேன் என்று கூறுவதால், இது வேறு எந்த நூலையும் பார்த்து எழுதியதல்ல என்பது விளங்குகிறது. அடுத்து இறைவன்தான் தன் வழியாக இத்தமிழாகமமான திருமந்திரத்தைக் கூறினான் என்பதை 'செப்பினேன்' என்று கூறாமல் 'செப்பலுற்றேன்' என்று கூறியதால் தெரிவித்தார். அதாவது செப்பியது நானல்ல; என்னைச் செப்பும்படிச் செய்தான்; அதன்படி நான் செப்பலுற்றேன் என்பது பாடலின் கருத்து.

அப்படியானால் தமிழில் அமைந்த தமிழாகமமாகிய திருமந்திரம் என்பது முதனூல் வகையைச் சேர்ந்தது என்று திருமூலரே சொல்லிவிட்டார்.

வடமொழி ஆகமம்

அப்படியும் சில பேர்களுக்கு சந்தேகம் தீராது. இறைவன் மோனமாக ஆகமத்தைத் திருமூலருக்கு உணர்த்தி தமிழில் திருமந்திரமாக வெளியிட்டதுபோல், வடமொழி பேசும் யோகியர் சிலர்க்கு மோனமாக உணர்த்தி ஆகமத்தை வடமொழியில் முன்னே வெளி யிட்டிருக்கலாம் அல்லவா? ஏனென்றால் தற்போது ஆகமங்களை வடமொழியில் தானே சிவாச்சாரியார்கள் பயிற்சி செய்து ஓதிக் கொண்டிருக்கிறார்கள்?

இதுபற்றி நன்கு அறிய வேண்டுமானால் வடமொழி யில் உள்ள ஆகமங்களின் காலம் எது என்பதை அறிய வேண்டும்.

"சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்" என்னும் புத்தகம் டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம் என்பவரால் எழுதப்பெற்று சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளது. அதில் 'சிவாகமங்களின் தோற்றம்' என்ற உள் தலைப்பில் பக்கம் 23-இல் கொடுக்கப்பட்டவற்றைப் பார்ப்போம்.

"சிவாகமங்களில் ஏகான்மவாதமும், பௌத்தமும், சமண முதலிய சமயக் கருத்துக்களும் மறுத்து ஒதுக்கப் படுவதைக் காணும் அறிஞர்கள் சிலர், சிவாகமங்கள் ஆதிசங்கரரின் காலத்திற்குப் பிற்பட்டு இடைக்காலத்தில் தோன்றியவையாகவே இருக்க வேண்டும் எனக் கூறுகின்றனர்."

இப்படி எழுதிவிட்டு ஆசிரியர் இதை மறுப்பதாக ஒரு கருத்தைக் கூறுகிறார். அந்தக் கருத்து அவரது சொந்தக் கருத்து என்று விட்டு விடுவோம். நமக்கு வேண்டியது சிவாகமங்களில் ஏகான்மவாதமும், பௌத்தமும் கூறப்பட்டு அவை மறுக்கப்படுகின்றன என்கிற செய்திதான்.

ஏகான்ம வாதத்தை இயற்றியவர் ஆதிசங்கரர். அவர் கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்பது உரிய ஆதாரங்களால் உறுதி ஆகிய உண்மை. எனவே வட மொழி சிவாகமங்களின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண் டிற்குப் பின்னர்தான் என்பது தெளிவாக புலனாகிறது.

இதை மேற்படி நூலின் ஆசிரியர் குருவாக வணங்கும் பாம்பன் சுவாமிகளும் கூறுகிறார். அவர் ஆகமங் களையும், வேதங்களையும், உபநிடதங்களையும் கரைத்துக் குடித்தவர். ‘‘என் கண்ணும் கருத்தும் நுழையாத நூலில்லை’’ என்று அவரே கூறி இருக்கிறார். அவர் தமது ‘தகராலய ரகசிய உரையில்’ ‘நூலாசிரியரது உரைப் பாயிரம்’ என்ற பகுதியில் பக்கம் 41இல் இப்படிக் கூறியிருக்கிறார்:

‘‘வியாசர் முதலிய இருடிகளையும் அவர்கள் இயற்றிய நூல்களையும் பிரதம ஆகமமான காமிகம் எடுத்துக் கழறியாங்கு பௌத்தம், ஆர்ஹதம் (சமணம்) என்னும் மதங்களையும் அது கழறுகின்றமையால் எல்லா ஆகமங்களும் - அவ்விருடிகள் நூல்களாயுள்ள அனைத் திற்கும், அப்பௌத்த சமண ஆகமங்கட்கும் பின்னர்த் தோன்றியுள்ளன எனத் துணிதல் ஏற்புடைத்தாகின்றது.’’

எனவே வேத வியாசருக்குப் பின்னதே வட மொழி ஆகமம் என்றால் வேத வியாசரின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்று ‘இந்திய தத்துவங்கள்’ என்ற நூல் கூறுவதால் வடமொழி ஆகமங்களின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின்னதே என்பது உறுதியாகிறது.

மேற்படி ‘சைவ ஆகமங்கள் ஓர் அறிமுகம்’ என்ற நூலாசிரியரே பக்கம் 83-84இல் தம்மை மறந்து இதைக் கூறிவிடுகிறார். அவர் அங்கே சொல்வதைப் பார்ப்போம்:

"…. அக்காலத்தில் சிவாசாரியப் பெருமக்களும் கிரியைகளில் காட்டிய அக்கறையையும் ஊக்கத்தையும் ஞானநெறியில் காட்டத் தவறிவிட்டனர். பெரும்பாலான ஆகமங்களில் ஞானபாதப் பகுதி கிடைக்காமல் இருப் பதற்கு இவர்களது புறக்கணிப்பை முக்கிய காரணமாகக் கூறலாம். கி.பி. எட்டாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை சிவாகமங்கள் புதையுண்ட பொற்குவியல்கள் போன்றே இருந்தன. எட்டாம் நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் தான் தமிழ் நாட்டையும் காஷ்மீரத்தையும் சார்ந்த பெருமக்கள் பலர் சிவாகமங்களின் உட்பொருளை விளக்கிப் பேருரைகள் படைத்து அவற்றின் பெருமையை மீண்டும் நிலைநாட்டினர்."

வடமொழி ஆகமம் தமிழாகம திருமந்திரத்திற்கு பின்னது

மேலே பாம்பன் சுவாமிகள் கூறியவற்றையும் இங்கே இவர் கூறுவனவற்றையும் சேர்த்து வைத்துப் பார்க்கும் நடுநிலையாளர்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின் வடமொழி ஆகமங்கள் தோன்றி அதற்கு உரைகள் கி.பி. எட்டாம் நூற்றாண்டிலிருந்து பதினைந்தாம் நூற்றாண்டு வரை அமைந்தன என்பதை தெளிவாக உறுதி செய்யலாம்.

எனவே வடமொழி ஆகமங்கள் கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தான் தோன்றியவை என்பதும் திருமூலரின் காலத்தை நிறுவிய அறிஞர்கள் கூறும் கால எல்லையின் அதிகபட்ச மேல் எல்லையே கி.பி. 5ஆம் நூற்றாண்டுதான் என்பதும் ஆகிய இவ்விரண்டு உண்மைகளையும் நோக் கிப் பார்க்கும் போது திருமூலர் அருளிய தமிழாகமமான 'திருமந்திர' நூலே இறைவன் திருமூலர் மூலம் அருளிய ஆகமத்தைப் பற்றிய முதனூல் என்பது நன்கு உறுதியாகிறது.

ஆகவே திருமந்திர நூலின் வழியைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் அது முதனூல் என்பதே மறுக்க வொண்ணாத உண்மை.

நூலின் எல்லை

அடுத்து திருமந்திர நூல் வழங்கும் எல்லை எது எனக் கூறவேண்டும். சிறப்புப் பாயிரத்தின் எட்டு உறுப்புக் களில் எல்லையும் ஒன்றல்லவா? அதன்படி திருமந்திர நூல் வழங்கும் எல்லை தமிழ்கூறும் நல்லுலகம் என்று கொள்ள வேண்டும். தமிழ்கூறும் நல்லுலகம் என்பது வட வேங்கடம் - தென்குமரி ஆயிடை அமைந்த தமிழகம் மட்டும் அல்ல. இன்று தமிழர்கள் உலகத்தின் பல்வேறு மூலைகளில் வாழ்கிறார்கள். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், கனடா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, மொரீஷியஸ் என்று பல்வேறு உலக நாடுகளில் எல்லாம் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதுடன் அங்கங்கே தமிழ்ச் சங்கங்களையும் வைத்து நடத்துகின்றனர். கணினியில் தமிழ் இணையத்தை அமைத்தும், அதற்கென தமிழ் இணையப் பல்கலைக் கழகம் அமைத்தும் நடத்துவது தமிழகமல்ல; மலேசியா.

தென் ஆப்பிரிக்காவில் திரு சங்கர் என்ற அரசு ஆடிட்டர் திருமந்திரத்தை ஆங்கில மொழியாக்கம் செய்து வருகிறார். ஹவாய்த் தீவில் நடைபெறும் சைவசித்தாந்த சர்ச்சின் ஆதாரக் கல்வியே திருமந்திரம் தான்.

சீனாவில் சிவன் கோவில் ஒன்று உள்ளதாகவும் அங்கே ஒரு தமிழ்க் கல்வெட்டு இருப்பதாகவும் அங்கே உள்ள சிற்பங்களில் ஒன்று திருமூலர் யோகத்தில் அமர்ந்துள்ள நிலையும் அருகில் திருவாவடுதுறை காட்சியும் உள்ளது என்று டாக்டர் ஜான்கய் என்கிற சீன

அறிஞர் ஒரு விழாவில் கூறியதாக 16-12-90ஆம் நாளிட்ட தினமலர் நாளிதழ் செய்தி ஒன்று கூறுகின்றது.

எனவே திருமந்திரத்தின் எல்லை கூறப் புகுவோமானால் உலகளாவிய தமிழ்கூறும் நல்லுலகமே அதன் எல்லை எனக் கூறுவதே சரியாகும்.

நூற்பெயர்

அடுத்து சிறப்புப் பாயிரத்தின் எட்டு உறுப்புக்களில் ஒன்றான நூற்பெயரைப் பார்க்க வேண்டும்.

இதை ஆராய்வோமானால் திருமூலர் தாம் எழுதிய நூலிற்கு என்ன பெயர் வைத்தார் என்பதைப் பார்ப்பதே பொருத்தமாக இருக்கும். ஏனெனில் நூலாசிரியர் தவிர பிறர் நூலின் பெயரை என்னவாகக் கூறுகிறார்கள் என்பதைவிட நூலாசிரியர் தம் நூலுக்கு வைக்கும் பெயரே முதன்மையாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியது. அப்படிப் பார்த்தோமானால் திருமந்திரத்தில் வரும் ஒரு பாடல் நமக்கு உதவி செய்கிறது. பாடல் வருமாறு:

"பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னை
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடும் கூடி நின்று ஓதலுமாமே"

இது திருமூலர் தம் வரலாறு கூறுதல் என்ற தலைப்பில் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பதிப்பில் 64ஆம் பக்கத்தில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் திருமூலர் வரலாறு என்ற தலைப்பில் 86ஆம் பாடலாக பதிப்பிக்கப்பட்டிருக்கிறது.

இப்பாடலில் தாம் எழுதிய நூலின் பெயர் மந்திர மாலை; அதனை அன்பர்கள் உறைப்பொடும் கூடி நின்று ஓதுதல் வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். எனவே

இந்நூலின் பெயர் மந்திரமாலை என்பதே. இது தெய்வத் தன்மை வாய்ந்ததாய் இருத்தலால் திரு என்ற அடைமொழியைச் சேர்த்து திருமந்திரமாலை என்று பெரியோர் கூறினர். நாளாவட்டத்தில் திருமந்திரமாலை என்பது சுருங்கி 'திருமந்திரம்' என்றே அழைக்கப்பட்டது.

நூலின் பெயர் சதாசிவ ஆகமமா?

இல்லை; இந்த நூலின் பெயர் 'சதாசிவ ஆகமம்' என்று டாக்டர் சுப. அண்ணாமலை அவர்கள் பதிப்பித்த மூலநூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள். (ஆய்வு முன்னுரை பக். XLI) அவர் மேல் பாடலில் வரும் மந்திரமாலை என்பதை நூலின் பெயராகக் கொள்ளாமல் மந்திரமாலை என்பதன் பொருள் திருவைந்தெழுத்து என்பதாகும் என்று கூறுகிறார்.

திருவைந்தெழுத்து என்பது மந்திரம்; அவ்வளவுதான். அது எப்படி மந்திர மாலையாகும் என்பது பதிப்பாசிரியர் கூறினாரில்லை. மந்திர மாலை என்றால் பல மந்திரங்களைத் தொடுத்ததாக அல்லவா இருக்க வேண்டும். ஐந்தெழுத்து என்பது ஒரே மந்திரம்; ஒப்பற்ற மந்திரம். எனவே அந்தக் கருத்து நிரம்புமாறு இல்லை. அத்துடன், மந்திரம் என்பது ஜெபத்திற்கு உரியது. அது தனித்துச் செய்வது. கூடி நின்று ஓதுவதல்ல. ஆனால் பாடலில் 'மந்திரமாலை உறைப்பொடும் கூடி நின்று ஓதலுமாமே' என்று வருவதால் அது ஐந்தெழுத்து மந்திரமல்ல என்பது தெளிவாகிறது.

ஆனால் தற்காலத்தில் ஐந்தெழுத்து மந்திரத்தையும் சில சைவ மாநாடுகளில் கூட்டாக ஓதி கூட்டம் தொடங்கப் பெறுவதைப் பார்க்கிறோம். இது மந்திர விதிமுறைக்கு மாறானது என்றாலும் ஓரளவிற்கு ஏற்கலாம். எவ்வா றெனில் அங்கே சிவாய நம என்று ஐந்தெழுத்தின் மூலச் சிதைவுதான் ஓதப்படுகிறது. சிவயநம என்பதே மூல

ஐந்தெழுத்து. இது குருவினால் உபதேசிக்கப்பட்டு விதிப்படி தனித்தனியே அவரவர்களால் மெல்லிய உச்சரிப்பாக - ஐதுரை என்பர் - அப்படி செபிக்கப்பட வேண்டும். கூட்டங்களில் மூல ஐந்தெழுத்தின் போலியாக சிவாயநம என்று வகரம் நீட்டியதாக ஓதுவது பிழையன்று. எனவேதான் திருமுறைகளிலும் சிவாயநம என்றும், நமச்சிவாய என்றும் வெளிப்படக் கூறப்பட்டதே ஒழிய அவையெல்லாம் உண்மை மூல ஐந்தெழுத்துக்கள் ஆகா. திருமுறை ஆசிரியர்களின் கருத்து, மூல ஐந்தெழுத்து குருவினால் உபதேசிக்கப்பட வேண்டும் என்பதும், அதை வெளியே சொல்லக் கூடாது என்பதும், அதன் போலியாக வேண்டுமானால் அதனை நினைவுபடுத்துவதாக சிவாயநம என்றோ, நமச்சிவாய என்றோ கூறலாம் என்பதும் ஆம் எனக் கொள்க.

அப்படியே சிவாய நம என்று கூட்டத்தினர் ஓதினாலும், அது மந்திர செபம் என்று வேண்டுமானால் கூறலாமே ஒழிய அது மந்திர மாலை ஆவது எப்படி? மந்திரம் செபிக்கப்பட வேண்டியது. தோத்திரம் மாலையாக சாத்தப்படுவது. தோத்திரம் தான் மாலை எனப்படுமே ஒழிய மந்திரம் மாலையாகாது. மந்திரம் வேறு; தோத்திரம் வேறு. பல தோத்திரங்களைக் கூறினால் அது மாலையாகலாம். ஒரே மந்திரத்தை பலமுறை கூறுவதால் அது உருவேறும். மாலையாகாது. எனவே பாடலில் மந்திரமாலை என்பது ஐந்தெழுத்தைத் தான் குறிக்கும்; நூல் பெயரை அல்ல என்ற கருத்து உள்ளீடில்லாதது.

இனி நூலின் பெயர் 'சதாசிவ ஆகமம்' என்று எதனைக் கொண்டு கூறலாம் என்று ஒரு பாடல் அந்த ஆய்வு முன்னுரையில் சான்று காட்டப்படுகிறது. அது வருமாறு:

செப்பும் சதாசிவம் என்னும்இப்பேர் பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றும்
தப்பிலா மன்றில் தனிக்கூத்து கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம் இருந்தேனே

இப்பாடலில் சதாசிவம் என்பது நூலின் பெயர் என்று எங்கும் வரவில்லை. பாடல், இருந்தேனே என்று தன்னைப்பற்றிக் கூறுவதாக முடிகிறது. எனவே பேர் பெற்றும், தாள் பெற்றும், தனிக்கூத்துக் கண்டபின் எழுகோடி யுகம் இருந்தேனே என்று பொருள்கோள் செய்வதே முறை. தன்னைப் பற்றித் திருமூலர் இப்பாடலில் கூறும்போது திடீரென ஒரு தொடர்பும் இல்லாமல் நூலின் பெயரைக் குறிப்பிட்டார் என்பது எந்த வகையாலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று.

இன்னொரு பாடலில் 'நந்தி அருளாலே சதாசிவன் ஆயினேன்' என்று கூறுவதால் 'சதாசிவம் என்னும் இப்பேர் பெற்றும்' என்று இப்பாடலில் கூறுவது தம்பெயரையே என்பது மேலும் உறுதி ஆகிறது.

சதாசிவனாகிய திருமூலரால் அருளப்பட்ட ஆகமம் என்பதால் காரணப் பெயராக 'சதாசிவ ஆகமம்' என்று நாம் கூறலாமே ஒழிய மேற்கூறிய பாடலில் நூலின் பெயர் சதாசிவ ஆகமம் என்று திருமூலர் குறிப்பிட்டிருக்கிறார் என்பது உண்மைக்குப் புறம்பு என்றே கொள்ள வேண்டும்.

மேலும் சேக்கிழாரும் திருமூலர் பாடிய நூலின் பெயர் திருமந்திரமாலை என்றே கூறுகிறார்.

".....ஞானமுதல் நான்கு மலர் நற்றிரு மந்திரமாலை
....
முன்னிய அப்பொருள்மாலை மூவாயிரம்சாத்தி"

என்பது சேக்கிழார் வாக்கு.

எனவே நூலின் பெயர் திருமந்திர மாலை என்பதும் மக்கள் அதனைச் சுருக்கி திருமந்திரம் என்று வழங்குகின்றனர் என்று முன்கண்ட முடிவே ஏற்றுக் கொள்ளத்தக்கது.

நூலின் யாப்பு

அடுத்து வருவது யாப்பு என்ற சிறப்புப் பாயிர உறுப்பு. யாப்பு என்பது தொடர்பைக் குறிக்கும். வடநூலார் இதை சம்பந்தம் என்றும், ஆனந்தரியம் என்றும் கூறுவர். அதாவது எந்த நூலைப் படித்தபின் இந்த நூலைப் படித்தால் புரியும் என்று ஒன்றுக்கொன்று உள்ள தொடர்பைக் குறிப்பது. இது நூல் கற்கும் மாணவர்கட்கு மிக அவசியம்.

இது, நூல்கள் இரண்டினிடையே உள்ள இயைபு காட்டுவது என்றும், நூல்களின் பகுதிகளில் ஒன்றிற் கொன்று இயைபு காட்டுவது என்று இருவகைப்படும். இந்த யாப்பினைக் கொண்டே நூல் வைப்பு முறை அமையும். இதனைக் கூறும் திருமந்திரப் பாடல் ஒன்று உண்டு. அது வருமாறு:

“வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவா யிரத்திலே
புத்தி செய்பூர்வத்து மூவாயிரம் பொது
வைத்த சிறப்புத் தருமிவை தானே!”

(திருப்பனந்தாள் மடம் பதிப்பு-100ஆம் பாடல்)

இப்பாடலில் என்ன கூறப்படுகிறது என்றால் இந்த நூல் வேறு எல்லா சமய நூல்களையும், புராணங்களையும் படித்துவிட்டபின் இறைவனது பேரா இயற்கைப் பேரின்ப விழைவு இறுதியில் தோன்றுமல்லவா? அப்போது முடிவில் படிக்க வேண்டிய முத்தி நூல் இது என்று கூறினார். ‘நன்னூலின் வகை வகை வைத்த பரிசே இது முத்தி முடிவு’ என்று பாடல் வரியைப்

பொருள்கோளுக்கு உரியபடி மாற்றியமைத்துப் பொருள் காணவேண்டும்.

இது எந்த நூல் படித்தபின் இந்த நூலைப் படிக்க வேண்டும் என்ற இரண்டு நூல்களுக்கு இடையிலான இயைபைக் காட்டுவது. இனி நூலுக்குள் இருக்கும் பகுதியை இரண்டாகப் பிரித்து ஒன்று பொது; மற்றது சிறப்பு என்று காட்டுகிறார்.

எது பொது என்றால் மூவாயிரத்திலே பூர்வத்து என்று கூறி முதலில் வருபவை என்று கூறினார். முதலில் வருபவை என்றால் எத்தனை? புத்தி செய் பூர்வத்து என்று கூறினார். புத்தி என்பது மனத் தத்துவத்தின் அங்கம். மனத் தத்துவம் நான்கு கூறுகளாகும். அவை: 1) மனம் 2) புத்தி 3) அகங்காரம் 4) சித்தம். அதுபோல முதல் நான்கு கூறு பொது என்றும், மீதி வைத்த ஐந்து கூறு சிறப்பு என்றும் கூறினார்.

நான்கு என்ற எண்ணிக்கையைப் பரிபாஷையால் புத்தி என்று கூறினார். புத்தி செய் என்பது இன்னொரு பொருளையும் குறிக்கும். இதனைச் சிந்தைசெய் என்று கட்டளை இட்டதாகவும் கொள்ளலாம்.

எனவே முதல் நான்கு தந்திரங்கள் பொது. ஏனைய ஐந்து தந்திரங்கள் சிறப்பு என்று கூறினார்.

சரி! நான்கு கூறு என்பதை புத்தி என்ற பரிபாஷைச் சொல்லால் கூறினார் என்பதை ஏற்கலாம். ஏனையவை ஐந்து கூறு என்பதை எப்படிக் கொள்வது என்று கேள்வி எழலாம். இதனை 'தந்திரம் ஒன்பது சார்வு மூவாயிரம்' என்று இன்னொரு பாடலிலிருந்து அறியலாம். இதன் மூலம் மூவாயிரம் பாடல்களும் மொத்தம் 9 தந்திரங்களாகப் பிரிக்கப்பட்டன என்று அறியக் கிடக்கிறது. அதில் முதல் நான்கு தந்திரங்கள் என்று பிரித்து விட்டமையால் ஏனையவை ஐந்து தந்திரங்கள் என்பது பெறக் கிடக்கிறது.

நூல் நுதலிய பொருள்

அடுத்து வருவது சிறப்புப் பாயிரத்தின் எட்டு உறுப்பில் ஒன்றான நுதலிய பொருள். இதிலே நூலில் கூறப்பட்ட பொருள் அத்தனையும் சுருக்கமாக, சாரமாகக் கூறப்பட வேண்டும். இதைக் கூறுகின்ற ஒரு திருமந்திரப் பாடல் உண்டு. அது வருமாறு:

ஞேயத்தை ஞானத்தை ஞாதுருவத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
ஆயத்தை அச்சிவன் தன்னை அகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே!

ஞேயம் - சிவன்; ஞானம் - சக்தி; ஞாதுரு - அறிவுப் பொருளான ஆன்மா; மாயம் - மறைக்கும் மலங்கள் மூன்றான ஆணவம், கன்மம், மாயை; மாமாயை - திரோதான சத்தி; பரை ஆயம் - அருட்சத்தி; அகோசர வீயம் - மாற்றம் மனம் கழிய நின்ற இறையோனால் பெறப்படும் பேரின்பப் பேறு.

ஆக, சிவம், சத்தி, திரோதான சத்தி, அருட்சத்தி, ஆன்மா, ஆன்மாவைப்பற்றிய ஆணவம், கன்மம், மாயை என்ற மலங்கள் மூன்று, சிவனால் பெறப்படும் பேரா இயற்கைப் பேரின்பப் பேறு என்பன பற்றி இந்நூலில் முழுமையாக விளக்கியிருக்கிறேன் என்று நூல் நுதலிய பொருளைக் கூறினார்.

நூல் கேட்போர்

அடுத்த சிறப்புப் பாயிரத்தின் உறுப்பு கேட்போர். அதாவது எந்தத் தகுதியில் உள்ள மாணவர் இந்நூலைப் பாடம் கேட்கலாம் அல்லது கற்கலாம் என்பது குறித்தது இது. இதில் ஏற்கெனவே கேட்ட மாணவர்கள் யார் என்பதை திருமூலர் குறிப்பிட்டுப் பாடுகிறார். அதன்மூலம்

அவர்களின் தகுதியைப் போல உடையவர்கள் இந்நூலைக் கற்கலாம் என்று கூறுவதாயிற்று.

இனி, அந்தப் பாடலைப் பார்ப்போம்.

"மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துரு காலாங்கி கஞ்ச மலையனோடு
இந்த எழுவரும் என்வழி யாமே"

அதாவது திருமூலரிடம் திருமந்திரத்தைக் கேட்டவர்கள் ஏழு பேர் என்றும், அவர்கள் யார் யார் என்றும் இந்தப் பாடல் கூறுகிறது. அந்த ஏழு பேர்: 1) மாலாங்கன் 2) இந்திரன் 3) சோமன் 4) பிரமன் 5) உருத்திரன் 6) கந்துரு 7) காலாங்கி கஞ்ச மலையன்

என் சீடனே! நான் சொல்வதைக் கேள்! என்று திருமூலர் நான்கு சீடர்களை விளித்துப் பாடிய திருமந்திரப் பாடல்கள் உள்ளன. அவை:

"இருந்த அக்காரணம் கேள் இந்திரனே!"
"மாலாங்கனே இங்கு யான்வந்த காரணம்"
"ஆய்ந்திடும் காலாங்கி கஞ்சமலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து'

எனவே இவர்கள் நால்வரும் சம காலத்தவராகக் கொள்ளலாம். ஏனையோர் மூவரும் அதற்கு முற்பட்ட மாணவர் அணியாகக் கொள்ளலாம். இதையும் திருமூலரே வேறோர் பாடலில் குறிப்பிடுகிறார். பாடல் வருமாறு:

"மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்பும்"

ஆக சோமன், பிரமன், உருத்திரன் என்ற மாணவர் அணி முன்னது. இந்திரன், மாலாங்கன், கந்துரு, காலாங்கி கஞ்ச மலையமான் என்ற மாணவர் அணி பின்னது.

இதில் சோமன், பிரமன், உருத்திரன் என்பவர்கள் தேவர்களா, இல்லை, தேவர்கள் பெயர் கொண்ட மானிடர்களா என்பது புலனாகவில்லை.

ஏனையோர் நால்வரும் மானிடரே என்பது ஒருவாறு தெளியலாம். இந்திரன் என்பதுகூட தேவர் தலைவனைக் குறிக்காது. அப்பெயர் கொண்ட ஒரு மானிடர் திருமூலரிடம் மாணவராய்ப் பயின்றார் என்றே கொள்ள வேண்டும்.

இவர்களில் காலாங்கர் என்பவர் மலைமன்னர் என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். உடையார் வகுப்பைச் சேர்ந்தவர் என்று துடிசை கிழார் கூறுகிறார். அவரது ஊர் கஞ்சமலை. எனவே கஞ்சமலைச் சித்தர் என்றே அவரைக் கூப்பிடுவார்களாம். கஞ்சமலை என்னும் ஊர் இப்போது சித்தர்மலை என்றே அழைக்கப்படுவது சான்றை உறுதியாக்குகிறது. இவரோடு சேர்த்து கந்துரு என்பவரும் திருமூலரால் விளிக்கப்படுவதால் இருவரும் இணைபிரியா மாணவ நண்பர்கள் என்று கொள்வதில் தவறில்லை.

திருமந்திரம் - சரியை நெறி முற்றியவர்க்கு

இனி, இந்த நூலைப் படித்தவர்கள் யார் என்று கூறும்போதே இதைப் படிக்கத்தக்கவர்கள் யார் என்ற குறிப்பைத் திருமூலர் கொடுக்கிறார். அந்தப் பாடலை முழுமையாகப் பார்ப்போம்:

“நேர்ந்திடு மூல சரியை நெறிஇதென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரிதே.”

இங்கே காலாங்கி கஞ்சமலையமானையும், கந்துருவையும் குறிப்பிடுகிறார். இவர்கள் இருவரும் சரியை நெறியில் நின்று ஆழங்கால் பட்டவர்கள்

என்கிறார். ஓர்தல் ஆராய்தல் என்று பொருள்படும். எனவே சரியை நெறி இது என்று ஆய்ந்திடும் காலாங்கி என்றும், ஓர்ந்திடும் கந்துரு என்றும் கூறுவதால் இவர்கள் இருவரும் சரியை நெறியில் ஆழங்கால் பட்டவர்கள் என்று தெரிகிறதல்லவா?

இவர்கள் இருவருக்கும் 'சுத்த சைவத்தின் உயிர் இதே' என்று காட்டியதே திருமந்திரம் என்று கூறுகிறார். எனவே இந்நூலைக் கேட்கத் தக்கவர்கள், சைவத்தில் காணப்படும் நான்கு நெறிகளான சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவற்றில் சரியை நெறி நின்றவர்கள், மேல் மூன்று நெறிகளையும், அவற்றின் உயிரான சாராம்சமான வற்றையும் அறிந்துகொள்ள, அறிந்து கடைப்பிடிக்க ஆர்வம் உள்ளவர்கள் என்பது கூறினாராயிற்று.

சரியை நெறிக்கு வருவது எப்படி?

சைவத்தில் கூறப்படும் சரியை நெறியில் வந்து சேர்வது எப்படி என்று சிவஞான சித்தியார் பாடல் ஒன்று கூறுகிறது. பாடல் வருமாறு:

"புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும்
புகல்மிருதி வழியுழன்றும் புகலும்ஆச் சிரம
அறத்துறைகள் அவையடைந்தும் அருந்தவங்கள் புரிந்தும்
அருங்கலைகள் பலதெரிந்தும் ஆரணங்கள் படித்தும்
சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும் வேத
சிரப்பொருளை மிகத்தெளிந்தும் சென்றால் சைவத்
திறத்தடைவர் இதில்சரியை கிரியா யோகம்
செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்"

உலகில் கடவுள் உண்டு என்ற எண்ணம் உடையவர்கள் எல்லாம் ஒரே படியில் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. 'தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாய' பின்,

''ஆறுகோடி மாயா சத்திகள்
வேறுவேறு தம் மாயை தொடங்கின''

என்று மணிவாசகர் போற்றித் திருவகவலில் பாடுகிறார். இவற்றை எல்லாம் தப்பி இயற்கை உண்மைக் கடவுளிடம் இணைந்து இயற்கை உண்மைப் பேரின் பத்தை அடைய வேண்டும்! எனவே கடவுளை ஒப்புக் கொண்டு சமயங்கள் எனப் பல்வேறு வகையாகப் பிரிந்து நிற்பனவற்றை இப்படிப் பிரிக்கலாம்.

கடவுள் ஆகிய சிவபெருமானின் உண்மையை உணராதவை; சிவபெருமானே கடவுளரில் முதன்மைக் கடவுள் என்று உணராதவை; சிவபெருமானை அடைந்து பெறும் பேற்றின் நெறி உணராதவை; அந்தப் பேற்றின் இயல்பு உணராதவை என இச்சமயங்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

கடவ்ள் ஆகிய சிவபெருமானின் உண்மை
உணராதவை - புறப் புறச் சமயம்

சிவபெருமானே கடவுளரில் முதன்மைப்
பரம்பொருள் என்று உணராதவை - புறச் சமயம்

சிவபெருமானை அடைந்துபெறும்
பேற்றின் நெறி உணராதவை - அகப் புறச்சமயம்

அப்பேற்றின் இயல்பு உணராதவை - அகச் சமயம்

இதில் முதல் மூன்றும் புறச் சமயம் எனப்படும். நான்காவது உண்மையைக் கொஞ்சம் நெருங்கியதால் அகச் சமயம் எனப்படும்.

இவ்வாறு சொல்லப்பட்ட மூன்று வகை புறச் சமயங்களில் உழன்று தேறி, பின்னர் அகச்சமயத்திற்கு வந்தும் உணர்வு இல்லாத காரணத்தால் வடமொழி வேத ஸ்மிருதிகளே பெரியவை என்று அவற்றில் படிந்து உழன்றும், அதிலிருந்து தேறி பின்னர் வருணாசிரம நெறிகளில் படிந்து அது இறைவனிடம் இருந்து வெகுதூரம் விலகி இருக்கிறது என்று தேறி, பின்னர் அறங்களைச் செய்வோம் என்று அதிலே மூழ்கி, பின் அதிலிருந்து தேறி தவம் செய்வோம் என்று புறப்பட்டு, அதிலும் தவம் இன்னது என்று அறியாமல் விரதங்களே தவம் என்று தவறாகக் கண்டு விரதங்களில் மூழ்கி, பின் அதிலிருந்து தேறி பல கலைகளைப் படித்தும், வடமொழி வேதங்களின் மூலத்தையே படிப்போம் என்று அதில் மூழ்கி, பின்னர் அதிலிருந்தும் தேறி அவையெல்லாம் கருமகாண்டம், நமக்கு வேண்டுவது ஞான காண்டமே என்று வேத சிரமாகிய உபநிடதங்களில் மூழ்கியும், அவையும் அங்கொன்றும் இங்கொன்றும் உண்மைகளின் சிதறல்களையே கொண்டிருக்கின்றன என்று கண்டு அதிலிருந்து தேறி சைவத்திறத்து வந்து சேர்வர் என்கிறது சித்தியார்.

இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். சைவ சமயத்தை வந்தடைவர் என்று கூறாமல் சைவத் திறத்து அடைவர் என்று கூறியதுதான் அது. அதாவது சைவம் என்பது சமயம் கடந்த பெருநெறி என்றார். அந்த நெறி எல்லார்க்கும் பொது. இதைப் பொது என்பதால் எந்தச் சமயத்தாரும் இந்த நெறியைப் பின்பற்றலாம் என்று கூறினார். அதனால்தான் நிரம்பவும் எச்சரிக்கையாக சைவத் திறத்தை அடைவர் என்றார்.

அதாவது வைஷ்ணவனாக இருந்துகொண்டே ஒருவன் சைவத் திறத்துடன் அந்த நெறியில் வைஷ்ண வத்தைப் பின்பற்றலாம். அப்போது சிவபெருமானுக்கு

அல்லது பரம்பொருளுக்கு திருமால் என்று பெயர் என்று கொள்ளலாம். என்ன நினைக்கிறோம் என்பதுதான் முக்கியம். பேரா முக்கியம்? ஒரு முஸ்லீம் அல்லாவை, முஸ்லீமாக இருந்துகொண்டே, சைவத் திறத்து நெறியில் வணங்கலாம். இப்படியே எல்லாச் சமயத்தாரையும் கொள்ளலாம். அதனால்தான் திருமூலர் இப்படிப் பாடினார்:

தத்தம் சமயத் தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமும் செய்யும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே!

இப்படி சைவத் திறமாகிய பெருநெறியில் முதல்படி சரியை நெறி.

இந்தச் சரியை நெறியில் வந்து சேர்ந்து அதில் ஆழங் கால் பட்டவர்கள் தான் காலாங்கி கஞ்ச மலையமானும், கந்துருவும் என்றார் திருமூலர். எனவே பலவழிகளில், பல துறைகளில், பல சமயங்களில் புகுந்து தேறி சைவத் திறத்தை வந்தடைந்து சரியை நெறியில் நிற்பவர்களே இந்நூலாகிய திருமந்திரத்தை பாடம் கேட்க அல்லது கற்கத் தக்கோர் என்று திருமூலர் கூறுகிறார்.

நூலின் பயன்

இனி, சிறப்புப் பாயிரத்தின் கடைசி உறுப்பிற்கு நாம் வந்து விட்டோம். அதாவது நூலின் பயன். திருமந்திரம் என்கிற இந்த நூலின் பயன் இது என்று கூறும் பாடல் ஒன்று உண்டு. அது வருமாறு:

மூலன்உரை செய்த மூவாயிரந் தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந்து ஓதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவர் அன்றே

தினந்தோறும் காலை எழுந்தவுடன் திருமந்திரப் பாடல்களை அதன் உட்பொருள் உணர்ந்து ஓதினால் இறைவியின் அருள்வீழ்ச்சியில் சேர்வர் என்று பாடல் கூறுகிறது. இறைவியின் அருள் வீழ்ச்சியை வடநூலார் சத்திநிபாதம் என்பர். சத்திநிபாதத்தில் மூழ்குபவர்கள் அருளில் மூழ்குபவர்கள். அருளானது ஆண்டவன் இதோ என்று காட்டி ஆண்டவனுடன் கூட்டுவிக்கும். இதையே திருவருள் கூட்டுவிப்பது என்றார்கள் பெரியோர்கள். தற்போது நமக்கு உலகியலில் ஏதும் நினைத்தபடி நடந்தேறவில்லை என்றால் திருவருள் கூட்டவில்லை என்று 'திருவருள் கூட்டுவிப்பது' என்ற பெரிய அருள் நிகழ்ச்சியைக் கொச்சைப்படுத்திக் கொண்டிருக்கிறோம். நினைத்தது நடந்தால் விதி கூட்டுவித்தது என்றும் நடக்கவில்லை என்றால் விதி கூட்டுவிக்கவில்லை என்றும் கூறுவதே சரி. திருவருள் கூட்டுவிப்பது என்பது வேறு என்று மேலே கண்டோம்.

இனி, மேற்கூறிய பாடல் திருமூலர் பாடியதல்ல. திருமூலரின் மாணாக்கரில் ஒருவர் பாடி இருக்கிறார். எனவே தான் மூலன் உரை செய்த என்று படர்க்கையில் மூலர் குறிப்பிடப்பட்டிருக்கிறார். திருமூலரே தமது நூலின் பயனைக் கூறவில்லையா என்று ஐயம் தோன்றலாம்.

திருமூலரே ஒரு பாடலில் நூலின் பயனைக் கூறி இருக்கிறார். பாடல் வருமாறு:

'நான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படும் தானே!'

அதாவது திருமூலர் தாம் பேரா இயற்கைப் பேரின்பத்தைப் பெற்றதாகவும், அதை இந்த வையகமும் பெற

வேண்டும் என்று எண்ணுகிறார். என்ன செய்தால் அந்தப் பேரின்பம் இவ்வையகத்தார்க்குக் கிட்டும் என்று பின்னிரண்டு வரிகளில் கூறுகிறார். அதாவது இந்த திருமந்திர நூலை உணர்வுடன் பற்றிக் கொண்டால் இவ்வையகத்தாருக்கும் அந்தப் பேரின்பம் தலைப் படும் என்று கூறி நூலின் பயனைத் தெளிவாகக் கூறிவிட்டார்.

ஆ! சிறப்புப் பாயிரத்தின் எட்டு உறுப்புகளையும் திருமந்திரத்திலேயே, திருமந்திர நூலின் வழியாகவே கண்டோம். இம்முறைப்படி ஆய்ந்து தற்போது வந்துள்ள பதிப்புக்களைத் திருத்தி அமைத்து சிறப்புப் பாயிரம், குருமட வரலாறு, தற்சிறப்புப் பாயிரம், திருமூலர் தம் வரலாறு கூறுதல், பொதுப் பாயிரம் என்று திருமந்திரத்தின் பாயிரத்தை, பாடல் வரிசைகளை, வைப்பு முறைக்கு ஏற்ப மாற்றிப் பதிப்பித்தால் திருமந்திரம் படிப்போர்க்கு எளிதில் புரிய ஏதுவாகும். அந்த வழி அமையும் செம்பதிப்பினைப் பாயிரப் பகுதி வரை இத்துடன் இணைப்பாகக் காண்க.

நூலின் காலம் - களன் - காரணம்

இதுவரை திருமந்திரத்தின் சிறப்புப் பாயிர உறுப்புக்கள் எட்டும் அறிமுகப்படுத்தப்பட்டன. சிறப்புப் பாயிரத்தில் இந்த எட்டு உறுப்புக்கள் மட்டுமல்ல; இன்னும் மூன்றும் சேர்த்துக் கூறுவது உண்டு என்று நன்னூல் கூறுகிறது:

"காலம் களனே காரணம் என்றிம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே"

அதாவது நூல் வந்த காலம், நூல் கூறப்பட்ட முதலிடம், நூல் செய்வதற்கான காரணம் என்ற இந்த மூன்றையும் கூறுவதும் சிறப்புப் பாயிரத்தின் உறுப்புகளாகச் சிலர் கூறுவர் என்பது நன்னூல் நூற்பாவின் பொருள்.

அந்தவகையில் நூல் கூறப்பட்ட இடம் - திருவாவடுதுறை அரசடி என்பதும், நூல் திருமூலர் செய்வதற்கான

காரணம் என்ன என்பதையும் திருமூலர் வரலாற்றிலேயே கண்டுவிட்டோம். எனவே எஞ்சியிருப்பது நூலின் காலம் மட்டும்தான். இன்னொரு வகையில் சொல்வதென்றால் திருமூலரின் காலம் மட்டுமே ஆய்வுக்குரியது.

நூலின் காலம்

திருமூலரின் காலத்தை ஆராய வேண்டுமானால் அவர் தொடர்பான வேறு மூவரின் காலத்தை அறிந்தால் முடிவு செய்துவிடலாம். அவர்களில் ஒருவர் மன்று தொழுத பதஞ்சலி; இன்னொருவர் வியாக்ரமர்; மற்றவர் பொதிகை மலை அகத்தியர். பதஞ்சலியும் வியாக்ரமரும் திருமூலரின் வகுப்புத் தோழர்கள்.

வியாக்ரமர், வசிட்டரின் மைத்துனர் என்று புராணங்கள் கூறுகின்றன. எனவே வசிட்டரின் காலத்தை அறிந்தால் திருமூலரின் காலத்தை அறிந்துவிடலாம். வசிட்டர் இராமாயண காலத்தவர். இராமாயணம் கி.மு. 5000 ஆண்டுகட்குமுன் நடந்த வரலாறு என்று ரஷியர்கள் விஞ்ஞான ரீதியாக 'கார்பன் தியரி' என்ற முறை மூலம் கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே திருமூலரின் காலம் கி.மு. 5000 என்று கொள்ளலாம்.

இனி அடுத்த வகை கணிப்பு ஒன்று உண்டு. அது பொதிகை மலை முனிவரின் காலத்தைக் கணக்கிடுவது. அகத்தியர் என்ற பெயரில் ஏறத்தாழ பத்துபேர் வெவ் வேறு காலத்தில் இருந்ததாக 'அகத்தியர்' என்ற தலைப்பி லான நூலில் துடிசை கிழார் சங்க காலச் சான்றுகளுடன் காட்டுகிறார். அதில் பொதிகை மலை அகத்தியரின் காலம் கி.மு. 6000 என்று கூறப்படுகிறது. எனவே இரண்டையும் ஒத்திட்டு சராசரியாகப் பார்த்தால் திருமூலரின் காலம் கி.மு. 5500 ஆகக் கொள்வதே சாலப் பொருந்தும்.

சிலர் திருமூலரின் காலத்தை கி.பி. 5ஆம் நூற்றாண்டு என்கின்றனர். பொதிகை மலை அகத்தியர், இராமாயண

கால வசிட்டர், வியாக்ரமர் ஆகியோர் கி.பி. 5ஆம் நூற்றாண்டினர் என்று இதன் மூலம் சொல்லுவதாகி விடும். இது எவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்கதன்று. எனவே திருமூலர் காலம் கி.மு. 5500 என்பதே சரி. இது இன்னும் பலவாறாக ஆராயப்பட்டு பல சான்றுகளுடன் எனது 'திருமந்திரச் சிந்தனைகள்' என்ற நூலில் நிறுவப் பட்டிருப்பதை ஆர்வமுள்ள அன்பர்கள் படித்தறியலாம்.

பொதுப் பாயிரம்

இதுவரை சிறப்புப் பாயிரத்தின் உறுப்புக்கள் அனைத்தையும் இந்நூலைப் பொறுத்தவரை பார்த்து விட்டோம். இனி, திருமூலர் அருளிய பொதுப் பாயிரத்தைச் சிறிது அறிமுகம் செய்வோம்.

திருப்பனந்தாள் மடத்து திருமந்திர பதிப்பில் பொதுப் பாயிரம் என்று மொத்தம் 112 பாடல்கள் கிடைக்கின்றன. துடிசை கிழார் பாயிரம் என்ற தலைப்பில் வகை பிரித்துக் காட்டி மொத்தம் 128 பாடல்கள் என்று கூறுகிறார். அந்தக் கணக்கு வருமாறு:

பரசிவப் பெருமை (கடவுள் வாழ்த்து)	- 50	செய்யுட்கள்
மும்மூர்த்திகளின் முறைமை	- 10	,,
வேதச் சிறப்பு	- 7	,,
ஆகமச் சிறப்பு	- 7	,,
அந்தணர் ஒழுக்கம்	- 10	,,
அக்கினி காரியம்	- 10	,,
அரசனது ஆட்சிமுறைமை	- 10	,,
வான்சிறப்பு	- 2	,,

அறம் செய்வான் திறம்	- 10	செய்யுட்கள்
அறம் செயான் திறம்	- 10	,,
அவையடக்கம்	- 2	,,
	128	,,

சில பிரதிகளில் அந்தணர் ஒழுக்கம், அக்கினி காரியம், அறம் செய்வான் திறம், அறம் செயான் திறம், அரசனது ஆட்சி முறைமை, வான்சிறப்பு ஆகியவற்றை பாயிரத்தில் சேர்க்காமல் முதல் தந்திரத்தில் சேர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் குரு பாரம்பரியம், திருமூலர் வரலாறு, திருமந்திரத் தொகைச் சிறப்பு, குருமட வரலாறு என்பனவற்றை பாயிரத்தில் சேர்த்துப் பதிப்பித்திருக்கிறார்கள். ஆனால் இவை நூலில் சேரா. இவ்வகையில் 36 பாடல்களை மொத்தம் இப்பதிப்பில் காட்டிய நூற்பாடல் தொகை 3047இல் கழிக்க வேண்டும். அவ்வாறு கழிக்க வருவது 3011 பாடல்கள். இதிலும் பல பாடல்கள் இரண்டிடங்களில் வருகின்றன. அவற்றையெல்லாம் சரி பார்த்து திருந்திய பதிப்பு செய்வோமானால் 3000 பாடல்கள் அமையலாம்.

இனி, பொதுப் பாயிரத்தின் கூறுகளுக்கு வருவோம். பொதுப் பாயிரம் பொதுவாக அறுவகை வாழ்த்துக்களுடன் அமையவேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகிறது. அவற்றையெல்லாம் திருமந்திரப் பொதுப் பாயிரத்தில் காணலாம். இவற்றின் விரிவுகளை எல்லாம் பொருத்திக் காட்டினால் இந்நூல் அறிமுக நூல் என்பதிலிருந்து ஆய்வுப் பெருநூலாக விரிந்துவிடும் என்று அஞ்சுகிறேன். பொதுப் பாயிரத்தில் கூறப்பட்ட முக்கியமான பாடல்களை மட்டும் இங்கே அறிமுகம் செய்வோம்.

கடவுள் வாழ்த்து

திருமந்திரப் பொதுப் பாயிரம் கடவுள் வாழ்த்துடன் ஆரம்பிக்கிறது. கடவுள் வாழ்த்துக்கு முன்னால் காப்புப் பாடலாக ஒரு பாடல் இன்றுள்ள பதிப்புகளில் காணப் படுகின்றது. அது வருமாறு:

"ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே"

இந்தப் பாடல் விநாயகர் துதியாக உள்ளது. இங்கே கவனிக்க வேண்டுவது ஒன்று உண்டு. அதாவது திருமந்திர மூவாயிரம் பாடல்களில் லட்சுமி, சரஸ்வதி, ஐயப்பன், முருகன், திருமால், பிரமன், உருத்திரன், சதாசிவன், மகேசுவரன், திரிபுரை, வயிரவி, புவனாபதி, ஆதித்தன் என்று பல கடவுளர்கள் பேசப்படுகிறார்கள். ஆனால் விநாயகர் பற்றி மட்டும் எந்த ஒரு பாடலிலும் மூச்சு - பேச்சே காணோம்.

எனவே விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டில் புகுவதற்கு முன்னே திருமந்திரம் எழுதப்பட்டது என்பது புலனாகிறது. விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டில் நரசிம்ம வர்ம பல்லவன் காலத்தில் வாதாபி வெற்றிக்குப்பின் நுழைந்தது என்றும் அதனால் அந்த வழிபாடு கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்குப் பின் தான் தமிழ்நாட்டில் அறிமுகமாயிற்று என்று அறிஞர் கூறுவர்.

அதற்கேற்ப கி.பி. 7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஞானசம்பந்தர் முதலாகத் தான் விநாயகரைக் குறிப்பிட்டுப் பாடியிருக்கிறார்கள். அதற்கு முன் இருந்த காரைக் காலம்மையார் பதிகங்களில் விநாயகர் குறிப்பிடப்பட வில்லை. திருவாசகத்தில் கூட விநாயகர் எந்த இடத்திலும்

குறிப்பிடப்படவில்லை என்பது கருத்தில் கொள்ளத் தக்கது.

அத்துடன் திருமந்திர நூலைப் பார்த்தால் அதன் முதல் பாடல் ''ஒன்றவன் தானே'' என்று தொடங்கும் பாடல் தான் என்று சேக்கிழார் திருமூலர் புராணத்தில் கூறுகிறார்:

ஊனுடம்பின் பிறவி விடம் தீர்ந்துஉலகத்
தோர்உய்ய
ஞானமுதல் நான்குமலர் நற்றிருமந் திரமாலை
பான்மைமுறை ஓராண்டுக் கொன்றாகப்
பரம்பொருளாம்
ஏனஎயிற ணிந்தாரை 'ஒன்றவன்தான்' என எடுத்து

இப்பாடலில் சேக்கிழார் 'ஒன்றவன் தானே' எனத் தொடங்குவதே திருமந்திர நூலின் முதல் பாடல் என்று மிகத் தெளிவாகக் கூறிவிட்டார். எனவே இக்காரணத் தாலும் நூலில் வேறெங்கேயும் விநாயகர் பற்றி பேசப்படாததாலும் 'ஐந்து கரத்தனை' என்று தொடங்கும் பாடல் பின்னால் யாரோ எழுதி நூலுக்குக் காப்பாக இருக்கட்டும் என்று சேர்த்து விட்டது என்பது திண்ணம். அதற்காக விநாயகரை வழிபடக் கூடாது என்பதல்ல. வரலாற்று உண்மை இது என்று இங்கே நடு நின்று கூறப்பட்டது.

இனி, திருமந்திரத்தின் முதல் பாடலைப் பார்ப்போம்:

''ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே''

இறைவனை ஒன்று, இரண்டு, மூன்று என்று வரிசையாக எட்டு வரை தொடர்புபடுத்தி காட்டுகிறது இப்பாடல். இதற்கு எண்ணலங்காரம் என்று பெயர். இனி,

ஒன்று முதல் எட்டு வரை எப்படி இறைவனோடு தொடர்புபடுத்தப் படுகிறது என்பதைப் பார்ப்போம்.

ஒன்று - இந்த எண்ணே இறைவனைக் குறிப்பது. கடவுள் ஒருவரே அல்லவா? 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்பது இன்னொரு திருமந்திரப் பாடலில் கூறப்படுவது. "ஒன்று என்பது ஒன்றே காண்" என்பது சிவஞான போத வெண்பா. உபநிடதத்தில் 'ஏகம்' என்று குறிப்பிடப்படுவதும் இதுவே.

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க" - திருவாசகம். எனவே ஒன்று என்பதே கடவுட் பரம்பொருளைக் குறிப்பதாகும். உலகத்தில் சூரியன் கிழக்கில் உதிப்பது, பருவங்கள் தவறாதது, எந்த இடிபாடும் இல்லாமல் வானில் கோள்கள் சுற்றிவருவது ஆகிய எல்லாம் நியதியாக நடப்பதே கடவுளர் பலர் இல்லை; கடவுள் ஒருவரே என்று காட்டுகிறது.

கடவுளர் பலராயிருந்தால் அவர்கள் எல்லாம் சேர்ந்து 'கடவுளர் சங்கம்' என்று அமைப்பார்கள். முதலில் கொஞ்சகாலம் எல்லாம் நியதியாக நடக்கும். அப்புறம் அவர்களுக்குள்ளே நீ பெரியவனா நான் பெரியவனா என்று சண்டை நடக்கும். அப்புறம் அவ்வளவுதான் - (ஸ்டிரைக்) வேலைநிறுத்தம் அறிவிக்கப்பட்டு விடும். நியதி காற்றில் பறக்கும். அவ்வாறில்லாமல் நியதி காப்பாற்றப்படுவதாலேயே எல்லோருக்கும் மேலான கடவுள் ஒருவரே என்பது உறுதியாகிறது.

ஒப்பற்ற ஒன்றாகக் கடவுள் இருப்பதால் நமக்கு என்ன பயன்? உயிர்களாகிய நாம் அறியாமையாகிய இருள் சூழ துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறோம். ஐயோ! அறிதற்குரிய அறிவுப் பொருளான உயிர்கள், அறியாமை என்ற இருளில் கட்டுண்டு தத்தளிக்கின்றனவே என்று அந்த ஒப்பற்ற ஒன்றிலிருந்து அருள் சுரக்கிறது.

பிரிவில்லாது ஒன்றாயிருப்பது நமக்கு உதவிக்கரம் நீட்ட தன்னிலிருந்து பிரிந்து அருள் சுரக்கின்றது.

இதை ''தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்சுரக்கும் இன்னருள்'' என்று பாடுகிறார் மணிவாசகர் 'திருவெம்பாவை' பாடலில்.

எனவே ஒன்று இரண்டாயிற்று; அந்த இரண்டாவது வேறொன்றும் இல்லை; அந்த ஒன்றின் அருள். இதை விளக்கி 'இரண்டவன் இன்னருள்' என்று பாடினார் திருமூலர்.

அடுத்து அவன் 'மூன்றினுள் நின்றனன்' என்றார். அதாவது எந்த ஒரு பொருளுக்கும் குணங்கள் உண்டு; தன்மைகள் உண்டு. குணம் இல்லாத குணிப்பொருள் ஒன்றும் இருக்க இயலாது. ஒப்பற்ற ஒன்றான அந்தப் பரம்பொருளுக்கும் குணங்கள் உண்டு.

'சார்! கொஞ்சம் இருங்க! இறைவனை நிர்க்குணன் என்று கூறுவார்களே! நீங்கள் இறைவனுக்கும் குணங்கள் உண்டு என்கிறீர்களே!' என்று சந்தேகம் எழ கேள்வி கேட்கலாம்.

இங்கே இறைவனுக்கு இல்லை என்ற குணங்கள் சத்துவம், ராஜசம், தமோகுணம் என்ற சடப்பொருளின் குணங்களாம். சடப்பொருள்கள் ஓரிடத்தில் இருக்கும் போது வெளியிலிருந்து வேறு ஏதாவது சத்தி தள்ளி விடவில்லை என்றால் அப்படியே இருக்கும். இது சத்துவ நிலை. வெளியிலிருந்து எந்த சத்தியாவது உந்திவிட்டால் அது ஓடும்; இது ராஜச நிலை. வெளியிலிருந்து ஏதாவது எதிர்சத்தி ஓடிக் கொண்டிருக்கும் சடப்பொருளைத் தடுக்குமானால் அந்த சடப்பொருள் ஓடுவதிலிருந்து நின்றுவிடும். இது தமோ குணநிலை. சடப்பொருள் இருந்தபடி இருங்கோள் என்று ஓரிடத்தில் இருத்தல் சத்துவ குணம். இருத்தலிலிருந்து இயங்குவது இராஜச குணம். இயக்கத்தினைத் தடைசெய்ய தடைப்பட்டு

நிற்பது தமோ குணம். இம்மூன்றும் சடப்பொருளுக்கு உள்ள குணம்.

அறிவுப்பொருளுக்கு சடப்பொருளின் இம்மூன்று குணங்களும் பொருந்தாது. அறிவுப்பொருள் இருக்கும்; தள்ளிவிட்டால் எதிர்த்து நிற்கும்; நிறுத்தினால் தள்ளிவிட்டு ஓடும். காரணம் அறிவுப்பொருள் தானே இயங்குவது. சடப்பொருளுக்குத் தானே இயங்கும் இயக்கம் இல்லாத தால் வெளிச் சத்திகளின் தாக்கத்திற்கேற்ப 'இருத்தல், இயங்கல், நிற்றல்' என்ற மூன்று குணங்களையும் படைத்து நிற்கும்.

இறைவன் அறிவுப் பொருள். அதிலும் பேரறிவுப் பரம்பொருள். எனவே சடப்பொருளின் குணங்களை அவனுக்கு எப்படி ஏற்றுவது? ஆகவே இறைவனை சடப்பொருளின் மூன்று குணங்களும் இல்லாதவன் என்ற பொருளில் நிர்க்குணன் என்றனர்.

இனி எந்த ஒரு பொருளுக்கும் இயல்பான குணங்கள் இருந்தாக வேண்டுமல்லவா? அப்படிப் பார்க்கப் போனால் இறைவனாகிய பேரறிவுப் பரம்பொருளின் இயல்பான குணங்கள் என்னென்ன? அவை மூன்று என்றார் திருமூலர். அவையாவன: 1) அறிவே வடிவாய் இருத்தல் 2) உயிர்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற கருணையை விழைவாகக் கொள்ளல் 3) தானே இயங்கிச் செயல்படுதல்.

முதலில் அறிவுப்பொருள் அறிவு வடிவமாகத் தானே இருக்க வேண்டும்? 'சிறந்த அறிவு வடிவமாய் திகழும் நுதற்கட் பெருமானே' என்று பாடுவார் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில்.

'அறிவு வடிவு என்றறியாத என்னை
அறிவு வடிவு என்றுஅருள் செய்தான்நந்தி'

என்று இன்னொரு திருமந்திரப் பாடலில் எட்டாம் தந்திரத்தில் 'அறிவுதயம்' என்ற தலைப்பில் பாடுகின்றார் திருமூலர். எனவே இறைவனுக்கு அறிவு என்பது ஓர் குணம் என்பதில் சந்தேகம் இல்லை.

அவன் நம்மை உய்விக்க வேண்டும் என்று கருணையால் இச்சை கொள்கிறான். அதற்கு நம்மை உய்விக்க வந்த உலகமும், உலகத்தில் வைத்துள்ள போகப் பொருள்களுமே சாட்சி. எனவே விழைவு என்கிற இச்சையும் அவனது குணத்தில் ஒன்று என்பதில் ஆட்சேபணை இருக்க இயலாது.

அடுத்து இச்சை கொண்டால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்த வேண்டும். இறைவன் நம்மை உய்விக்க இச்சை கொண்டபின் அதைச் செயல்படுத்தவே இந்த உலகைப் படைத்து, காத்து, ஒடுக்கி, மறைத்து இறுதியில் அருளுவதாகிய ஐந்தொழிலையும் மேற் கொள்கிறான். எனவே அவனுக்குச் செயலும் ஓர் குணம் என்பது உறுதியாகிறது.

எனவே இறைவன் மூன்று குணங்களை உடையவன் என்பது தெளிவாகிறது. அதாவது அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று குணங்களை உடையவன் இறைவன். இதைத் தான் குமர குருபரரும்,

> *"ஆகவரும் இச்சை, அறிவு, இயற்றலால் இலய*
> *போக அதிகாரப் பொருளாகி"*

என்று கந்தர் கலி வெண்பாவில் பாடிக் காட்டினார்.

இதுவரை கூறியவற்றிலிருந்து குணம் என்ற பொதுச் சொல் சடப் பொருள்களைப் பொறுத்தவரையில் தன்மையைக் குறிக்கும் என்றும், அறிவுப் பொருள்களைப் பொறுத்தவரை இயல்புகளைக் குறிக்கும் என்றும், அறிவுப் பொருளான இறைவனுக்கு சடப் பொருளின்

தன்மைகளான சத்துவ, இராசத, தமோ குணங்கள் இல்லையாதலால் நிர்க்குணன் எனப்பட்டான் என்றும், ஆனால் அறிவுப் பொருள் என்ற வகையிலே இயல்புகள் என்ற பொருளிலே அவனுக்கு மூன்று குணங்கள் உண்டு என்றும் அவை அறிவு, இச்சை, செயல் என்பன ஆகும் என்றும் அறிந்தோம்.

பெரியோர்கள் இந்த அறிவு, இச்சை, செயல் என்ற குணங்களையே எட்டாக விரித்துக் காட்டினர். அவை இறைவனது எண் குணம் என்றும் கூறப்படும். அதனைப் பாடலின் இறுதிப் பகுதியில் காண்போம்.

இனி இங்கே ஒன்றை நினைவில் வைக்க வேண்டும். இறைவன் பேரறிவுப் பரம்பொருள் என்றால் உயிர்களாகிய நாம் சிற்றறிவு சிற்பொருள். எனவே அறிவுப் பொருள் என்கின்ற வகையிலே நமக்கும் அறிவு, இச்சை, செயல் என்கின்ற இயல்புகளான மூன்று குணங்கள் உண்டு என்பதும், அவை இறைவனிடம் பேரளவில் இருக்க, நம்மிடம் அவை பெயரளவில் உள்ளன என்பதும் நினைவில் வைக்க வேண்டியவை.

மீண்டும் திருமந்திரப் பாடலிற்கு வருவோம். ஒன்றான ஒப்பற்ற பரம்பொருள் நம் பொருட்டு அருள் சுரக்க தானும் அருளுமாக இரண்டாக நிற்க, அறிவுப் பொருளுக்கு உரிய இயல்பான அறிவு, இச்சை, செயல் என்ற மூன்று குணங்களில் நின்றது என்பதைக் குறிக்க 'நின்றனன் மூன்றினுள்' என்று பாடினார். இந்தக் கருத்துகளை ஒன்றுக்கொன்று தொடர்பாக இயைபு படுத்தி வரிசை யாய்ப் பூட்டிப் பாடியிருப்பது போற்றத்தக்கது.

அடுத்து 'நான்கு உணர்ந்தான்' என்றார். நான்கு என்பது இங்கே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நன்னெறிகளைக் குறிக்கும். இந்த நன்னெறி நான்கினால் மட்டுமே அவன் உணரப்படுவான். இங்கே உணரப்படுவான் என்ற சொல்லைக் கவனிக்கவேண்டும்.

அறியப்படுவான் என்று சொல்லவில்லை. உணரப்படு வான் என்று கூறினார். உணர்வு என்பது மெய்யுணர்வைக் குறிக்கும். அறிதல் என்பது ஐம்புலன்களினால் வரும் அறிவைக் குறிக்கும். இறைவன் அறிவாராய்ச்சிக்கு அகப்படான். மெய்யுணர்வில் நேர்ப்படுவான். எனவேதான் மிக எச்சரிக்கையாக 'உணர்தல்' என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார் திருமூலர். உணர்ந்தான் என்பது உணரப்படுவான் என்று படுசொல் தொக்கி வந்தது. அதாவது உணர்ந்தான் என்பது அப்படி உணரப்படுபவனைக் குறிக்கும்.

இனி சிலர் நான்கு வேதங்களை உணர்ந்தான் என்று பொருள் கூறுவதும் உண்டு. நமக்கு வேண்டுமானால் நான்கு வேதங்களையும் உணர்தல் மிகப் பெருமைப்படத் தக்கதாய் இருக்கலாம். பேரறிவுப் பரம்பொருளுக்கு நான்கு வேதங்களை உணர்ந்திருத்தல் என்பது பெருமைப் படத்தக்க பெரிய விஷயமில்லை. எனவே அந்தப் பொருள் சிறப்பானதல்ல. அப்படியே அதைக் கொள்ளும் போதும் வடமொழி வேதம் நான்கையும் இங்கே எண்ணிவிடக் கூடாது. அறம், பொருள், இன்பம், வீடு என்கிற பண்டாய நான்மறையான தமிழ்வேதம் நான்கையும் இங்கே கொள்ளுவதே ஏற்கத்தக்கது. ஏனெனில் ஆசிரியர் திருமூலர் தான் நந்தி அருளாலே சதாசிவன் ஆனவன் என்றும், 'சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்' என்று சதாசிவ தத்துவம் முழுவதும் முத்தமிழ் வேதமாக மணந்தது என்று கூறியதாலும் அவர் கருத்திற்கு ஏற்ப தமிழ்வேதம் நான்கையும் கொள்வதே சரி. வடமொழி வேதம் நான்கையும் பொருட்படுத்துவது ஆசிரியர் திருமூலர் கருத்திற்கு மாறானது.

அடுத்ததாக 'ஐந்து வென்றனன்' என்று கூறியதைப் பார்ப்போம். சிலர் இதற்கு ஐம்புலன்களை வென்றவன் என்று உரைகாண்பது உண்டு. அப்படிக் கொண்டால் அது

ஒரு பிரச்சினைக்கு வழிவகுத்துவிடும். அதாவது இறைவனுக்கும் ஐம்புலன்கள் உண்டு என்று கூறியதாகிவிடும். அப்படியானால் இறைவனுக்கும் நமக்கும் வேறுபாடு இல்லை. அப்படி இருக்க முடியுமா? நமக்குள்ள ஐம்புலன்கள் நமக்கு இறைவன் கொடுத்த கருவிகள். இவற்றால் நாம் உலகைச் சுட்டிச் சுட்டி ஒவ்வொன்றாக அறிகிறோம். இந்தக் கருவிகள் நமக்கு வேண்டும். இறைவனோ கருவிகளின் துணையை வேண்டாத பேரறிவு உடையவன். எனவே ஐந்து வென்றனன் என்பதற்கு ஐம்புலன்களை வென்றவன் என்று பொருள் கூறுவது வேண்டாத விபரீதத்திற்குத் தூண்டாத அழைப்பாகி விடும்.

எனவே ‘ஐந்து வென்றனன்’ என்பதற்கு ஐந்தால் வென்றவன் என்று பொருள் காணுவதே சரி. ‘ஐந்தால்’ என்றால் ஐந்தொழிலால் என்று பொருள் கொள்ள வேண்டும். அறியாமையாகிய இருட்துன்பத்தில் மூழ்கிய உயிர்களை ஐந்தொழில்கள் ஆற்றி அவற்றின் துன்பத்திலிருந்து மீட்டு வெற்றி காண்பவன் என்ற பொருளில் ‘ஐந்து வென்றனன்’ என்று பாடினார் திருமூலர். ஐந்தொழில்கள் ஆவன: படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல்.

அவ்வாறு வெற்றி கொள்வதற்கு அவன் ஆறு வழிகளைக் கையாளுகிறான். அவை: வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம். இவற்றை வடமொழியில் ஷடத்துவா என்று கூறுவர். அத்துவா என்றால் வழி என்று பொருள். ‘ஷட்’ என்ற வடமொழி தாது ஆறு என்ற எண்ணைக் குறிக்கும். எனவே ஷடத்துவா என்றால் ஆறு வழிகள் என்று பொருள். வன்னம், பதம், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்ற இந்த ஆறுவழிகளை எழுத்து, சொல், மந்திரம், கலை, தத்துவம், உலகம் என்று தமிழில் கூறலாம்.

அறிவுப் பொருள்களுக்கு அறிவு விளங்க வேண்டு மானால் சொல்லிக் கொடுக்க வேண்டும். உயிர்களான அறிவுப்பொருள்களுக்கு அறிவு விளங்க இறைவன் முதலில் எழுத்துகளைப் படைக்கின்றான். எழுத்துகளின் கூட்டம் தானே சொல்! சொல்லால்தானே அறிவை விளக்கவேண்டும். சொல்லி விளக்க வேண்டும் என்றால் ஒவ்வொரு சொல்லுக்கும் அது குறிக்கின்ற பொருள் வேண்டும்.

மாடு என்ற சொல் கூறவேண்டுமானால், கூறி அது விளங்க வேண்டுமானால், மாடு என்ற விலங்கு ஒன்று வேண்டும். பானை என்று ஒரு சொல்லைக் கூறி விளக்க வேண்டுமானால், பானை என்ற ஒரு பொருள் வேண்டும். எனவே கடவுள் சொல்லைப் படைக்குமுன் எழுத்து களைப் படைக்கின்றான். எழுத்துக்களைச் சேர்த்து சொல் லைப் படைக்கின்றான், அந்தச் சொல் குறிப்பிடுகின்ற பொருளைப் படைக்கின்றான். இதனால்தான் தொல் காப்பியர்கூட 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று நூற்பா செய்தார்.

சொல்லுக்கும் அது குறிக்கின்ற பொருளுக்கும் தொர்டர்பு உண்டு என்று புலனாகிறது. அந்தத் தொடர்பை முழுமையாக, சரியாகப் பயன்படுத்துபவர்கள் அருளாளர்கள். எனவே அவர்கள் சொல் பலிக்கிறது. நம் சொற்களுக்கு எல்லாம் அவ்வளவு பலம் இல்லை. எனவே சொல்லின் முழுபலத்தால் தொடர்பு கொள்ளும் போது அதை மந்திரம் என்றனர். அந்த வாக்கு மந்திர வாக்கு. மந்திர வாக்கு முழு பலத்துடன் கூடிய சொல்லாதலால் அதனை நிறைமொழி என்றனர். நம்முடைய மொழிகள் எல்லாம் பலிதமாகாததால் குறைமொழி; வெறும் சொற்கள். அருளாளர் வாக்குகள் எல்லாம் நிறைமொழி; அவர் வாக்கு மந்திரம். இதைத் தொல்காப்பியரே மிகச் சரியாகக் கூறுகிறார்:

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'

எனவே இறைவன் முதலில் எழுத்துக்களையும், எழுத்துக்களால் ஆன சொல்லையும், சொல்லில் வலுமிக்க மந்திரத்தையும் படைக்கின்றான். இவை மூன்றும் சொல்லுலகம் எனப்படும். பின்னர் இவற்றிற்குத் தொடர்பான கலை, தத்துவம், உலகம் என்ற பொருள் உலகத்தைப் படைக்கின்றான்.

கலை என்பது அறியாமையாகிய இருளைப் போக்கிப் பொருள்களைப் புரிய வைக்கும் ஒளிக் கருவி. இதை நமக்கு உடம்பில் ஒன்றாய் படைத்து அறியாமையை நீக்கு கிறான். உடம்பில் இந்தக் கலை என்ற கருவிக்கு உதவி செய்ய 35 தத்துவங்களையும் 60 தாத்துவிகங்களையும் படைத்து அவற்றின் மொத்தப் பிசைவை உடம்பாக தருகிறான். இந்த உடம்பினால் அனுபவித்து உண்மைகளை அறிய இந்த உலகத்தைப் படைக்கிறான்.

இவ்வாறாக எழுத்து, சொல், மந்திரம், கலை, தத்துவம், புவனம் என்ற ஆறு அமைப்புகளின் வழியாக நமக்கு அறிவு கொளுத்தி, அறியாமை இருளை அகற்றி தன்னோடு இரண்டறக் கலக்கச் செய்து பேரா, அழியா இயற்கைப் பேரின்பத்தை நமக்கு நல்குகிறான்.

இதனைக் கருத்தில் கொண்டே 'ஆறு விரிந்தனன்' என்று பாடினார்.

அடுத்து 'ஏழும்பர் சென்றனன்' என்பதைப் பார்ப்போம். நாம் உய்வதற்கு ஆறு வழிகளைக் கையாண்டான் என்று முன்னே பார்த்தோம். அதில் நமக்குக் கிடைப்பது இந்த உடல். இந்த உடலில் புகுந்து இறைவன் நம்மை ஒளியேற்றி உய்யக் கொள்ள வேண்டும். இந்த உடலில் ஒளியாக உள்ளே புகுந்து உடலின் ஆதாரமாகிய சுழிமுனை நாடியில் ஆறு ஆதாரங்களைத் தமது ஒளியால்

மலர்த்தி மலர்த்தி உயிராகிய ஆன்மாவை மேலேற்றி, இறுதியில் உடலுக்கு மேலே தலையோட்டின் துளையாகிய 'பிரமரந்திரம்' என்பதைத் திறந்து அதன் மேல் மலரும் ஏழாவது ஆதாரமாகிய சகஸ்ராரம் என்கிற 1008 இதழ் மலரை மலர்த்தி ஆட்கொள்வான்.

இம்பர் என்பது இவ்வுலகம் என்று தமிழகராதி கூறும். அதுபோல உம்பர் என்பது அப்பால் அல்லது காணாத உவ்விடம் என்று பொருள் பெறும். இங்கே உடலுக்குள்ளே உள்ள ஆதார இடங்களைக் குறித்ததால் உம்பர் என்றார். ஏழு ஆதாரங்களாவன: 1) மூலாதாரம், 2) சுவாதிட்டானம், 3) மணிபூரகம், 4) அநாகதம், 5) விசுத்தி, 6) ஆஞ்ஞை, 7) சகஸ்ராரம்.

ஏழாவது ஆதாரமான சகஸ்ராரத்தில் சிவன் செறிவதைத் தான் சிவனடி என்று கூறினர். இதைத் தான்,

"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து"

என்று மணிவாசகர் பாடினார்.

இதையே 'ஏழும்பர் சென்றனன்' என்று பாடலில் திருமூலர் விளக்கினார்.

அடுத்து திருமந்திர முதல் பாடலில் நாம் விளக்கம் காண வேண்டிய இறுதிப் பகுதி 'தானிருந்தான் உணர்ந்து எட்டே' என்பது. இதன் பொருள் அவன் எட்டாய் இருந்தான் என்பது. இந்த எட்டிற்கு இரண்டு பொருள் கூறலாம்.

அவன் மூன்று குணங்களாய் நின்றனன் என்ற இடத்திலேயே அவனது இந்த மூன்று குணங்களையே எட்டாக்கிக் காட்டுவர் பெரியர் என்று கூறியிருந்தோம் அல்லவா? அதைப் பார்ப்போம்.

இறைவனது மூன்று குணங்களாக நாம் பார்த்தவை 1) அறிவு, 2) இச்சை, 3) செயல்.

உயிர்களாகிய நம்மை உய்விக்க எண்ணுகிறானே அதற்கு அவனிடம் பேரருள் அமையவேண்டும். இந்தப் பேரருளினைச் செயல்படுத்த உயிர்கள் அவனிடம் ஈடுபட வேண்டுமானால், அவன் வரம்பில் இன்பமுடையவனாய் இருத்தல் வேண்டும். எனவே இச்சை என்ற குண இயல்பிலே பேரருளுடைமை என்பதையும் வரம்பில் இன்பம் உடைமை என்பதையும் அடக்கலாம்.

இனி அவனிடம் வரம்பிலின்பம் இருக்கிறது. அதை வாரி வழங்க பேரருளுடைமை இருக்கிறது. இவை இருந்தாலும் போதாது. அதைச் செயல்படுத்தும் ஆற்றல் வேண்டும். இதற்கு முதலில் அவன் வரம்பிலாற்றல் உடையவனாய் இருத்தல் வேண்டும். ஆற்றல் இருந்தால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்த அவன் சுதந்திரம் உடையவனாக இருத்தல் வேண்டும். அதாவது தன் வயத்தனாய் இருத்தல் வேண்டும். அதுமட்டுமல்ல பேரருளைச் செயல்படுத்த, அதுவும் எல்லைப்பட்ட உயிர்களுக்கு உதவ, அவ்வவற்றின் எல்லைக்கேற்ப தொழிற்படுத்த உடம்பெடுக்க வேண்டும். நம் உடம்போ பல அழுக்குகளையும், ஆபாசங்களையும் கொண்டு நமக்கு ஒரு சிறையாக இருக்கிறது. அதுபோல் அவன் எடுக்கும் உடம்பு இருக்கக் கூடாது. அவன் தூய உடம்பினனாய் இருத்தல் வேண்டும். அந்தத் தூய உடம்பு அவனைச் சிறைப்படுத்துவதாக இருக்கக் கூடாது. அது இயற்கையாகவே சிறைப்படுத்தும் பாசத்திலிருந்து நீங்கி நிற்றல் வேண்டும். எனவே செயலாற்றல் என்ற இயல்பில் வரம்பிலாற்றலுடைமை, தன் வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையிலேயே பாசங்களினின்றும் நீங்கி நிற்றல் என்பவை அடங்கும்.

அடுத்து இதையெல்லாம் செயல்படுத்த அறிவு வேண்டும். அந்த அறிவு அவன் பிறரிடமிருந்து பெறுவதாக இருக்கக் கூடாது. அவன் பிறரிடமிருந்துதான் அறிவு பெற வேண்டும் என்றால், அவனது சுதந்திரமே பறிபோய், அவன் கடவுள் என்பதே பொய்யாகி விடும். எனவே அவனது அறிவு இயற்கையாக, தானே உணரும் அறிவாக இருக்க வேண்டும். பிறகு அந்த அறிவு ஓர் எல்லைக்குட்பட்ட அறிவாய் இருந்தால் போதாது. எல்லாம் அறிந்த அறிவாக இருக்க வேண்டும். அதாவது முற்றறிவு என்று சொல்லத்தக்கதாய் இருக்க வேண்டும். எனவே, அவனது அறிவு என்ற குணஇயல்பில் இயற்கை உணர்வினன் ஆதல் என்பதும், முற்றறிவு என்பதும் அடங்கும்.

ஆக, அவனது இச்சை என்ற குண இயல்பில் பேரருளுடைமை, வரம்பிலின்பமுடைமை ஆகிய இரண்டும், அவனது செயல் என்ற குண இயல்பில் வரம் பிலாற்றலுடைமை, தன்வயத்தனாதல், தூய உடம்பினன் ஆதல், இயற்கையிலேயே பாசங்களிலிருந்து நீங்கி நிற்றல் என்கிற நான்கும், அவனது அறிவு என்ற குண இயல்பில் இயற்கை உணர்வினன் ஆதல், முற்றறிவுடைமை என்ற இரண்டும் என மொத்தம் எட்டும் அடங்கும். மனதில் பதிவதற்கு இதை இப்படிப் பார்க்கலாம்.

அறிவு - 1) இயற்கை உணர்வினன் ஆதல்
2) முற்றறிவுடைமை
இச்சை - 3) பேரருளுடைமை
4) வரம்பிலின்பம் உடைமை
செயல் - 5) வரம்பிலாற்றல் உடைமை
6) தன் வயத்தனாதல்
7) தூய உடம்பினன் ஆதல்
8) இயற்கையிலேயே பாசங்களிலிருந்து நீங்குதல்

இறைவனின் மூன்று குணங்களே இறைவனுக்கு வேண்டிய எட்டு குணங்களாக விரிவதைக் காண்க. அதனால்தான்

'கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை'

என்று வள்ளுவரும், 'எட்டுவான் குணத்தீசர்' என்று அப்பரும், 'குருபுங்கவ எண்குண பஞ்சரனே' என்று அருணகிரியாரும் பாடினர்.

அவனது மூன்று குணங்களே உயிர்களுக்கு உதவும் வகையில் எட்டு குணங்களாக உணரும்படி தானிருந்தான் என்று திருமந்திர முதல் பாடலின் இறுதிப் பகுதியான 'தானிருந்தான் உணர்ந்து எட்டே' என்பதற்குப் பொருளாகக் கொள்ளலாம்.

இதற்கே இன்னொரு பொருள் உண்டு என்று முன்னர்க் கூறினோம். அதை இப்போது பார்ப்போம்.

இறைவன் நமக்கு அறிவு கொளுத்துவதற்காக பொருள் உலகத்தைப் படைத்தான் என்று பார்த்தோம். நமக்கு அறிவு கொளுத்த வேண்டுமானால் அவன் இந்த பொருள் உலகை உள்ளிருந்து இயக்க வேண்டும். பொருள்களை இரண்டாகப் பிரிக்கலாம். ஒன்று சடப்பொருள்; மற்றது சித்துப் பொருள் அல்லது அறிவுப் பொருள். சடப் பொருள் நம் கண்ணெதிரே பார்க்கின்ற பிரபஞ்சம் - அதாவது உலகம். சித்துப்பொருள் உயிரினங்களாகிய நாம். இவற்றை இறைவன் உள்ளிருந்து இயக்க வேண்டும்.

பிரபஞ்சத்தை ஐம்பூதங்களின் கலவை என்று கூறிவிடலாம்.

"மண்திணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்

வளித்தலைஇய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை"

என்று புறநானூற்று 2ஆம் பாடல் இதைத் தெளிவு படுத்துவது காண்க. ஆக வான், காற்று, தீ, நீர், நிலம் என்ற ஐந்தும் தான் மொத்தப் பிரபஞ்சமும். இவற்றை இறைவன் உள்ளிருந்து இயக்க வேண்டும். அத்துடன் பிரபஞ்சத்தில் ஒளிர் பொருள்களாக இரண்டை வைத்திருக்கிறான். ஒன்று சூரியன்; மற்றது சந்திரன். இவற்றையும் இறைவன் உள்ளிருந்து இயக்க வேண்டும்.

சிலர் சூரியனையே இறைவனாகக் கொண்டு காயத்திரி மந்திரம் சொல்லி வழிபடுவர். 'அந்தியுள் மந்திரம் ஐந்தெழுத்துமே' என்று சம்பந்தரும், 'அருக்கனாவான் அரன்உரு அல்லனோ' என்று அப்பரும் அவர்களுக்கு அறிவுறுத்தி நெறிப்படுத்தினர். அருக்கன் என்றால் சூரியன் என்று பொருள். சூரியனை வணங்குகிறீர்களே, அது ஹீலியம் வாயுவால் ஆன சடமல்லவா? அதற்குள், அந்த அருக்கனுக்குள் இருந்து இயக்குபவன் அரன் அல்லவா? என்று அப்பர் அவர்களை நெறிப்படுத்துகிறார்.

எனவே சூரியன், சந்திரன் ஆகிய பகலொளியையும், இரவொளியையும் உள்ளிருந்து இயக்குபவன் இறைவன். இங்கே பார்த்தால் ஐம்பூதங்களும், சூரியனும், சந்திரனும் சடப்பொருள்கள். ஆனால் இவற்றை அனுபவிக்கும் உயிர்களோ சித்துப்பொருள்கள். இவற்றையும் இறைவன் உள்ளிருந்து இயக்குகின்றான். உயிர்களுக்கு இன்னொரு பெயர் இயமானன் என்பது. காரணம், உடலை இயக்குவது உயிரல்லவா? எனவே இயக்கும் உயிரை இயமானன் என்றனர். இதுவே வடமொழியில் எஜமானன் என்று ஆயிற்று. இந்த இயமானனும் தானே இயங்குவ தில்லை. இறைவனால் இயக்கப்படுகிறது. அப்படியானால்

இதற்கு இயமானன் என்ற பெயர் எப்படிப் பொருந்தும் என்ற கேள்வி எழலாம். உயிர் உடலைப் பொறுத்தவரை இயமானன். எனவே தான் அந்தப் பெயர்.

இப்படிப் பார்த்தோமானால் இறைவன் பிரபஞ்சத்தில் மொத்தம் எட்டுப் பொருள்களில் உள்ளிருந்து இயக்கு கிறான். அவையாவன: *1)* வான், *2)* காற்று, *3)* தீ, *4)* நீர், *5)* நிலம், *6)* சூரியன், *7)* சந்திரன், *8)* இயமானன் ஆகிய உயிர்.

இந்த எட்டிலும் இறைவன் சேர்ந்து நிற்கும் நிலைக்குத் தான் இறைவனது அட்ட மூர்த்தம் என்று பெயர். இறைவனது இந்த அட்ட மூர்த்தத்தை வணங்காத அருளாளர் இல்லை. இவ்வாறு 'தான் எட்டாய் இருந்தான் உணர்ந்தே' என்று அட்ட மூர்த்தமாய் இறைவன் இருந்தான் என்று திருமூலர் முதல் பாடலின் இறுதியில் இறைவனை வணங்கினார் என்று கூறலாம்.

இந்தப் பாடலில் இன்னொன்றையும் கவனிக்க வேண்டும். நான்கு உணர்ந்தான், ஆறு விரிந்தான், எட்டாய் உணர்ந்தான் என்று தன் வினையாகவே கூறியுள்ளார். அவை முறையே உணரப்பட்டான், விரித்தான், உணர்த்தினான் என்று பொருள் தந்து நிற்கும். இவற்றைத் தன் வினையாகக் கூறியதற்குக் காரணம் இறைவனை வினைப்படுத்துவார் இல்லை என்ற காரணத்தால் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

இப்படியே ஒவ்வொரு பாடலுக்கும் பொருள் கூறிக் கொண்டு செல்லலாம். ஏடு இடம் தராது என்று விரி வஞ்சி இனி வரும் பாடல்களுக்கு சுருக்கமான உரை செய்வோம்.

இறைவனுடைய இலக்கணங்களை எல்லாம் கொட்டி முதல் பாடலில் கடவுளைக் காட்டி வாழ்த்து கூறியவர்

அதற்கு அடுத்த பாடலில் அவனுக்கு உரிய மற்றொரு முக்கிய அம்சத்தைக் கூறுகிறார். அதாவது கடவுள் என்றால் அவனுக்கு நம்மைப்போல் பிறப்பும், இறப்பும் இருக்கக் கூடாது. நம்மைப்போல் அவனுக்கும் பிறப்பு உண்டென்றால் அவன் நம்மைப்போல் இறப்பவனாவான். அவனால் நமக்கு என்ன பயன்? எனவே தான் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் சிவபெருமானைப் பெயர் சொல்லி அழைக்காமல் 'பிறவா யாக்கைப் பெரியோன்' என்றார்.

'பெம்மான் முருகன் பிறவான் இறவான்'

என்பது அருணகிரியார் வாக்கு. சொறி, படைக்கு மருந்து விற்கிறவன், தான் சொறிந்துகொண்டே விற்றால் அவன் விற்கும் மருந்தை யார் வாங்குவார்கள்?

எனவே பிறப்பு, இறப்பு இல்லாதவனிடம் சென்று சேர்ந்தால் தான் நமக்கும் பிறப்பும், இறப்பும் அறும். அவனிடம் தான் பட்டினத்தார் போல,

'பிறப்பு இறப்பு என்னும் இரண்டின்
கடற்படாவகை காத்தல்நின் கடனே'

என்று வேண்ட முடியும்.

எனவே நான் கூறிய கடவுள் கூற்றை உதைத்தவன். அதாவது யமனது உயிரையே எடுத்தவன். எனவே அவனை அண்டினோர்க்கும் இறப்பு வராது; அதனால் பிறப்பும் இல்லையாய் ஒழியும் என்று கூறுவார் போல,

'கூற்றுதைத் தானை யான் கூறுகின்றேனே'

என்று இரண்டாம் பாடலில் தான் வணங்கும் கடவுளை மேலும் தெளிவு படுத்துகிறார்.

இந்த இறைவனை 'புக்கு நின்று யான் போற்றி செய்வேனே' என்று இன்னொரு பாடலில் கூறுகிறார்.

இன்று நாடெங்கும் திருக்கோயில்களில் அருச்சனை செய்யப்படுகிறது. ஆனால் நமநமவென்று வடமொழியில் அர்ச்சனை செய்வதைத் தமிழில் போற்றி என்று கூறிச் செய்க என்று திருமூலர் இதன் மூலம் தமிழ் வழிபாட்டை அறிமுகப்படுத்தினார் என்று சொல்லலாம்.

ஏன் சார்! சிவபெருமான் ஒருவர் தான் தெய்வமா? திருமால் இருப்பதாகச் சொல்கிறார்களே! அடையாற்றில் அட்டலட்சுமி கோயில் இருக்கிறதே! ஊரெங்கும் கார்த்திகை, மார்கழி, தையில் ஐயப்பன் வழிபாடு அமர்க் களப்படுகிறதே என்று யாரோ திருமூலரிடம் சொல்லி இருப்பார்கள் போலிருக்கிறது. உடனே அவர் சொல்கிறார்:

"சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

அவன் யார் தெரியுமா? நீங்கள் சொல்கிற பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் இவர்களுக்கும் மேலானவன்.

"முன்னை யொப்பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்"

இவனையே நான் தொழுகிறேன். இவனால் தொழப் படும் தெய்வம் வேறில்லை. ஏனெனில் இவனே முழு முதற்கடவுள்.

'என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே'

இவன் சோதியே வடிவானவன்; அது மட்டுமல்ல நீதியும் அவன் வடிவே.

'சோதியுமாய்ச் சுருங்காததோர் தன்மையுள்
நீதியுமாய் நித்தம் ஆகி நின்றானே'

இவனுக்கு என்று ஒரு தனித்த அடையாளம் உண்டு. அது என்னவெனில் உயிர்களுக்குக் கருணை புரிய

ஒப்பற்ற ஒன்றாய் இருந்தவன் அருள்பொழிய இரண்டா னான். அந்த அருள் அவனது சத்தி. அவன் அந்த சத்திக்கு இடம் கொடுத்து நின்றான். ஆணுக்கு அந்தக் காலத்து பெண் போல, சத்தி இறைவனிடம் அடங்கி இருக்கிறது. எனவே அவன் 'மாது குலாவிய வாள்நுதல் பாகன்'. திருமூலர் இப்படித் தான் வணங்கும் கடவுளை, கடவுள் வாழ்த்துப் பகுதியில் அடையாளம் காட்டிக் கொண்டே போகிறார்.

இத்தகைய இறைவனுடன் தனக்கு ஏற்பட்ட உறவை மகிழ்ந்து போற்றி இதற்கு ஈடு இணை இல்லை என்று கூறுகிறார்.

'ஈசன் உறவுக்கு எதிரில்லை தானே' என்று அவர் மகிழ்ந்து பாடுவதைப் பாருங்கள்!

இப்படி யாராவது இவனைப் போற்றினால் அவனை இவன் ஏதாவது ஒரு வகையால் தலைவனாக்கி விடுவான். அப்படித் தான் அளகாபுரி வேந்தன், சிவபெருமானாகிய இவனைப் போற்றி செய்து வந்தான். அவனை உடனே நிதிபதியாக்கி குபேரன் ஆக்கிவிட்டான். அவ்வாறே, நம்மையும் ஏதாவது ஒன்றிற்கு பதியாக்கி விடுவான்.

அதுபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி யாதரித்து ஆக்கமது ஆக்கின்
இதுபதி கொள்ளென்ற எம்பெருமானே.

ஐயா! அந்த அளவிற்கு எனக்குப் பக்குவமில்லை என்கிறாயா? என்னையறியாமல் பல தவறுகளைச் செய்து விடுபவன் நான். எனக்கு எப்படி அவன் அருள் கிடைக் கும்? திருமூலர் இப்படிக் கேட்பவரைத் தேற்றுகிறார்.

அந்த இறைவன்,

'பிழைக்க நின்றார் பக்கம் பேணி நின்றானே'

அந்த இறைவன்,

'வணங்கி நின்றார்க்கு வழித்துணையாமே'

ஒரே ஒரு நிபந்தனை. உனது மனத்திலே கோணலான எண்ணங்கள் இருக்கக் கூடாது.

''கோண நில்லாத குணத்தடியார் மனத்து

ஆணியனாகி அமர்ந்து நின்றானே''

இந்தப் பாடல் வேறொரு வகையிலும் நமக்குப் பயன்தருவது.

இறைவனை ஏதாவதொரு குறியிடத்தில் எழுந்தருளச் செய்தால் ஒழிய நம் போன்ற மனிதர்களால் வழிபாடு செய்ய இயலாது. அருவமான அந்த பரம்பொருள் நாம் வணங்குவதற்கு வசதியாக நாம் எந்த உருவத்தில் அதை எண்ணுகிறோமோ அந்த இடத்தில் தமது எளி வந்த வான் கருணையினால் எழுந்தருளி அருள்பாலிக்கும். அந்தக் குறியிடம் இலிங்கம் என்று வைப்போம். அதில் இறைவனை எழுந்தருளச் செய்ய வேண்டுமானால் இந்தப் பாடலை நாம் உருக்கமுடன் பாடினால், இது மந்திரம் ஆதலாலே பெருமான் உடனே எழுந்தருளிவிடுவான். பாடல் வருமாறு:

காண நில்லாய் அடியேற்கு உறவுயாருளர்?
நாண நில்லேன் உன்னைநான் தழுவிக்கொளக்
கோண நில்லாத குணத்தடியார் மனத்து
ஆணியனாகி அமர்ந்து நின்றானே.

இந்த இறைவன் பண்ணமைந்த பாடலில் விருப்பம் அதிகம் உடையவன்.

எனவே,

பண்ணகத்து இன்னிசை பாடல் உற்றானுக்கே
கண்ணகத்தே நின்று காதலித் தேனே!

இதனை அறியாமல் வேறு எந்தெந்த தெய்வத்தையோ இதுவே தெய்வம் - பதி என்று பலவற்றை முன்னர்

வணங்கினர். அவர்கள் எல்லாம் தெய்வம் ஒன்றே; அது இதுவே என்று இதன் மெய்ம்மையை உணராமல் எந்தெந்த தெய்வத்திற்கோ துதிகள் பல சொல்லிப் பயன் கிட்டாமல் நெஞ்சினுள் வாடுகின்றாரே. இவர்களை என்ன சொல்ல? என்று ஒரு பாடலில் கூறுகிறார்:

பதிபல ஆயது பண்டுஇவ் வுலகம்
விதிபல செய்துஒன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரம் சொல்ல வல்லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே.

இங்கே ஒரு நயம் காட்டுகிறார். அதாவது தெய்வ மல்லாதவற்றை தெய்வம் என்று வணங்கி துதிபல தோத்திரம் சொல்கின்றனர். ஆனால் பயனடைந்தாரில்லை. பயனடையாதவுடன் இதை வெளியே சொன்னால் இப்படி மதியில்லாமல் இவ்வளவு நாள் வீணாக்கி விட்டாயே என்று பிறர் சொல்லிக் கேலி பேசக்கூடும் என்பதால், அதை நெஞ்சுக்குள்ளேயே வைத்து வாடுகின்றார்களாம்.

இங்கே பயன் என்பது, இதுதான் உண்மைத் தெய்வம் என்று அறிவதால் வரும் பயன். ஏனெனில் தெய்வ மல்லாத ஒன்றைத் தெய்வம் என்று வணங்கினால், அதுவும் வேண்டுவனவற்றை வழங்கும். எப்படியென் றால் அதற்கு வேண்டுவனவற்றை வழங்க அதிகார மில்லை என்றாலும் பரம முதற்காரணப் பொருளே இந்தக் குழந்தை ஏமாறக் கூடாது என்று அந்தத் தெய்வத்தின் மூலம் வழங்குமாம். இதை இன்னொரு பாடலில் கூறுகிறார்:

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே.

இதன் பொருள்: உன்னால் ஆன நினைவில் உருவில் வணங்க அந்த ஒப்பிலி வள்ளல் வந்து அருள்வான். எதை நீ வேண்டினாயோ அதை அருள்வான். "அப்புறம் என்ன? வேறு தெய்வங்களைத் தவறாக முழு முதல் தெய்வமாக வணங்கினாலும் இவனே வந்து அருள்வான் என்று சொல்லி விட்டீர்கள். அதையே வணங்கிவிட்டுப் போகிறோம். மதியில்லாமல் இவ்வளவு நாளை வீணாக்கிவிட்டோமோ என்று நெஞ்சுக்குள் வாடுவர் என்று முன்னே கூறியது எதற்கு?" என்று சிலர் கேட்கலாம். அதற்கு உரிய விடையை 'அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே' என்ற வரியில் கூறினார்.

அதாவது தெய்வமல்லாத சிறுதெய்வங்களை வணங்குகிறாய். அதன் வழியாக இறைவன் அருளுவான் என்றால் அந்த வழி எதையெதைக் கொள்ளுமோ அதற்கு ஏற்பத்தான் அருளுவான். அந்தத் தெய்வத்தின் தன்மைகள், குணங்கள், அதன் அதிகார வீச்சு இவற்றிற்கு ஏற்பத்தான் இறைவன் அருளுவான். அந்தத் தெய்வத்திடம் அது வழங்க இயலாத வீடுபேற்றைக் கேட்க முடியாது. ஏனெனில் அது எல்லையற்ற இன்ப வடிவினதான எல்லையற்ற பரம்பொருள் அல்ல. எனவே அதன் வழி எல்லையற்ற இன்பமான வீடுபேற்றைப் பெறமுடியாது.

எனவே தான் எப்பரிசாக - எந்தத் தன்மைகளை உடையதாக - நீ வணங்குகிறாயோ அப்பரிசாக அந்தத் தன்மைகளுக்கு ஏற்ப இறைவன் அருளுவான் என்று கூறினார். இதற்குப் பொருளெச்சம் ஒன்று உண்டு. அதாவது இப்படி தெய்வமல்லாத ஒன்றைத் தெய்வமாகக் கொண்டு அந்தத் தெய்வத்தின் தன்மைக்கேற்ப சிறு பயன்களை அடைவதைவிட புத்திசாலியாகிய நீ என்ன செய்ய வேண்டும்? அந்தத் தெய்வத்தின் மூலம்

பயனளிக்கும் பரம முதற்காரணப் பொருளான சிவபெருமானையே வணங்கலாமே! வணங்கி வீடு பேறாகிய விழுமிய பயனைப் பெறலாமே! என்பது தான் இந்தப் பாடலின் பொருளெச்சம்.

இன்னொரு பொருளும் இதற்கு உண்டு. அதாவது தெய்வமல்லாத ஒன்றைத் தெய்வமாகக் கொண்டாடுவது ஒன்று. அதற்கு மேலே கூறிய பொருள் பொருந்தும். அடுத்தது பரம முதற்காரணனான சிவபெருமானே இந்தத் தெய்வத்தின் பேரொடு இங்கே விளங்குகிறான் என்று வணங்கும் தன்மை. இத்தன்மைக்கு ஏற்ப வீடுபேறாகிய விழுப்பேற்றை நல்குவான் ஈசன் என்று கூற அப்பரிசு ஈசன் அருள்பெறலாமே என்று பாடலில் தெளிவு படுத்தினார் என்றும் கொள்ள வேண்டும்.

எல்லாம் நாம் எப்படி நினைத்து வணங்குகின்றோம் என்பதைப் பொறுத்தது என்று இப்பாடலில் தெளிவு படுத்தினார்.

இங்கே இப்பாடலில் ஒப்பிலி வள்ளல், ஆரா அமுது, ஊழி முதல்வன் என்பவை நுட்பமான பொருள்களை உடைய செறிவான சொற்றொடர்கள். ஒரு வள்ளல் கேட்டவர்க்கெல்லாம் வாரிக் கொடுக்கின்றான் என்று வைப்போம். அவன் பார் போற்றும் வள்ளல் எனப் படுவான். அந்த வள்ளல் என்ற பெயரையும் இன்னொரு வர்க்கு அளித்து வாரி வழங்குவது மிகப் பெரிய விஷய மல்லவா? அதாவது கேட்டவர்க்கெல்லாம் கேட்டது கேட்டபடி கொடுக்கிறான் ஒருவன்; ஆனால் தன் பெயரில் அல்ல; வேறொருவன் பெயரில் என்னும்போது தனக்கு வரும் வள்ளல் என்ற பெயரையே தியாகம் செய்து விடுகிறான். அவனை என்ன சொல்வது? அவன் தான் ஒப்பிலி வள்ளல். இறைவன் தான் அருளுகிறான்;

சிவபெருமான்தான் அருளுகிறான்; ஆனால் அவரவர் எந்தெந்த தெய்வங்களை வணங்குகிறார்களோ அவர்கள் பெயரில் அருளுகிறான். இது எப்பேர்ப்பட்ட பெருந் தன்மை? அதனால்தான் சிவபெருமானை திருமூலர் இப்பாடலில் ஒப்பிலி வள்ளல் என்று கூறினார்.

இனி, வாரி வழங்குகின்ற வள்ளல் வாரி வழங்க, வளங்கள் எல்லாம் வழங்க வழங்கக் குறையாது இருக்க வேண்டும். எனவே சிவபெருமானை 'ஆரா அமுது' என்றார்.

வாரி வழங்குகிறவன் ஒருநாள் இறந்து விட்டானானால் போச்சு! பிரளயம் வந்து உலகமே ஒடுங்கும் போதும், தான் ஒடுங்காமல் இருப்பவனாக இருக்க வேண்டும். எனவே சிவன் ஊழி முதல்வன், நீ கவலைப்பட வேண்டாம் என்று கூறுவார் போல 'ஊழி முதல்வனை' என்று போற்றிப் பாடினார்.

இப்படியெல்லாம் வாழ்த்த வல்லார்கள் மனத்துள் நின்ற சோதி அவன்:

> ***"வாழ்த்தவல்லார் மனத்து உள்ளுறு சோதியைத்***
> ***தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை"***

இங்கே இறைவனை தீர்த்தன் என்கிறார். இது தூய தமிழ்ச் சொல். நமது மலங்களையெல்லாம் கழுவி அதனால் வரும் துன்பத்தைத் தீர்ப்பதால் தீர்த்தன். நீரும் நமது மலங்களைக் கழுவித் தீர்ப்பதால் தீர்த்தம் என்று பெயர் பெற்றது.

இறைவனே மானிடச் சட்டை தாங்கி, நமது பக்குவம் கண்டு குருவாய் வருவான் என்பது சித்தாந்தம். குருவின் இடமாக நின்று நமக்கு தீட்சை செய்து மலங்களைக் கழுவித் தீர்ப்பதால் குருவிற்கும் ஆகு பெயராக தீர்த்தன் என்று பெயர் உண்டு.

இங்ஙனம் வாழ்த்த வல்லார்க்கு மனத்தில் நிற்கின்ற சோதி தன்னை நினைக்காதவர்க்கு இருளாகி விடுகின்றான். இதைத் தான் மணிவாசகர் 'சோதியே, துன்னிருளே' என்று சிவபுராணத்தில் பாடினார். எங்கும் நிறைந்த ஆண்டவன் தன்னை நினையாதவர் மனத்திலும் நிறைந்திருப்பான். ஆனால் தன்னை நினையாதபோது அவர்க்கு அவனது இன்பம் கிடையாது. இதனை,

'நினையாதவர்க்கு இல்லை நின்இன்பம் தானே'

என்று பாடினார்.

இவ்வாறு பலவாறாக இறைவனது இயல்புகளை எண்ணி ஒத்த சிவன் என் மனம் புகுந்தான் என்பதை ஒரு பாடலில் கூறுகிறார்.

அந்தி வண்ணா அரனே சிவனே என்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடியார் தொழ
முந்திவண்ணா முதல்வா பரனே என்று
வந்துஇவ் வண்ணன் என்மனம் புகுந்தானே.

இப்படி என் மனத்துள் புகுந்து நின்ற இறைவனைக் கொண்டும் கண்டும் கூத்தாடி இப்படிப் பாடிக் கடவுள் வாழ்த்தை நிறைவு செய்கிறார்:

கூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்று
ஆடுவன் ஆடி அமரர் பிரான்என்று
நாடுவன் நான்இன்று அறிவது தானே!

இந்தப் பாடலில் சிவன் என்று கூடச் சொல்லாதது காண்க. சிவன் என்பது பொதுப் பெயர். கடவுள் என்பது எப்படி பொதுப் பெயரோ அதுபோல சிவன் என்பதும் பொதுப் பெயரே. உள்ளும் கடந்தும் இருக்கும் இறைவனது தன்மையைக் குறித்து கடவுள் என்ற பொதுப்

பெயர் வந்தது. அதுபோல சிவன் என்பதும், அந்தக் கடவுள் மங்கள வடிவினன் என்று கடவுளின் பொதுத் தன்மையைக் குறித்தது. மங்களம் எங்கே இருக்குமோ அங்கே இன்பம் பொங்கும். எனவே மங்கள வடிவினன் என்றால் இறைவன் இன்ப வடிவினன் என்பதைக் குறிக்கும்.

மொழியால், மதத்தால், இனத்தால், இடத்தால், நாட்டால், இன்னும் பல்வேறு வகையால் நம்மிடையே வேறுபாடுகள் உண்டு. ஆனால் மனிதர்கள் மட்டுமல்ல எல்லா உயிரினத்திற்கும் பொதுவான சிந்தனை ஒன்று உண்டு. அது நிலைத்த இன்பத்தைப் பெறுவதே. எனவே தான் தொல்காப்பியரும்,

''எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்''

என்றார். இந்த நூற்பா இணை விழைச்சு இன்பத்தை அங்கே குறிப்பிட்டாலும் அது நிலைத்த பேரின்பத்திற்கும் பொருந்துமாதலால் பொதுவாக இன்பம் என்று இரட்டுற மொழிந்தார் தொல்காப்பியர். உயர்ந்தவர் சிந்தனை உயர்ந்ததன் மேற்றே.

எனவே, கடவுள் உள்ளும் புறமும் கலந்து நிற்பவன், எல்லாம் வல்லவன் என்றெல்லாம் கூறுவதைவிட எல்லா உயிரினங்களுக்கும் வேண்டும் இன்ப வடிவினன் என்பதே உயிர்களின் சிந்தையைக் கவரும் என்பதால் சிவன் என்ற இன்ப வடிவினன் எனப் பொருள் தரும் பொதுப் பெயரையே இறைவனுக்கு வழங்குவது பொருத்தம் என்று கருதினர்.

சிவம் என்பது கடவுளின் பொதுப் பெயர் என்பதால் தான் சமண மதத்தினர் கூட தாங்கள் கூறும் வீடுபேற்றை சிவகதி என்றனர். அவர்கள் அருகனை வணங்கிப் போற்றும் ஆயிரத்தெட்டு போற்றியில் 'ஓம் ரீம் சிவாய

நம' என்பதும் ஒன்று. ஆகவே சிவம் என்பதும், சத்தி என்பதும் பொதுப் பெயர்கள்.

இருப்பினும் ஒருவேளை சைவ சமயத்திற்கு இது உரியது என்று தவறாக பின்வருவோர் கருதி விடக்கூடாது என்பதற்காக அந்தப் பெயரையே கூறாமல் கடவுள் வாழ்த்துப் பாடலை முடிக்கிறார் திருமூலர். அந்தப் பாடலை ஒரு முஸ்லீம் சகோதரன் கூட அல்லாவை,

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்று
ஆடுவன் ஆடி அமரர்பிரான் என்று
நாடுவன் நான் இன்று அறிவதுதானே

என்று பாடித் துதிக்கலாம். ஒரு கிறித்துவச் சகோதரன் கூட,

ஏசுவை, ''சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான் என்று'' என்று முழுப்பாடலையும் பாடித் துதிக்கலாம். இப்படியே ஒவ்வொரு மதத்தினரும் அவரவர் விரும்பிய தெய்வத்தை இப்பாடல் கொண்டே வணங்கும்படி பாடிய திருமூலரின் சமயங்கடந்த நிலையை என்னென்று போற்றித் துதிப்பது?

மும்மூர்த்திகளின் முறைமை

அடுத்து, பாயிரத்தில் மும்மூர்த்திகளின் முறைமை என்பது வரவேண்டும். காரணம், கடவுள் வாழ்த்தில் பரம்பொருளான கடவுள் வாழ்த்துக் கூறினார். பின்னர் அப்பரம்பொருளின் ஏவலால் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என்ற தொழில்களைச் செய்யும் தேவர் களையும், அவர்களை பரம்பொருள் தேவாதி தேவனாய் இயைந்து இயக்கும் முறைமையையும் தெளிவு படுத்துவதே ஏற்புடையது. எனவே மும்மூர்த்திகளின்

பெருமை என்று வைக்காமல் மும்மூர்த்திகளின் முறைமை என முறையாக வைத்துப் பாடினார்.

பொதுவாக இவ்வுலகைப் படைப்பவன் பிரம்மன் என்றும், இவ்வுலகைக் காப்பவன் திருமால் என்றும், இவ்வுலகை ஒடுக்குபவன் உருத்திரன் என்றும் புராணங்கள், காவியங்கள், சமய நூல்கள் மூலம் நாம் அறிந்திருக்கிறோம். இன்னும் பலர் அவர்களையே பெருந்தெய்வம் எனப் போற்றி வணங்குவது உண்டு. அவர்கள் வானவர் என்ற உயிரினர். அவர்களைக் கொண்டு படைத்தல், காத்தல், ஒடுக்கல் என்பதை இறைவன் இயக்குகிறான், அவ்வளவு தான்! அப்படி இல்லாமல் அவர்களைத் தனித் தெய்வமாக நினைக்காதீர்கள்! அதுமட்டுமல்ல அவர்களையன்றி மனிதர்களில் சிலரையும் அப்படியே தெய்வம் என்று வணங்குவதையும் பார்க்கிறோம். சுடலை மாடன், பெரியண்ணன் என்று இன்னும் இதுபோல பல சிறு தெய்வங்கள்! பேரைத் தொகுக்க ஆரம்பித்தால் பட்டியல் நீளும். இவற்றையெல்லாம் தனித் தெய்வங்களாகக் கருதாதீர்கள்! இவர்கள் சிவனருள் இன்றி செயல்பட முடியாதவர்கள். இவர்கள் ஊனில் அமர்ந்து ஊக்கிச் செலுத்தும் சிவனை உணர்தலே செய்ய வேண்டியது என்று பாடுகிறார் திருமூலர். பாடல் வருமாறு:

''வானவர் என்றும் மனிதர் இவர்என்றும்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோரும் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே''

பெரும்பான்மை வழக்கான பிரம்மன், திருமால், உருத்திரன் ஆகியோர் வணக்கத்தை எடுத்துக் கொண்டால், இவர்கள் உண்மைத் தெய்வமல்ல என்று உணராததோடு தாம் தாம் வணங்கும் தெய்வமே பெரியது என்று சண்டையிட்டுக் கொள்கிறார்கள். வேடிக்கை என்ன

என்றால் இந்தச் சண்டையை இவர்கள் வணங்கும் அந்தத் தெய்வங்களே போட்டுக் கொள்வது தான். பிரம்மன் - நானே கடவுள் என்றும், திருமால் - உங்கப்பன் நான், நானே கடவுள் என்றும் சண்டை போட்டுக் கொண்டனர் என்று பல புராணங்கள் கூறுகின்றன. இவர்கள் சண்டையிட்டுக் கொண்டதனாலேயே இவர்கள் கடவுள் இல்லை என்பது நன்கு புலனாகிறது.

சண்டையைத் தவிர்த்து இவர்கள் தமக்குத் தாமே சோதித்து அமைதியாக சிந்தனை செய்வார்களேயானால் தம்மையெல்லாம் இணைத்துத் தொடர்பு படுத்துகின்ற இறைவனை உணரக்கூடும். அது செய்யாமையால் இவர்களும் இவர்களை வணங்குகிறவர்களும் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள் என்று ஒரு பாடலில் கூறுகிறார். பாடல் வருமாறு:

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
சோதிக்கில் மூன்றும் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே

அதற்காக பிரம்மா, திருமால், உருத்திரன் என்கிற இந்த மூவரை அவமதிக்க வேண்டும் என்று நான் சொல்ல மாட்டேன். இவர்களை படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என்ற முத்தொழில்களையும் செய்யப் பயன்படுத்துகிறான் என்றால், இவர்கள் அந்தப் பக்குவத்தில் உள்ளவர்கள் என்பது புலனாகிறது. எனவே இறைவனுக்கு இவர்கள் ஒரு வகையில் உகப்பு என்று தெரிகிறது. இறைவனுக்கு உகந்தவர்கள் எனக்கும் உகந்தவர்கள் அல்லவா? எனவே இவர்களை நானும் வணங்குவேன். ஆனால் இவர்களால் எந்த அளவு பயன் என்பதை அறிந்து அந்த அளவில் வணங்குவேன். இதைப்பற்றி ஏற்கெனவே 'அப்பரிசு ஈசன் அருள் பெறலாமே' என்று பாடியுள்ளேன். எனவே

பயனறிந்து இம்மூவரை வணங்குவது தவறல்ல. இக்கருத்துக்களை உள்ளடக்கி திருமூலர் பாடிய பாடல் வருமாறு:

''பயனறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால் நமக்கு அன்னியமில்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர் அவ்வானவராலே''

இந்தப் பகுதியில் வேறு ஒரு சுவையான விஷயம் ஒன்றைக் கூறுகிறார். அதாவது திருமூலரின் அருள்நிலை ஏற்றம் எந்த அளவிற்கு இருந்தது என்றால் தேவர்கள் எல்லாம் அவரைத் தொழுதார்களாம். அது மட்டுமல்ல சிவபெருமான் திருமூலரை திருமாலுக்கும், பிரமனுக்கும் ஒப்பானவன் நீ என்றாராம். அதுமட்டுமல்ல நீ இன்னும் பலபடி மேலே என்று கூட சொல்லலாம். பிரம்மாவையும், திருமாலையும் படைத்தலுக்கும், காத்தலுக்கும் இறைவன் பயன்படுத்திக் கொண்டதுபோல இவரை வணங்குப வர்க்கு வீடு பேற்றிற்கு அடிப்படையான திருவடி இன்பத்தை வேண்டுவார்க்குத் தமக்குப் பதிலாக வழங்கும்படி சொன்னானாம். பாடலைப் பார்ப்போம்:

''ஓலக்கம் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்து அடியேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்அடி நல்கிடு என்றானே!''

இங்கே அடியேன் தொழ என்பது அடியேனைத் தொழ என்று பொருளுக்கேற்ப விரியும்.

எனவே திருமூலரை வணங்கினாலே நமக்கு திருவடி யின்பம் கிடைக்கும் என்பது புலனாகிறது. திருவடி இன்பத் திற்கு மேலாக உள்ளது பேரா இயற்கைப் பேரின்பம். அதனைச் சாயுச்சியம் என்பர். அதனை இறைவன் தான்

நல்குவான். திருவடி இன்பம் என்பது சகஸ்ராரத்தில் அனுபவிக்கும் இறையின்பம். அதாவது பிண்டத்தின் உச்சியில் அனுபவிப்பது. இது முதிர முதிர பிண்ட உச்சியி லிருந்து புறப்பட்டு, அண்டம் முழுவதும் இறைவனோடு நிறைந்து நின்று அனுபவிக்கும் இன்பம் சாயுச்சியம். அதற்கு முன்னதான திருவடியின்பத்தை திருமூலர் மூலம் இறைவன் வழங்குவான் என்றால் இதன் மூலம் திருமூலரின் அதிமேன்மையான பக்குவம் நமக்கு விளங்குகிறது. அதனால் தான் பெயர் தெரியாத ஒரு பெரியவர்,

> ***'திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்குக்***
> ***கருமூலம் இல்லையே காண்'***

என்று பாடினார்.

இராமலிங்க வள்ளலார் வரலாற்றில் இது உறுதி ஆகிறது. அதாவது தொடக்க காலத்தில் ஞானசம்பந்த ரையே குருவாகக் கொண்டு இறையனுபவத்தில் ஏறியவர் இறுதியில் சம்பந்தர் தொழுத திருமூலருடன் சம்பந்தரால் தொடர்பு கொள்ள திருமந்திரத்தால் ஒரு மெய்யனுபவத் தைப் பெற்றாராம். 'உருவளர் திரு மந்திரத் திருமுறையால் உணர்த்திய மெய்ம்மொழிப் பொருள்' என்று வள்ளலார் இதனை ஏத்திப் பாடுகிறார்.

எனவே திருமூலரை வணங்கி அருளனுபவம் பெற வேண்டும் என்கிற திருக்குறிப்பு இது பற்றிய ஆர்வலர் களுக்கு இந்தப் பாடலில் சுவாரசியமான செய்தியாகக் கிடைக்கிறது.

வேதச் சிறப்பு

அடுத்ததாக பாயிரத்தில் கூறப்படுவது வேதச் சிறப்பு. இந்த முறை வைப்பும் சரியாகவே உள்ளது. காரணம், பரம முதற்காரண பரம்பொருளுக்கு முதலில் வாழ்த்து

சொல்லி வணங்கி, பரம முதற்காரணப் பொருளாக மயங்கி நினைக்கும் மூவர்களின் இயல்பைக் கூற மும்மூர்த்திகளின் முறைமை பற்றிக் கூறி, அடுத்து இது பற்றிய செய்திகள் அடங்கிய வேதத்தையும், ஆகமத்தையும் ஆராய்வது தானே முறை.

இதில் முதலில் வேதம் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஆகமம் இதன் பின் தொடர்கிறது. இவ்விரண்டையும் சேர்த்து ஒரு திருமந்திரப் பாடல் ஒன்று இவ்விரண்டையும் இன்னது என்று அறிமுகப்படுத்துகிறது. அந்தப் பாடல் வருமாறு:

"வேதமோடு ஆகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதமது என்பர் பெரியோர்க்கு அபேதமே"

இந்தப் பாடல் வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு என்று இரண்டு தலைப்புகளில் கூறப்படுவதற்கு முன் வேதமும், ஆகமமும் என்ற தலைப்பில் பாயிரத்தில் வர வேண்டியது. இதை திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் 2397ஆம் பாடலாக எட்டாம் தந்திரத்தில் ஆறந்தம் என்ற தலைப்பில் பதிப்பித்திருக்கிறார்கள்.

ஆறந்தம் என்பது அனுபவத்தைக் குறித்தது. ஆனால் பாடலோ வேதம், ஆகமம் என்ற இரண்டையும் கூறி அவை நாதன் உரை என்று நூலைக் குறித்தது. ஆறந்தத்தில் கூட வேதாந்தம் என்று வருமே ஒழிய ஆகமாந்தம் என்று ஒன்றில்லை. ஆறந்தமாவன: யோகாந்தம், கலாந்தம், நாதாந்தம், போதாந்தம், வேதாந்தம், சித்தாந்தம் என்பன வாகும். இவற்றில் வேதாந்தம் உண்டு; ஆகமாந்தம் என்று வராது. இங்கே வேதாந்தம் என்பதும் அனுபவத்தையே அன்றி நூலை அல்ல. 'நாடில் இரண்டந்தம்' என்று பாடலில் வருவதைப் பார்த்து யாரோ கைப்பிசகாக

ஆறந்தத்தில் சேர்த்து விட்டார்கள். எனவே இப் பாடல் பாயிரத்தில் இந்த இடத்தில் வருவதே சாலப் பொருந்தும்.

இந்தப் பாடலில் பல வரலாற்றுச் செய்திகள் அடங்கி இருக்கின்றன. வேதம், ஆகமம் என்று இரண்டு முடிபுகள் உண்டு. அந்தம் என்றால் முடிபு. இரண்டுமே இறைவனாம் சிவபெருமானால் உரைக்கப்பட்டவை என்று இப்பாடல் கூறுகிறது.

ஆகமத்தைப் பொறுத்தவரை ஆகமவாதிகள் (சிவாச்சாரியர்கள் மற்றும் சித்தாந்திகள்) ஆகமத்தை இறைவன் அருளினான் என்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லாதவர்கள். இன்னும் சொல்லப் போனால் அதில் பெருமை அடைபவர்கள். ஆனால் வேதத்தைப் பொறுத்தவரைதான் சிக்கல் ஏற்படுகிறது. காரணம், தற்காலத்தில் வேதம் என்றாலே ரிக், யஜுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வடமொழி வேதங் களையே நாம் நினைக்கிறோம்; அல்லது நினைக்கும்படி ஆக்கப் பட்டுள்ளோம்.

ஆனால், இங்கே கூறப்படும் வேதம் வடமொழி வேதங்கள் அல்ல என்பது உறுதியாகிறது. எப்படி என்றால், வடமொழி வேதங்களைப் போற்றுபவர்கள் அவை இறைவனால் உரைக்கப்பட்டவை என்று ஒப்புக் கொள்வதில்லை. பின்னர் யார் அவற்றைத் தோற்றுவித் தார்கள் என்றால், யாராலும் அவை தோற்றுவிக்கப்பட வில்லை; அவை அபௌர்ஷேயம் என்கின்றனர். அதாவது ஒரு புருஷனால் தோற்றுவிக்கப்படாதது என்று பொருள். அப்படியானால் அவை எப்படித் தான் தோன்றின என்று கேட்டால் அவை தானே தோன்றியவை என்கின்றனர். அதாவது 'சுயம்பு' என்று வடமொழியில் கூறுகின்றனர்.

எனவே நடுநின்று ஆய்பவர்களுக்கு இந்த சுயம்புவான வடமொழி வேதங்கள் வேறு; இறைவனால் அருளப்பட்டது என்கின்ற வேதம் வேறு என்பது தெளிவாகப் புலனாகும். 'நாதன் உரையவை' என்று இந்தப் பாடலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருப்பதால் இப்பாடலில் குறிப்பிடப்பட்ட வேதம் நிச்சயமாக வடமொழி வேதங்களல்ல என்பது திண்ணம்.

தொல்காப்பியர் சுமார் கி.மு. 6000 ஆண்டைச் சேர்ந்தவர் என்று சில அறிஞர்கள் கூறுகிறார்கள். அவரது தொல்காப்பிய நூலை அரங்கேற்றம் செய்தபோது நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையில் அதங்கோட்டாசான் என்ற பெரியவர் முன் அரங்கேற்றம் செய்யப்பட்டது என்று தொல்காப்பியத்திற்கு சிறப்புப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் கூறுகிறார். அந்த அதங்கோட்டாசான் நான்மறையில் தேர்ந்தவர் என்கின்றார்.

இதற்கு உரை எழுதிய போது நச்சினார்க்கினியர் நான்மறை என்று இங்கே குறிப்பிடப்பட்டது தற்காலத்தில் கூறப்படும் ரிக், யஜுர், சாமம், அதர்வணம் அன்று என்று குறிப்பிடுகிறார். காரணம், வடமொழி வேதத்தை நான்காகத் தொகுத்தவர் வியாசர்; அவர்க்கு பல நூற்றாண்டுகள் முன்னவர் தொல்காப்பியரும், அதை அரங்கேற்றத்தில் கேட்ட அதங்கோட்டாசானும் என்று நச்சினார்க்கினியர் கூறுகின்றார். இது உண்மை என்பது அமரகோசம் என்ற வடமொழி நிகண்டு உறுதிப்படுத்துகின்றது. 'வேதம் த்ரயே' என்று அது கூறுகிறது. அதாவது வேதங்கள் மூன்று என்று பொருள். வடமொழி வேதங்களான ரிக், யஜுர், சாமம் என்று தொகுத்தும் நிறைவுறாமல் அதர்வம் என்ற ஒன்றை மேலும் கூட்டி மிகப் பிற்காலத்தில் நான்காக்கியவர் வியாசர். வேத வியாசரின் காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்று அறிஞர்கள் கூறுகின்றனர். கி.பி. 7ஆம் நூற்றாண்டு எங்கே? கி.மு. 6000 ஆண்டு எங்கே? எனவே அதங்கோட்டாசான் தெளிந்த நான்கு வேதங்கள்

வடமொழி வேதங்கள் அல்ல என்பது மறுக்கவொண்ணாதபடி தெளிவாகிறது.

இரண்டு முக்கிய காரணங்களால் இப்போது இப் பாடலில் குறிப்பிட்ட வேதம் வடமொழி வேதம் நான்கல்ல என்பது நிரூபணமாகின்றது. 1) வடமொழி வேதங்கள் சுயம்பு; இங்கு சொல்லப்பட்டதோ இறைவனால் அருளப் பட்டது. 2) வடமொழி வேதங்கள் மிகப் பிற்காலத்தில் தான் நான்காக வியாசர் என்பவரால் வகுக்கப்பட்டது; ஆனால் அதற்குமுன்னே கி.மு. 6000-த்திலேயே நான்மறை என வேதங்கள் இருந்திருக்கின்றன.

அப்படியானால் அவை யாவை? அவை எந்த மொழியில் இருந்தன?

இக்கேள்விகளுக்கு இன்னொரு பாடலில் தம் வரலாறு கூறுமிடத்தில் திருமூலர் பதில் சொல்கிறார். அந்தப் பாடல் வருமாறு:

சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந்தேன் நின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மனம் நீங்கி
உதாசனி யாது உடனே உணர்ந்தோமால்

'உணர்ந்தோமால்' என்று கூறியதால், தான் உணர்ந்ததைக் கூறினார். தானே சதாசிவன் ஆனதாக இன்னொரு பாடலில் கூறியிருப்பதை முன்பே பார்த்தோம். சதாசிவமான அவர் ஒரு வேதத்தை உணர்ந்தாராம். அது முத்தமிழ் வேதம் என்கிறார். எனவே திருமூலர் வேதச் சிறப்பு என்று கூறுவது முத்தமிழ் வேதச் சிறப்பையே. இதற்கு மாறாக வடமொழி வேதத்தின் சிறப்பை, இறைவனது ஆணையால் ஆகமத்தைத் தமிழ் செய்தபோது கூறினார் என்பது திருமூலரின் கருத்திற்கும், கூறிய கூற்றுக்களுக்கும், அவரது திருவுள்ளத்திற்கும் மாறானது என்பது நடுநின்று நோக்குவார் எல்லாரும் ஏற்கத்தக்கது.

இனி பாடலுக்கு வருவோம். முத்தமிழ் வேதமும், முத்தமிழ் ஆகமமும் இறைவனால் அருளப்பட்டவை. இதில் முத்தமிழ் வேதம் பொது; முத்தமிழ் ஆகமம் சிறப்பு என்று இனம் பிரித்துக் காட்டுகிறது இப்பாடல். இவ்வாறு வேதமும், ஆகமமும் ஒன்றிற்கொன்று பொதுவும், சிறப்பும் ஆக உள்ளது என்று கூறுவதனாலும் இங்கே கூறப்பட்டது வடமொழி வேதமல்ல என்பது உறுதியாகிறது.

காரணம், வடமொழி வேதம் கூறுவதை ஆகமம் ஒப்புக் கொள்வதில்லை. ஆகமத்தை வடமொழி வேதம் ஓதும் வைதிகர் ஒப்புக் கொள்வதில்லை. வடமொழி வேதம் தீயாகிய அருவ வழிபாட்டினை முன்னிறுத்துவது. ஆகமம் உருவ வழிபாட்டினை முன்னிறுத்துவது. அருவ வழிபாட்டை மேற்கொள்ளும்போதுகூட வடமொழி வேதம் முழுமுதற் பரம்பொருளை அருவ வழிபாடு செய்வதில்லை. சிறு சிறு தேவர்களைத் திருப்திப் படுத்தவே தீ வழிபாடு செய்தது. ஆனால் ஆகமமோ முழுமுதற் பரம்பொருளை உருவத்தில் வைத்து வணங்கி வழிபடும் முறைகளைத் தொகுத்தது.

காலக் கோளாறினால் மிகப் பிற்காலத்தில் ஆகமத்தில் கூறும் உருவ வழிபாட்டினை வடமொழி வேதத்தின் கோட்பாட்டிற்கு மாறாக வைதிகர்கள் தழுவினர். உடனே, இது எவ்வளவு தவறு? நாமெல்லாம் ஆகமத்தில் கூறும் உருவ வழிபாட்டினை மேற்கொள்ளலாமா என்று உருவ வழிபாட்டைக் கண்டித்து, அதாவது ஆகம வழிபாட்டைக் கண்டித்து ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்றவை எழுந்தன. எனவே வடமொழி வேதமும், ஆகமமும் ஒன்று பொதுவாகவும் அதற்கு மற்றது சிறப்பாகவும் இருக்கவே வாய்ப்பில்லை என்பது புலனாகிறது. ஆனால் இங்கே கூறப்பட்ட வேதமும், ஆகமமும் ஒன்று பொதுவாகவும் மற்றது அதற்குச் சிறப்பாகவும் உள்ளது

என்று திருமூலர் கூறுவதால் இங்கே கூறப்பட்ட வேதம் வடமொழி வேதமல்ல என்பது மேலும் உறுதியாகிறது.

இந்த இரண்டு அந்தங்கள் ஆகிய முத்தமிழ்வேதமும், ஆகமமும் இரண்டு பிரிவுகளாய் இருப்பதால் ஒன்றிற்கொன்று வேறுபாடுடையவை என்று எண்ண வேண்டாம். எப்போதும் பொதுவிலிருந்தே சிறப்பிற்குச் செல்ல முடியும். எனவே பொதுவாக உலகியலைக் குறிப்பிட்டு இறைவன் அருளிய முத்தமிழ் வேதத்திலிருந்து சிறப்பாக இறைவன் அருளிய ஆகமமான அருளியலுக்குச் செல்ல வேண்டும் என்பதால் பெரியோர்கள் இவ்விரண்டினிடையே பேதம் பார்க்கமாட்டார்கள் என்று இந்தப் பாடலில் கூறினார். இதற்கு ஆராய்ச்சி அறிவு வேண்டும். அதாவது நாடிப் பார்க்க வேண்டும். அந்த ஆராய்ச்சி அறிவு பெரியோர்க்கு அபரிமிதமாக இருக்குமாதலால் 'நாடில் இரண்டந்தம் பெரியோர்க்கு அபேதமே' என்று பாடினார் திருமூலர்.

இந்த முத்தமிழ் வேதம் உலகியலறங்களை ஓதுவது. அறங்கள் இல்லையானால் இந்த உலகத்தில் இப்போது காணப்படும் சமூகக் கட்டமைப்பு இருக்காது. எனவே மனிதன் வாழ்விற்கு அடிப்படையான அறங்களை முதலில் கூறினான் இறைவன். அக்கிரமங்களே ஆள்வதானால் அரசும், மக்களும் வாழ்வதெப்படி? எனவேதான் மனிதவாழ்வின் அடிப்படையான அறங்களை முதலில் ஓதினான் இறைவன்.

அதனால்தான் முத்தமிழ் வேதமாகிய இதை அறிமுகப்படுத்தி வேதத்தை விட்ட அறம் இல்லை என்று பாடினார் திருமூலர். பாடல் வருமாறு:

வேதத்தை விட்ட அறமில்லை வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே

இந்த வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களாமே சில மதிஞர்கள்? எப்படி? முத்தமிழ் வேதம் அறத்தின் வடிவம். அறம் அன்பைப் பெருக்கும். அன்பு முதிர்ந்தால் அருள் உதிக்கும். அருள் முதிர்ந்தால் தவம் வந்து எய்தும். தவம் இறைவனிடம் சேர்த்துவிடும். இதுபற்றி கந்தபுராணத்தில் ஒரு பாடல் உண்டு. அதாவது:

தருமமே போற்றிடின் அன்பு சார்ந்திடும்
அருளெனும் குழவியும் அணையும் ஆங்கவை
வருவழித் தவமெனும் மாட்சி எய்தும்மேல்
தெருளுறும் அவ்வுயிர் சிவனைச் சாருமால்

இவ்வாறு அறத்தின் வழி இறைவனை அடையலாம் என்பதைக் காட்டவே சிவபெருமான் ஊழிக் காலத்தில் அறவிடையின் மீது ஏறியருளினான் என்று புராணங்கள் கூறின. இதையேதான் 'மதிஞர்கள் - வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே' என்று பாடினார் திருமூலர்.

வடமொழி வேதத்திற்கும் அறத்திற்கும் தொடர்பில்லை என்பது கருதத்தக்கது. ரிக் என்னும் வேதம் தோத்திர மயமானது. ரிக் என்ற வடமொழிச் சொல்லுக்கு தோத்திரம் என்பதே பொருள். யஜூர் என்னும் வேதம் யாகம் என்னும் பொருளுடையதாய், யாகங்களை எப்படிச் செய்வது என்பதைப் பற்றியது. சாமம் என்பது பண் என்று பொருள்படும். அது பண்ணால் அமைந்த துதி. அதர்வணம் என்பது மந்திர, தந்திர ஜாலங்களைப் பற்றியது. இவற்றில் அறத்திற்கே இடமில்லாதது காண்க.

மாறாக தமிழ் வேதம் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினைப் பற்றியது.

"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு
மொழிந்தவாயான் முக்கண்ணாதி மேயது முதுகுன்றே."

என்பது சம்பந்தர் வாக்கு.

"ஆலின்கீழ் அறங்கள் எலாம் அன்றவர்க்கு
அருளிச் செய்து"

என்பது அப்பர் வாக்கு.

"நன்றாக நால்வர்க்கும் நான்மறையின்
உட்பொருளை
அன்றாலின் கீழிருந்தாங்கு அறம் உரைத்தான்
காணேடி"
"அருந்தவர்க்கு அறமுதல் நான்கு அன்றருளிச்
செய்திலனேல்
திருந்தவருக்கு உலகியற்கை தெரியாகாண் காழலோ"

இவை மணிவாசகர் வாக்கு.

'அறம் நாலைப் புகல்வோனே அவிநாசிப் பெருமாளே' இது அருணகிரியார் வாக்கு.

இப்படி நால்வர் முதல் அருணகிரியார் வரை நான்மறை என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்பவை தான் என்று அறுதியிட்டுக் கூறி இருக்கிறார்கள்.

பொதுமறை என்கிற திருக்குறளும் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலை மொழிந்தது. முப்பாலில் நாற்பாலையும் மொழிந்தார் என்று திருவள்ளுவமாலையில் கூறுவதால் இதிலேயே வீடும் அடங்கியது. அறத்தினாலேயே வீட்டைப் பெறலாம் என்பதால் அறத்துப் பாலிலேயே 13 அதிகாரங்கள் துறவியல் என அமைத்து, அதில் 'மெய்யுணர்வு' என்ற அதிகாரத்தை அடக்கி, வீடாகிய நான்காவது பாலையும் திருக்குறளில் கூறினார் திருவள்ளுவர். அறம் ஒன்றினாலேயே இறைவனை அடையலாம் என்பதால்தான் அறன் வலியுறுத்தல் என்ற அதிகாரத்தையும் பாயிரத்தில் கூறினார் வள்ளுவர்.

தமிழ் வேதத்தில் அறம் என்பது ஒன்று என்று தெளிவாக இருக்கிறது. எனவே 'வேதத்தை விட்ட

அறமில்லை' என்ற இந்த திருமந்திரப் பாடலில் கூறப் படுவது தமிழ் வேதமே என்பது மேலும் வலியுறு கின்றது.

அறம் என்ற ஒன்றினால் தமிழ் வேதம் வளம் பெறுகிறது. எனவே மதிஞர்களாகிய அறிஞர்கள் 'வளமுற்ற வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே' என்று பாடி இந்த அற வளமில்லாத பிற வேதங்களை விலக்கினார் திருமூலர் என்பது கூர்ந்து நோக்கினால் புலனாகும்.

பிற வேதங்களை விலக்கினார் என்றால் இன்னொரு பாடலில் 'இருக்குருவாம் எழில் வேதத்தின் உள்ளே' என்று பாடுகிறாரே இதற்கு என்ன பொருள்? என்று சிலர் கேட்கலாம்.

இருக்கு என்பது மந்திரத்தைக் குறித்ததோர் தமிழ்ச் சொல். இதனைத் தமிழ் அகராதிகளில் காண்க. ஞான சம்பந்தர் திரு இருக்குக் குறள் என்று ஏழு பதிகம் பாடி இருக்கிறார். அவையாவன: 1) திருப்பிரமபுரம் திரு இருக்குக் குறள், 2) திருவாரூர் திரு இருக்குக் குறள், 3) திரு வீழிமிழலை திரு இருக்குக் குறள், 4) திருமுதுகுன்றம் திரு இருக்குக் குறள், 5) திரு ஆலவாய் திரு இருக்குக் குறள், 6) திருவிடை மருதூர் திரு இருக்குக் குறள், 7) திரு அன்னியூர் திரு இருக்குக் குறள்.

இவையெல்லாம் வடமொழி ரிக் வேதத்தின் மொழிபெயர்ப்பல்ல. இவையெல்லாம் ஞானசம்பந்தரே மந்திரமாகப் பாடிய மூல இலக்கியங்கள் என்று சேக்கிழார் கூறுகிறார்.

"மூல இலக்கியமாக எல்லாப் பொருள் கோளும் முற்ற
ஞாலத்து உயர்காழி யாரைப் பாடினார் ஞானசம்பந்தர்"

''நீலமா மிடற்று ஆலவாயான் என நிலவும்
மூலமாகிய திரு இருக்குக் குறள் மொழிந்து''

என்பன பெரிய புராண வாக்கு.

எனவே இருக்கு என்பது மந்திரம் என்ற பொருளை உடைய தமிழ்ச் சொல் என்பதும், அம்மந்திர வடிவாக ஞானசம்பந்தர் ஏழு பதிகங்கள் பாடியுள்ளார் என்பதும், அவை எதையும் பார்த்து மொழி பெயர்த்ததல்ல; மூலம் என்பதும் தெளிவாகின்றன.

சிலர் வடமொழியில் 'ரிக்' என்று வரும் சொல்லையே தமிழில் 'இருக்கு' என்று கூறியதாக எண்ணுகின்றனர். அதனால் தான் மேற்படி தவறான கேள்வியும் சந்தேகமும் அடைகின்றனர். வடமொழியில் 'ரிக்' என்ற சொல்லைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்றால் ரிக் என்பது ருக்கு என்று ஆகும். தமிழ் இலக்கணப்படி 'ரு' என்ற எழுத்து சொல்லிற்கு முதலெழுத்தாக வராது. எனவே இருக்கு என்று ஆயிற்று என்று நினைக்கலாம்.

இங்கே கவனிக்க வேண்டியது ஒன்று உண்டு. அதாவது 'ருக்கு' என்று 'ரிக்' என்ற வடமொழி சொல் திரிந்தது என்றே வைத்துக் கொள்வோம். 'ரு' என்ற எழுத்து வருமானால் தமிழ் இலக்கணப்படி உகரம் தான் சேர்க்கப்படுமே ஒழிய இகரம் சேர்க்கப்படாது. 'ருக்குமணி' என்ற வடசொல் உருக்குமணி என்றும் 'ரூபா' என்ற சொல் உரூபா என்று ஆவதும் நாம் அறிந்த உதாரணங்கள். அப்படிப் பார்க்கும் போது 'ருக்கு' என்பது உருக்கு என்றுதானே வர வேண்டும். அப்படி உருக்கு என்றால் தானே அது வடமொழி 'ரிக்' என்ற சொல்லைக் குறிக்கும்? இங்கே கூறப்படும் சொல்லோ இருக்கு என்பது. எனவே இருக்கு என்பது வடமொழி 'ரிக்'கைக் குறித்ததல்ல என்று தெள்ளத் தெளிவாய் புலனாகிறது. ஆக இருக்கு என்பது தூய தமிழ்ச் சொல்லே என்றும்

அதற்கு மந்திரம் என்று பொருள் என்பதும், அந்த மந்திரவடிவாக சம்பந்தர் பாடியதே திரு இருக்குக் குறள் என்பதும் உறுதியாகிறது.

அப்படியானால் 'இருக்குருவாய் எழில் வேதத்தின் உள்ளே' என்று திருமந்திரப் பாடல் வரியின் பொருள், 'மந்திர வடிவாய் உள்ள ஞான எழிலார்ந்த தமிழ் வேதத்தின் உள்ளே' என்பதாகும்.

அது மட்டுமல்ல அந்தப் பாடலின் அடுத்த வரியைப் பார்த்தாலும் இது மேலும் தெளிவாகும். முழுப் பாடலும் வருமாறு:

இருக்குருவாம் எழில் வேதத்தின் உள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லும்
கருக்குருவாய் நின்ற கண்ணனு மாமே

இங்கே உருக்குணர்வாயுள்ள வேதம் என்றார். பொதுவாக வடமொழி வேதத்தை ஓதுவார் உருகிக் கண்ணீர் வார நிற்பது இல்லை. அல்லது, அதை ஓதக் கேட்பாருக்கும் உருக்கம் வருவதில்லை. ஆனால் தமிழ் வேதமான தேவார, திருவாசகத்தினை ஓதும்போது ஓதுவாரும் சரி, கேட்பாரும் சரி உருக்கம் மேலிட கண்ணீர் மல்குவதை கண்கூடாகப் பார்க்கிறோம். அதனால்தான் துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் நால்வர் நான்மணி மாலையில் இப்படிப் பாடினார்:

வேதம் ஓதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலோம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்து உகக்கண்கள்
தொடுமணற் கேணியில் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்தி

அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே

என்று பாடினார். எனவே உருக்குகின்ற உணர்வாய் உள்ள வேதம் என்பதால் முன் வரியில் குறிப்பிட்ட இருக்கு என்பது வடமொழி ரிக் வேதமல்ல என்பதை உறுதி செய்தார்.

மேலும் வடமொழி ரிக் வேதத்தைக் குறிப்பிட்டால் 'இருக்கு உருவாம்' என்று கூறுவதில் உருவாம் என்ற சொல்லிற்கு பொருள் கூற முடியாது. ஆனால் இருக்கு என்பதைத் தூய தமிழ்ச் சொல்லாகக் கொண்டு மந்திரம் என்று பொருள் கண்டோமானால் 'இருக்கு உருவாம்' என்று கூறியதை மந்திர வடிவாய் என்று பொருள் கொள்ளப் பொருந்திவரும்.

இக்காரணங்களினால் இங்கே இந்தப் பாடலில் கூறப்படும் இருக்கு என்பது வடமொழி வேதத்தைக் குறிக்காது என்பதும், உருக்கத்தை வரவழைக்கின்ற மந்திரவடிவான தமிழ்வேதம் என்பதே அதற்குப் பொருள் என்பது உறுதிக்கு மேல் உறுதியாக அறுதியாகிறது.

இந்தப் பாடலில் விளக்க வேண்டிய இன்னொரு பகுதி உண்டு. அதாவது பாடலின் இறுதியில் 'கண்ணனும் ஆமே' என்று வருவதை சிலர் திருமாலின் அவதாரமான கண்ணனைக் குறித்ததாகக் கூறுகின்றனர். பாடலைச் சரிவரப் பார்த்தோமானால் 'வேதத்துள் ஓங்கி கருக் குருவாய் நின்ற கண்ணன்' என்று பாடலில் வருவதைப் பார்க்க வேண்டும். கண்ணனாகிய திருமால் வடமொழி வேதம் நான்கினுள் எங்கேயும் பேசப்பட வில்லை. எனவே அந்த வேதத்தைக் கொண்டாலும் திருமாலின் அவதாரமான கண்ணனுக்கு அங்கே இடமில்லை. இனி, இப்பாடலில் குறிப்பிடப்பட்டிருப்பதோ தமிழ் வேதம் என்பதை நிறுவி உள்ளோம்.

நால்வர் அருளிய திருமுறைகள் உள்ளிட்ட பன்னிரு திருமுறையில் பத்தாம் திருமுறையாகிய திருமந்திரம் நீங்கலாக ஏனைய பதினொன்றும் தமிழ் வேதம் எனப்படும். திருமந்திரமாகிய பத்தாம் திருமுறை தமிழாகமம் எனப்படும். ஆக, பன்னிரு திருமுறை களே தமிழ் வேதாகமம் எனக் கூற வேண்டும். இந்தப் பன்னிரு திருமுறைகளில் கண்ணனாகிய திருமாலின் பெருமை ஓங்கி நிற்பதாக யாரும் சொல்ல மாட்டார்கள். அது உறுதி.

ஒரு வேளை, ஆழ்வார்கள் பாடியருளிய நாலா யிரத்தையும் வைணவர் தமிழ் வேதம் என்றுதானே கூறுகின்றனர்; அதில் கண்ணன் பெருமை ஓங்கித் தானே நிற்கிறது; எனவே கண்ணன் என்பது இங்கே திருமாலைக் குறிக்குமா என்றொரு சந்தேகம் ஏற்படலாம். ஆனால் அவ்வாறு இங்கே பொருள் கொள்ள முடியாது. ஏனெனில்,

''கூற்றுதைத் தானை யான் கூறுகின்றேனே'' என்றும்,

'சிவனோடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை' என்றும்,

'சிவனருள் அல்லது தானமர்ந்தோரும் தனித் தெய்வம் மற்றில்லை' என்றும்

சற்று முன்னால் பாயிரத்தில் பாடிய திருமூலர் இங்கே இறைவனாகிய சிவபெருமான் ஓதிய தமிழ் வேதத்தில் ஓங்கி நிற்பது திருமால் என்று கூறுவதற்கு வழக்கில்லை.

எனவே இங்கே கூறிய கண்ணன் என்பது நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமானையே குறித்தது எனக் கொள்வதே மிகச் சரியானதாகவும் ஏற்புடைத்தாகவும் இருக்கும்.

இனி, வேதம் அறமயமானது; அறம், அன்பு, அருள், தவம் என்று படிப்படியாக இறைவனை வேதத்தைக் கொண்டே அடையலாம் என்றவர், இறைவன் தவம் செய்யும் அளவிற்கு அருட்பக்குவம் உள்ளவர்களை குருவாக வந்து ஆட்கொள்வதை இங்கே கூறுகிறார். பக்குவம் உள்ளவர்க்கு இறைவனே குருவாய் வந்து நுதற்கண், ஞானக் கண் என்றெல்லாம் கூறும் நெற்றிக் கண்ணைத் திறப்பதாகிய தீக்கையைச் செய்து ஆட்கொள்வான். அப்படி ஆட்கொள்ளும் அவனுக்கும் நெற்றிக் கண் உண்டு. அந்தச் சிறப்புக் கண் அவனுக்கு மட்டுமே உள்ளதால் அவனுக்குக் கண்ணன் என்றும் இதை இன்னும் தெளிவுபடுத்த முக்கண்ணன் என்றும் பெரியோர்கள் சொல்லுவார்கள்.

குரு என்று வரும்போது தேவைப்படும் சிறப்புக் கண் நெற்றிக் கண்ணே ஆதலாலும் திருமாலாகிய கண்ணனுக்கு நெற்றிக் கண் உள்ளதாக விஷ்ணு புராணங்களும், நாலாயிர திவ்வியப் பிரபந்தமுமே கூறாததாலும் அவனது ஏனைய இரண்டு கண்கள் மிக அழகியதாக தாமரை போல் இருத்தலால் அதன்பொருட்டு சிறப்பித்து அவன் கண்ணன் எனப்பட்டானே ஒழிய, நெற்றிக்கண் பற்றி அவனுக்கு அப்பெயர் வந்ததில்லை என்பதாலும், இங்கே இப் பாடலில் ‘குருவாய் நின்ற கண்ணன்’ என்றது குருவாய் வரும் நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமானே தவிர திருமாலாகிய கண்ணன் அல்ல என்பது தெளிவாக அறியக் கிடக்கிறது.

குரு பக்குவ ஆன்மாக்களின் நெற்றிக் கண்ணைத் திறந்து வைப்பார் என்பதை வள்ளலார், ‘நெற்றிக் கண்ணை உரிய தேசிகரிடம் திறந்து கொள்ள வேண்டும்’ என்று உரைநடைப் பகுதியில் கூறுவதை வைத்து அறியலாம்.

அதோடு,

"எனக்கும் நின்னைப் போல நுதற்கண் ஈந்தும்
அதனையே
எரிப்பித்தாய் பின் எழுப்பிக் கொடுத்தாய்
அருவமதனையே"

என்று ஆறாந்திருமுறையில் பாடினார்.

இங்கே 'கருக் குருவாய்' என்று பாடியதும் ஒரு சிறப்பு, இறைவன் பக்குவ ஆன்மாக்களுக்கு தீக்கை கொடுக்க வரும்போது ஏற்கெனவே தீக்கை செய்யப்பட்ட ஆன்மாக்களின் மீது ஏறி வந்து தான் தீக்கை செய்வான். அந்த ஆன்மாக்கள் மானிடச் சட்டையை நம்போல் தாங்கியவர்கள் அல்லவா? எனவே மானிடச் சட்டை தாங்கிய குரு என்பதைக் குறிக்க 'கருக்குரு' என்று பாடினார் திருமூலர். கருக்குரு என்றால் கருவில் உருவான குரு என்பது பொருள்.

இதேபோல் இன்னொரு பாடலில், 'ஆறங்கமாய் வருமாமறை' என்று வரும். உடனே சிலர்க்கு ஆறங்கம் என்பது வடமொழி வேதத்தில் உள்ளது அல்லவா? 'கல்பம், சிட்சை, வியாகரணம், சந்தோவிசிதி, நிருத்தம், சோதிடம்' என்று ஆறு அங்கங்களை உடையது வடமொழி வேதம் என்பார்களே! எனவே 'ஆறங்கமாய் வரும் மாமறை' என்று திருமூலர் பாடியதால் இது தமிழ் வேதத்தை எப்படிக் குறிக்கும் எனச் சிலர் எள்ளலாகக் கேட்கலாம்.

இங்கே கூறப்படும் ஆறங்கம் என்பன ஏற்கெனவே கூறப்பட்ட சொல்லுலக அங்கங்களான எழுத்து, சொல், மந்திரம் தான். இவை மூன்று தானே; ஆறங்கம் என்றுதானே மேலே கூறப்பட்டது எனக் கேட்கக் கூடாது. காரணம் ஆறு என்பது இங்கே வழி என்ற பொருளில் வந்தது. வடமொழியில் அத்துவா என்பார்கள். இறைவன் நம்மை ஆட்கொள்ளும் வழியின் அங்கங்களான எழுத்து,

சொல், மந்திரம் என்பனவற்றால் விரிந்து வரும் வேதம் என்று குறிக்கவே 'ஆறங்கமாய் வரும் மாமறை' என்றார்.

ஒருவாறு பொருளுலக அங்கங்களான கலை, தத்துவம், புவனம் மூன்றையும் கூட்டி மொத்தம் ஆறு என்றும் கூறலாம். காரணம், சொல்லுலகமான எழுத்து, சொல், மந்திரத்தோடு பொருளுலகமான கலை, தத்துவம், புவனம் என்ற மூன்றுடன் தொடர்புடையது என்பதால் அப்படிக் கூறுவதிலும் தவறில்லை. ஆனால் வேதம் சொல்லின் மயமாகவே விளங்குவது என்பதால் இங்கே ஆறு என்பதை வழி என்ற பொருளிலேயே கையாண்டு சொல்லுலகத்தை மட்டுமே ஆறங்கம் என்பதே சிறந்த பொருளாகும்.

இதனை உணராதவர் இதனை 'வேறங்கமாக விளைவு செய்து அப்புறம் பேறங்கமாகப் பெருக்குகின்றாரே' என்று வடமொழி வேதத்தின் ஆறங்கத்தை வேறங்கமாகத் திருமூலர் பாடுவதால் இது மேலும் தெளிவாகிறது.

இந்த தமிழ் வேத நெறியை திருநெறி என்றும், அதுவே பெருநெறி என்றும், அதுவே குருநெறி என்றும், அதுவே சிவமா நெறியாகிய ஒரு நெறி என்றும் பாடிப் பரவுகின்றார் திருமூலர்.

பாடல் வருமாறு:

''திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறியாம் சிவமாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே''

இங்கே வேதாந்தம் என்பது தமிழ் வேதத்தின் சாரம் என்று பொருள். அதனால் தான் தமிழ் வேதமாகிய பன்னிரு திருமுறையில் முதல் திருமுறையில் ஞான சம்பந்தர் பாலறிவால் வாலறிவு பெற்று வணங்கிப் பாடிய முதல் பதிகத்திலேயே தாம் சார்ந்தது திருமூலர் கூறிய

அருநெறி, பெருநெறி, அதுவே திருநெறி என்று தெளிவாக்கினார். பாடல் இதோ!

"அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய பிரமாபுரம் மேவியபெம்மான் இவன் தன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த
திருநெறிய தமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே!"

ஆகமச் சிறப்பு

இதுவரை பாயிரத்தில் திருமூலர் தாம் கொண்ட தமிழ் வேதத்தின் சிறப்புக்களைத் தெளிவாக்கியவர் அடுத்து தமிழாகமத்தின் சிறப்பைக் கூறுகிறார்.

ஆகமங்கள் மொத்தம் எத்தனை என்று முதல் பாடலில் தொகை கூறுகிறார்:

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே

இதே பாடலுக்கு பாடபேதமாக ஒரு அடியே மாறிவரும் பாடலும் உண்டு. அது வருமாறு:

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்
எஞ்ஞலில் விஞ்ஞகர் இருபத்தெண்மரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே.

முதல் பாடலில் வரும் மூன்றாவது அடியே இரண்டா வது பாடலில் மாறி வருவது காண்க. பாடபேதம் என்றால்

பொதுவாக ஒரு சொல் அல்லது சிறுபான்மையாக இரண்டு சொற்றொடர்கள் மாறி வரும். ஆனால் இங்கே ஒரு அடியே மாறிவருவதால் இதனைப் பாடபேதம் என்று சொல்லலாகாது. இதனை இடைச் செருகல் என்றே சொல்ல வேண்டும். இப்போது முதல் பாடலில் உள்ளது இடைச் செருகலா அல்லது இரண்டாவது காட்டிய பாடலில் உள்ளது இடைச் செருகலா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். அதற்குமுன் முதல் இரண்டு வரிகளின் பொருள் என்ன என்று பார்ப்போம்.

அதாவது, கரிய திருமேனியை உடைய அரிவையைப் பாகமாக உடையவனை விளம்புவதால் அவனாகவே விளங்குகின்ற ஆகமங்கள் மொத்தம் 5 + 20 + 3 என 28 உள்ளன.

ஆகமங்கள் 28 என்று இந்தப் பாடலில் கூறியவர் அடுத்த பாடலில் வேறு ஓர் எண்ணிக்கையைக் கூறுகிறார். அது வருமாறு:

"அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரம்"

மேலே ஆகமங்கள் 28 என்று கூறிவிட்டு அடுத்த பாடலில் 28 கோடி லட்சம் என்பது முரண்போலத் தோன்றும். இவ்வளவு வெளிப்படையாக முரண்படப் பாடுவாரா திருமூலர்? ஒரு வேளை ஆண்டுக்கு ஒரு முறை ஒரு பாடலாகப் பாடினார் என்பதால் போன ஆண்டு பாடியதை மறந்து அடுத்த ஆண்டு இப்படிப் பாடி விட்டாரா? இந்தக் கேள்வி சுவையானதாக இருக்கலாம். ஆனால் யாரைப் பார்த்துத் தொடுக்கப்படுகிறது? திருமூலர் என்ற சித்தெலாம் வல்ல அருளாளரைப் பார்த்தல்லவா? அவரோ திரிகால ஞானி. 'அந்தி மதிபுனை அரனடி நாடொறும் சிந்தை செய்து' தமிழாகமமாகிய திருமந்திரத்தைச் 'செப்பலுற்றேனே' என்று பாடியவர். அவரிடம்

மேற்சொன்ன கேள்வி பொருத்தமிலாது பொடிப் பொடியாகி வீழும். எனவே இந்த இரண்டிற்கும் இடையே அமைதி காண்பதே சரி. அப்படியானால், 28 கோடி லட்சம் என்பது 28 ஆகமத்தில் காணப்படும் மொத்த எழுத்துக் களாகக் கொள்ள வேண்டும்.

வைணவத்தில் இப்படி எழுத்துக்களை அளவிட்டு ஈராயிரப்படி, ஆறாயிரப்படி, முப்பத்தாறாயிரப்படி என்றெல்லாம் திவ்வியப் பிரபந்த உரை வகைகளைக் கூறுவது உண்டு. அதுபோல இதையும் கொள்ள வேண்டும். அது மட்டுமல்லாமல் திருமூலரே இன்னொரு பாடலில் இவ்வாறு கூறுகிறார்:

“அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரிது
எண்ணில் எழுபது கோடி நூறாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே!”

இந்தப் பாடலில் அண்ணல் அருளிய ஆகமங்கள் 70 கோடி லட்சம் என்கிறார். முன்னே 28 கோடி லட்சம் என்று கூறியவர் அதற்கும் மேல் 70 கோடி லட்சம் என்பது மேலும் முரணாகாதா? என்ற கேள்வி எழும். அதற்குப் பதிலை இப்பாடலிலேயே வைத்து இருக்கிறார். இங்கே நான் சொன்னது எண்ணில் எழுத்தது என்று கூறி விளக்கினார். எனவே இங்கே 70 கோடி நூறாயிரம் என்பது எழுத்துக்கள் என்று தெரிகிறது. 28 கோடி லட்சம் என்று முன்னே சொன்னதும் எழுத்துக்களின் எண்ணிக்கையே என்பதும், அது மூல ஆகமங்கள் 28இல் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கையாக இருக்கலாம் அல்லது மூல ஆகமங்கள் 28இன் விரிவுரையாக இருக்கலாம் என்பதும் தெளிவாகிறது.

இங்கே 70 கோடி லட்சம் என்பது தேவர்கள் உலகில் போற்றிய ஆகம உரையின் எழுத்தெண்ணிக்கை

எனலாம். திவ்வியப் பிரபந்தத்திற்குப் பலவேறு உரையாசிரியர்களின் உரைகள் பல்வேறு எழுத்தெண்ணிக்கையில் அமைந்ததுபோல இங்கேயும் மண்ணில் 28 கோடி லட்சம் எழுத்தெண்ணிக்கையிலும் விண்ணில் 70 கோடி லட்சம் எழுத்தெண்ணிக்கையிலும் ஆகமங்களின் உரைகள் இருக்கலாம். இதுவே ஆகமங்களின் எண்ணிக்கையை வெவ்வேறாகக் கூறுகின்ற மேற்சொன்ன மூன்று பாடல்களின் பொருளையும் ஏற்புடைக் கோடல் என்ற உத்தியால் பொருந்த வரும் முறையால் அமைதி செய்ததாகும்.

இதோடு விட்டதா என்றால் இல்லை. நாலாவது பாடல் ஒன்றில் திருமூலர் ஆகமம் 28 இல்லை மொத்தம் ஒன்பதே என்கிறார். பாடல் வருமாறு:

"ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேதம் உற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மையொன்று
ஆக முடிந்த அருஞ்சுத்த சைவமே"

இந்தப் பாடல் 1429ஆம் பாடலாக திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் 'மார்க்க சைவம்' என்ற தலைப்பில் பதிப்பித்திருக்கிறார்கள். இதை ஏன் இங்கே கொண்டு வந்து பதிப்பித்தார்கள் என்பது புரியவில்லை. பாடலில் இறுதியில் 'சுத்த சைவம்' என்று வருவதால் சைவத்தின் பிரிவுகளைச் சொல்லும் 5ஆம் தந்திரத்தில் பதிப்பித்தார்களா என்று பார்த்தால் அதுவும் பொருந்தி வரவில்லை. இந்தப் பாடல் சுத்த சைவம் என்ற தலைப்பில் வரும் பாடல்களோடு பதிப்பிக்கப்படவில்லை. பதிலாக 'மார்க்க சைவம்' என்ற தலைப்பில் வரும் பாடல்களோடு பதிப்பித்திருக்கிறார்கள்.

எப்படிப் பார்த்தாலும் சரி, இந்தப் பாடலின் போக்கைப் பார்த்தால் ஆகமத்தின் எண்ணிக்கையையும்

அதன் பிரிவுகளையும், தொகை காட்டி விளக்குவதால் 'ஆகமச் சிறப்பு' என்ற தலைப்பில் வரும் பாயிரப் பாடல்களோடு பதிப்பதே மிகச் சரியானதாக இருக்கும். நல்ல காலம், வேதாந்தம், சித்தாந்தம் என்ற சொற்கள் வருகின்ற காரணத்தால் எட்டாம் தந்திரத்தில் 'ஆறந்தம்' என்ற தலைப்பில் இதனைச் சேர்க்காமல் விட்டார்களே! இனி, பாடலின் பொருளுக்கு வருவோம்! அது வருமாறு:

''ஆகமம் மொத்தம் ஒன்பதே. அந்த ஒன்பதே நாலேழாக அதாவது 28 ஆகப் பிரிக்கப்பட்டது. அதாவது ஒவ்வொரு தந்திரமும் கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்று மும்மூன்றாயிற்று. அதன்படி பார்த்தால் 9X3 = 27 ஆயிற்று. அத்துடன் வேதாந்தம் என்று பிண்டத்தில் பெறும் இறையனுபவமும் அதன் சாயுச்சியமாக சித்தாந்தம் என்கிற அண்டத்தில் பெறும் இறையனுபவமுமான மெய்ம்மையை மேற்சொன்ன 27 ஆகமப் பிரிவுகளின் சாரமாக நிச்சயித்த பிரிவு ஒன்று (இது அநேகமாக சர்வ ஞானோத்தரம் என்பதாக இருக்கலாம்) ஆக இவற்றைக் கூட்டி முடிக்க வரும் 28 ஆக சுத்த சைவத்தின் ஆகமங்கள் கூறப்படும்.

இன்று வடமொழி ஆகமங்கள் கூட சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்ற நான்கு பிரிவுகளை உடையன என்பது மேற்கண்ட பாடலின் பொருளை வலியுறுத்துகிறது. எனில் நான்கு பாதங்களாகப் பிரிக்காமல் மூன்று பாதங்களாகப் பிரித்ததின் காரணம் என்ன என்பதை சிறப்புப் பாயிர உறுப்பாக வந்த 'கேட்போர்' என்ற உறுப்பில் சரியாகக் காட்டினார்.

அதாவது 'நேர்ந்திடும் மூல சரியை நெறி இதென்று' என்று தொடங்கும் பாடலில் திருமூலரிடம் மாணவர்களாகப் பயின்ற கந்துரு என்பவரும், காலாங்கி கஞ்சமலையமான் என்பவரும் ஏற்கெனவே சரியை நெறியில்

ஆழங்கால்பட்ட நிலையில் தமிழாகமமாகிய திருமந்திரத்தைக் கேட்டார்கள் என்று பார்த்தோம். அத்தோடு அதன் மூலம் திருமந்திரத்தைக் கேட்கத் தகுதி பெற்றோர் ஏற்கெனவே சரியை நெறியில் ஆழங்கால் பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது திருமூலரின் திருவுள்ளம் என்று அறிந்தோம்.

அதற்கு ஏற்ப திருமூலர் சரியை பாதத்தை இங்கே விட்டார். விட்டு, ஆகமத்தை ஏனைய கிரியை, யோகம், ஞானம் என்ற மூன்று பாதங்களாகப் பிரித்தார் என்று கருதவேண்டும். இப்போது கணக்கு சரியாக வந்து விடுகிறது.

அதாவது ஆகமங்கள் மொத்தம் ஒன்பது. அவற்றை கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்ற முப்பேதங்களாகப் பிரிக்க 9X3 = 27 ஆகும். அத்துடன் இதுதான் உண்மை அனுபவம் என்று சித்தாந்தம் செய்த, அதாவது நிச்சயித்த மெய்ம்மைப் பகுதி ஒன்றைக் கூட்டினால் மொத்தம் 28.

அது சரி, ஆகமங்கள் மொத்தம் ஒன்பது என்கிறாரே அவை யாவை என்று சொன்னாரா என்றால் அவற்றைப் பட்டியலிட்டு ஒரு பாடலைப் பாடியிருக்கிறார். அந்தப் பாடல் வருமாறு:

பெற்றநல் ஆகமம் காரணம் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமளம் ஆகுங்காலோத்தரம்
துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே

இதன்படி ஆகமங்களின் பட்டியல் வருமாறு:

1) காரணாகமம்

2) காமிகாகமம்

3) வீராகமம்

4) சிந்தியாகமம்

5) வாதுளாகமம்

6) வியாமளாகமம்

7) காலோத்தராகமம்

8) சுப்பிரபேதாகமம்

9) மகுடாகமம்

இந்தப் பாடலில் 'பெற்ற நல்லாகமம்' என்று தொடங்குகின்றார். பெற்றது என்றால் யார் பெற்றார்? இன்னொரு பாடலில் 'நவ ஆகமங்கள் எங்கள் நந்தி பெற்றானே' என்று வருவதில் இதற்கு விடை கிடைக்கிறது. பாடல் வருமாறு:

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில் தாம்பெற்ற
நவஆகமம் எங்கள் நந்தி பெற்றானே

ஆகமங்கள் வந்த வரலாறு இங்கே கூறப்படுகிறது. அதாவது, சிவபெருமான் நவ ஆகமங்களை, அதாவது ஒன்பது ஆகமங்களை சத்திக்கு உபதேசம் செய்தார். சத்தி அந்த ஒன்பது ஆகமங்களை சதாசிவத்திற்கு உபதேசித் தாள். சதாசிவம் அந்த ஒன்பது ஆகமங்களை ஈசுர தத்துவ அதிபதி ஆகிய மகேசுவரர்க்கும், சுத்த வித்தை தத்துவ அதிபதிகளான வித்யேச்சுவரர்களுக்கும் உபதேசித்தார். வித்யேச்சுவரர்களில் ஒருவர் (அனந்தர்) உருத்திர தேவர்களுக்கு உபதேசித்தார். அவர்களில் ஒருவர் அந்த ஒன்பது ஆகமங்களை திருமாலுக்கு உபதேசித்தார். திருமால் அந்த ஒன்பது ஆகமங்களை பிரமனுக்கு உபதேசித்தார்.

இப்படி இவர்களில் ஒருவருக்கொருவர் தம்மில் தாம் பெற்ற அந்த ஒன்பது ஆகமங்களை சிவபெருமானிட

மிருந்து கயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் முந்தை நிகழ் கோயிலுக்கு முதற்பெரு நாயகமாகிய அதிகார நந்தி பெற்றார் என்பது பாடலின் கருத்து.

அதாவது சிவபெருமானிடமிருந்து ஒன்பது ஆகமங்கள் சத்தியின் வழியாகப் பெற்ற ஞானக் கொடி வழி ஒன்று. அதில்லாமல் சிவபெருமானிடமிருந்து ஒன்பது ஆகமங்களை நேரடியாகப் பெற்ற நந்தியெம் பெருமானின் ஞானக் கொடி வழி மற்றொன்று. இந்த ஞானக் கொடி வழியைத் தான்,

"நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்றுதொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோடு எண்மரும் ஆமே"

என்ற பாடலில் கூறினார் என்பதை முன்பே பார்த்தோம்.

சிவமாம் பரத்தினில் சத்தி சதாசிவம் என்பது சைவ சித்தாந்தத்தில் கூறப்படும் 36 தத்துவக் கொடிவழி. முப்பத்தாறு தத்துவங்களால் தான் இந்த உடம்பு கலவை செய்து கடவுளால் நமக்கு தரப்படுகிறது. அவற்றின் விரிவை இங்கே நமக்கு வேண்டுமளவிற்கு பார்ப்போம். அதாவது மேல் நிலையிலிருந்து கீழ் நிலைக்கு இறங்குமுகமாகப் பார்ப்போம்

சிவ தத்துவங்கள் 5	*- சிவத் தத்துவம்*
	சத்தித் தத்துவம்
	சதாசிவத் தத்துவம்
	ஈசுரத் தத்துவம்
	சுத்த வித்தைத் தத்துவம்
வித்தியா தத்துவம் 7	*- காலத் தத்துவம்*
	நியதித் தத்துவம்

கலா தத்துவம்
வித்யா தத்துவம்
அராகத் தத்துவம்
புருடத் தத்துவம்
குணத் தத்துவம்
(மூலப்ரகிருதி தத்துவம்)

ஆன்ம தத்துவம் 24 - *மனத் தத்துவம்*
புத்தித் தத்துவம்
சித்தத் தத்துவம்
அகங்காரத் தத்துவம்
மெய் தத்துவம்
வாய் தத்துவம்
கண் தத்துவம்
மூக்குத் தத்துவம்
செவித் தத்துவம்
காலியக்கத் தத்துவம்
கையியக்கத் தத்துவம்
நாக்கியக்கத் தத்துவம்
கருவாய் இயக்கத் தத்துவம்
எருவாய் இயக்கத் தத்துவம்
சுவைத் தத்துவம்
ஒளித் தத்துவம்
ஊற்றுத் தத்துவம்
ஓசைத் தத்துவம்
நாற்றத் தத்துவம்

ஆகாயத் தத்துவம்
காற்றுத் தத்துவம்
நெருப்புத் தத்துவம்
நீர் தத்துவம்
மண் தத்துவம்

இங்கே பார்த்தவாறு சிவ தத்துவம் 5 + வித்தியா தத்துவம் 7 + ஆன்ம தத்துவம் 24 ஆகியவற்றைக் கூட்ட மொத்தம் 36 தத்துவம்.

இவை எல்லாம் சடங்கள். இவற்றை இயக்குகின்ற அதிபதிகள் வேண்டும். இல்லாவிடில் இவை தாமாக இயங்காது. அந்த அதிபதிகளைப் பார்ப்போம்.

தத்துவம்		அதிபதி
சிவத் தத்துவம்	-	*சிவம்*
சத்தித் தத்துவம்	-	*சத்தி*
சதாசிவத் தத்துவம்	-	*சதாசிவம்*
ஈசுரத் தத்துவம்	-	*மகேசுவரர்*
சுத்த வித்தை	-	*மகேசுவரர் (அட்ட வித்யேச்சுவரர்கள்)*
காலத் தத்துவம்	-	*உருத்திரன்*
நியதித் தத்துவம்		
கலா தத்துவம்		
வித்தியா தத்துவம்		
அராகத் தத்துவம்		
புருடத் தத்துவம்		
குணத் தத்துவம்	-	*திருமால்*
மனத் தத்துவம்	-	*பிரம்மன்*
முதல் 24 ஆன்ம தத்துவங்கள்		

எனவே 36 தத்துவங்களை இயக்குவதற்கு உரிய முறைகளை இந்தக் கொடி வழியாகக் கூறியவைதான் அந்த ஒன்பது ஆகமங்கள்.

ஆனால் நந்தியெம் பெருமானோ இந்த 36 தத்துவங்களைக் கடந்த பக்குவத்தில் சிவபெருமானோடு ஏகனாகி இறைபணி நிற்கின்ற அதிகார நந்தி. கயிலையங் கிரியில் கோயிலுக்குள் திருமால், பிரமன், உருத்திரன் ஆகிய முன்கூறிய பக்குவ ஆன்மாக்கள் அனைவரையும் கண்காணித்து உள்ளே விடுபவர். எனவே நந்தியெம் பெருமான் முன்கூறிய கொடி வழியே திருமாலிடமோ அல்லது பிரம்மனிடமோ ஒன்பது ஆகமங்களைப் பெற்றார் என்பது உண்மைக்குப் பொருந்தாது.

எனவே தத்துவ அதிபர்கள் கொடி வழியே பெற்ற அதே ஒன்பது ஆகமங்களையே சிவபெருமானிடமிருந்து நந்தியெம் பெருமான் பெற்றார் என்பது பாடல் விளக்கும் பொருள்.

ஆகமங்கள் வந்த வரலாறாக திருமூலர் திருமந்திரத்தில் கூறுவது இதுதான். ஆனால் ஆகமங்கள் வந்த வரலாற்றை வடமொழி சிவாகமங்கள் சிறிது திரித்து வேறாகக் கூறுகின்றன. இதை சிவஞான மாபாடியத்தில் சிவஞான முனிவர் அப்படியே பின்பற்றுகிறார். அதன்படி கூறப்படும் ஆகம வரலாறு இதுதான்:

பேரூழிக் காலத்தின் முடிவிலே உலகங்களை மீளப் படைப்பதன் பொருட்டு பரமசிவன் தன் பாகமான பரா சத்தி குடிலை என்பதை நோக்கினாள். குடிலையிலிருந்து நாதம் தோன்றியது. நாதத்தில் விந்து தோன்றியது. விந்துவி லிருந்து அட்சரங்கள் தோன்றின. அட்சரங்களை எல்லாம் தொகுத்துச் சொற்களாக்கி, சொற்களைக் கொண்டு சொற்றொடர்களை உண்டாக்கிப் பின் அவற்றால்

செய்யுளாக்கினாள். இதனைப் பிறர்க்கு அருள்வதற்காக ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோ ஜாதம் என்கின்ற ஐந்து முகங்கள் உடைய சதாசிவ மூர்த்தியின் உருவத்தை பரமசிவன் எடுத்தான். தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்கிற திசைக் கொன்றான நான்கு முகங்களால் நான்கு வேதங்களை அநந்த தேவர் என்பவர் வழியாக பிரம்மனுக்கு உபதேசித் தார். அடுத்து மேல் நோக்கிய முகமான ஈசான முகத்தி லிருந்து காமிகம் முதலான இருபத்தெட்டு ஆகமங்களைத் தோற்றுவித்தான். இந்த 28 ஆகமங்களையும் பிரித்துச் சொல்லும் முறையால் தனித்தனியே ஒவ்வொரு ஆகமத்தை பிரணவர் முதலிய 10 பேருக்கும், மகாருத்திரர் என்கிற 18 பேருக்கும் உபதேசித்தான். அதனால் இவை சிவபேதம் 10, உருத்திர பேதம் 18 என்று ஆயிற்று. அதோடு நின்றுவிடவில்லை சதாசிவன். 28 ஆகமங்களை யும் தொகுத்து அட்ட வித்தியேசர்களில் முதலானவரான அநந்த தேவருக்கு உபதேசித்தான். (எனில் இந்த அநந்த தேவருக்குத் தான் நான்கு வேதங்களும், 28 ஆகமங்களும் ஒரு சேர சதாசிவன் உபதேசித்தான் என்று புலனாகிறது.)

இந்த அநந்த தேவர் 28 ஆகமங்களை 118 உருத்திரர் களில் முதல்வரான ஸ்ரீ கண்ட ருத்திரருக்கு உபதேசித்தார். 4 வேதங்களை பிரம்மனுக்கு உபதேசித்தார். அந்த சீகண்ட ருத்திரர் நந்தியெம்பெருமானுக்குத் தாம் அநந்த தேவரிடம் பெற்ற 28 ஆகமங்களை உபதேசித்தார். இதுதான் ஆகமம் வந்த வரலாறு என்று கூறப்படுகிறது.

இங்கே பார்த்தால் திருமூலர் கூறுவதற்கும் சிவாகம சாரமாக சிவஞான பாடியம் கூறுவதற்கும் பார தூரமான வேறுபாடுகள் இருக்கின்றன. சிவபெருமான் சத்திக்கு ஒன்பது ஆகமங்கள் கூற சத்தி அந்த ஒன்பதை சதாசிவத்திற்குக் கூறினார் என்று திருமூலர் கூற, வடமொழி ஆகம வரலாறோ சிவபெருமானே சதாசிவ மூர்த்தியாய்

உருவெடுத்து ஒன்பது ஆகமங்களைக் கூறினான் என்கிறது. நடுவில் சத்தி சிவபெருமானிடமிருந்து 9 ஆகமங்களைப் பெற்றாளா இல்லையா என்று வடமொழி ஆகம வரலாறு கூறவில்லை.

திருமூலர், சிவபெருமானே முதலில் 9 ஆகமங்கள் கூறியதாகக் கூற இங்கே சதாசிவம் தான் முதலில் 28 ஆகமங்கள் கூறியதாகச் சொல்லுகிறது. திருமூலர் 9 ஆகமங்களும் கொடி வழியாகப் பிரம்மனுக்கும் உபதேசிக்கப்பட்டது என்கிறார். இங்கே அநந்த தேவர் வழியாக பிரம்மன் வேதங்கள் நான்கையும் தான் உப தேசிக்கப் பெற்றானே ஒழிய 28 ஆகமங்கள் அவனுக்கு உபதேசிக்கப்பட்டதாகக் கூறப்படவில்லை. தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற நான்கு முகங்களிலிருந்து நான்கு வேதங்கள் வெளிவந்ததாகக் கூறப்படுமானால் எந்த முகத்திலிருந்து எந்த வேதம் வந்தது? தற்புருடத்திலிருந்து ரிக் வேதம், அகோரத்தி லிருந்து யஜுர் வேதம், வாமதேவத்திலிருந்து சாம வேதம், சத்யோ ஜாதத்திலிருந்து அதர்வண வேதம் என்று கூறலாமா? அப்படிக் கூறுவதை வைதிகப் பிராம்மணர்கள் ஏற்பதில்லையே அதற்கு என்ன செய்ய? அவர்கள் வேதம் நான்கும் யாராலேயும் தோற்றுவிக்கப்பட வில்லை என்றும், தானே தோன்றியதால் அதற்கு சுயம்பு என்று பெயர் என்றும் கூறுகிறார்களே, அதற்கு என்ன சமாதனம் ஆகம வரலாறு கூறுபவர்கள் கூறுவார்கள்?

இதனால் இது யாரோ இட்டுக் கட்டிய கட்டுக் கதை என்பது தெளிவாகிறது.

இனி, ஒவ்வொரு ஆகமமாகக் கேட்ட பிரணவர், மகாருத்திரர் கதையையும் ஆராய்ந்து பார்த்தால் கட்டுக் கதை என்பது தெரிகிறது.

ஏனென்றால் பிரணவர் முதலான சிவர்கள் 10 பேர்கள் என்கிறார்களே அவர்கள் யார்? பட்டியல் உண்டா? இல்லை. 18 மகா ருத்திரர்கள் என்கிறார்களே அதற்காவது வடமொழி ஆகமங்களில் பட்டியல் உண்டா? இல்லை. 'இரத்தினத் திரயம்' என்ற ஆகமத் துணைநூல் 18 மகா ருத்திரர்களை ஈசுர தத்துவ அதிபதிகள் என்று கூறுவதாகத் தெரிகிறது. அப்படியானால் பிரணவர்கள் எந்த தத்துவத்தைச் சேர்ந்தவர்கள்? வடமொழி ஆகமங்களில் விடையில்லை.

இதையெல்லாம் பார்த்து ஒரு வடமொழியாளர் தேர்தல் நேர வாக்காளர் பட்டியல் மாதிரி ஒன்றைத் தயாரித்தார். அதில்

பிரணவர்கள் - 30 பேர்

மகா ருத்திரர்கள் - 36 பேர்

என்று கணக்குக் காட்டப்பட்டு பட்டியலாகப் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதற்கு எது அடிப்படை என்றும் கூறப்படவில்லை. பெயர்களும் மாறிமாறி வருகின்றன; திரும்பத் திரும்ப வருகின்றன; தவறாக வருகின்றன. இவற்றின் விரிவை எல்லாம் எனது 'செந்தமிழாகம குடநீராட்டு நன்னூல்' என்ற நூலில் பக்கம் 271-லிருந்து 281 வரை கொடுக்கப்பட்டிருக்கும் விவரங்களில் அறிக. ஆக, இது ஒரு போலிப் பட்டியல்.

இதேபோல் 118 ருத்திரர்கள் பட்டியல் எங்கே? 118 ருத்திரர்களும் முன்சொன்ன 18 மகா ருத்திரர்களும் வேறா? இவ்விருவரும் தங்கிய தத்துவங்களும் வெவ்வேறா ஒன்றா? அதில் 118 ருத்திரர்கள் 18 மகா ருத்திரர்களை விட தாழ்ந்த நிலையில் இருப்பதுபோலத் தொனிக்கிறது. அப்படியானால் ருத்திரர்களில் தாழ்ந்த நிலையில் உள்ள சீகண்டருத்ரரிடம் நந்தியெம்பெருமான் 28 ஆகமங்களைக் கேட்டாரா? இவர் எப்படி 118 ருத்திரர்களையும், அதற்கு

மேலான நிலையில் உள்ள சதாசிவர்களையும் சிவபெருமான் கயிலைக் கோயிலுக்குள் பரிசோதித்து விடுபவரான அதிகார நந்தி ஆனார்?

இதற்கெல்லாம் வடமொழி ஆகம வரலாற்றில் விடை இல்லை.

அத்துடன், திருமூலர் கூறும் 9 ஆகமங்களும் வடமொழி கூறும் ஆகமங்களும் வேறுபடுகின்றன. வடமொழி ஆகமம் 28 என்று கூறுவனவற்றின் பட்டியல் இதுதான்.

1) காமிகம்	8) சகஸ்ரம்	15) வீரம்	22) லலிதம்
2) யோகஜம்	9) அம்சுமான்	16) சௌரம்	23) சூக்தம்
3) சிந்தியம்	10) சுப்ரபேதம்	17) மகுடம்	24) சந்தானம்
4) காரணம்	11) விஜயம்	18) விமலம்	25) சர்வோக்தம்
5) அஜிதம்	12) நிச்வாசம்	19) சந்திர ஞானம்	26) பரமேஸ்வரம்
6) தீப்தம்	13) சுயும்பு வாசம்	20) பிம்பம்	27) கிரணம்
7) சூட்சுமம்	14) அனலம்	21) புரோக்தம்	28) வாதுளம்

இந்தப் பட்டியலையும், நந்தி சிவபெருமானிடமிருந்து பெற்றதாக திருமூலர் கூறும் ஒன்பது ஆகமங்களின் பட்டியலையும் ஒப்பிட்டுப் பார்த்தோமானால், திருமூலர் கூறிய ஒன்பதில் ஏழு வடமொழி ஆகமப் பட்டியலில் காணப்படுகிறது. அந்த 28 ஆகமப் பட்டியலில் திருமூலர் கூறிய காலோத்தரமும், வியாமளமும் காணப்படவில்லை. காலோத்தரம் என்பதை தேவி காலோத்தரம் என்று உப ஆகமமாக வடமொழி ஆகமவாணர் கூறுகின்றனர். 28 ஆகமங்களுக்கு உப ஆகமங்கள் 207 உள்ளதாகவும் அதில் ஒன்றாக தேவிகாலோத்தரத்தைக் கூறுகின்றனர்.

இதிலிருந்து திருமூலர் கூறிய ஒன்பது ஆகமப் பட்டியலும் வடமொழி ஆகமங்கள் 28இன் பட்டியலும்

வெவ்வேறு என்பது புலனாகிறது. சரி, வடமொழி ஆகமங்கள் 28-ம் இப்போது கிடைக்கின்றனவா என்றால் அதுவும் இல்லை என்கிறார் ஆகமங்களை ஆய்ந்த ஆராய்ச்சி அறிஞர் மு. அருணாசலம் அவர்கள். ஆகமங்களை வடமொழியிலேயே வெளியிட்டு வரும் புதுச்சேரி இண்டாலஜி அலுவலகத் துறையும் ஆறு ஆகமங்களைத் தான் வெளியிட்டுள்ளது. இதற்கு வேறாக ஆகமங்கள் கிடைக்கவில்லை. இதனால் வடமொழி ஆகமங்கள் 28இன் பட்டியலால் ஒரு பயனும் இல்லை. கிடைக்காத ஒன்றை வெறும் பட்டியலிட்டுக் காட்டுவதில் என்ன பயன்?

கிடைக்கின்ற ஆகமங்களிலும் யோக பாதமும், ஞான பாதமும் கிடைக்கவில்லை என்று 'சிவ ஆகமங்கள்' என்ற நூலில் டாக்டர் எஸ்.பி. சபாரத்தினம் கூறுகின்றார். எனவே அவையும் முழுமையாகக் கிடைக்கவில்லை என்று புலனாகிறது.

இதிலிருந்து ஆகமங்கள் மொத்தம் ஒன்பதே என்பது வலியுறுகிறது. இறைவனே 9 ஆகமங்களைத் தான் அருளினான் என்று திருமூலர் கூறும்போது எப்படி 28 ஆகமங்கள் முளைக்கும்? எனவே அது ஏற்கத்தக்கதல்ல. ஒன்பது ஆகமங்களே திருமூலர் கூறியது போல கிரியா பாதம், யோக பாதம், ஞான பாதம் என்று முப்பேதமுற்று பிரிந்து அவற்றின் சாரமான ஒன்றோடு கூடி 28 ஆயிற்று என்று திருமூலர் கூறியதைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஆகமம் 28-ற்கு ஒரு போலிப் பட்டியல் புனையப்பட்டது என்பதே நடு நின்று ஆய்பவர்கள் எல்லாரும் கொள்ளத்தக்கது.

இதே போன்று தான் ஆகமங்களைக் கேட்டவர்கள் தொகையிலும் தமக்குத் தோன்றியவாறு புனைந்து கூறினர்.

"என்னுலில் விஞ்ஞகர் இருபத்தெண்மரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே"

என்று ஒருவரும்,

அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே

என்று மற்றொருவரும், தத்தமக்குத் தோன்றியவாறே கூறி இருக்கலாம்.

இதில் விஞ்ஞகர் என்பது வித்யேசர்களைக் குறிப்பதாகக் கொண்டால் வித்யேசர்கள் 28 பேர் அரும் பொருளான ஆகமத்தைச் சதாசிவரிடம் கேட்டார்கள் என்று ஆகும். ஆனால் வித்யேசர்கள் மொத்தம் எட்டு பேர்தான். அதனால் அவர்கட்கு அட்ட வித்யேசர்கள் என்றே பெயர் கூறுவர். அவர்கள்:

1) அநந்த தேவர்
2) சூக்குமர்
3) சிவோத்தமர்
4) ஏகநேத்திரர்
5) ஏகருத்திரர்
6) திரிமூர்த்தி
7) சிகஷ்டன்
8) சிகண்டி

இவர்களில் மேலானவரான அநந்த தேவருக்குத்தான் 4 வேதங்களும் 28 ஆகமங்களும் சதாசிவரால் ஒரு சேர உபதேசிக்கப்பட்டன என்று வடமொழி ஆகம வரலாறு கூறுகிறது. இதில் அநந்த தேவர் முதலான வித்யேசர்கள் மொத்தம் 8 பேர்தான். இருபத்தெட்டு ஆகமங்களைச் சதாசிவரிடம் கேட்டவர்கள் மொத்தம் 8 பேராக இருக்க

இயலாது என்று 28 பேர் என்று கூறி அதற்கு பிரணவர் முதலான 10 பேர் + மகாருத்திரர் முதலான 18 பேர் என்று இட்டுக் கட்டி ''எஞ்ஞலில் விஞ்ஞகர் இருபத்தெண்மரும்'' எனப் பாடபேதம் - இல்லை, இல்லை - இடைச்செருகல் செய்து எழுதி விட்டார்கள்.

எனவே மூல பாடம் 'அஞ்சலி கூப்பி அறுபத்தறு வரும்' என்பதே என்று தீர்மானம் செய்யலாம். இந்த 66 பேர் யார் என்பது புரியாமல் இந்தக் கணக்கிற்கு சரி செய்ய இன்னொருவர், சிவர்கள் 30 + ருத்திரர்கள் 36 என்று தேர்தல் நேர வாக்காளர் பட்டியல்போல போலியாக எழுதி வைத்தார்.

இவர்கள் யார் என்று தெரியாத போது வலிந்து 66 பேர்கள் பட்டியலை நாம் காட்டுவதைவிட அறுபத்தாறு பக்குவ ஆன்மாக்கள் சதாசிவம் சொல்ல 9 ஆகமங்களைக் கேட்டன என்று எடுத்துக் கொள்வது நேர்மையான செயலாகும். சதாசிவம் என்று ஏன் சொல்ல வேண்டும்? இறைவன் என்று ஏன் சொல்லக் கூடாது என்றால் பாடலில் 'அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே' என்று வருகிறது. 'அஞ்சுஆம் முகத்தில்' என்று பிரித்துப் பொருள் காணவேண்டும். அஞ்சு முகங்களையுடைய சதாசிவம் என்று அதற்குப் பொருள்.

இங்கே ஒன்றைக் கூர்ந்து கவனிக்க வேண்டும். அதாவது இறைவனால் 9 ஆகமங்கள் இறைவியான சத்திக்கு உணர்த்தப்பட்டன; அங்கே மொழிக்கு இடமில்லை. சத்தியால் சதாசிவத்திற்கு 9 ஆகமங்கள் மொழியால் கூறப்பட்டன. உணர்த்தப்படுவது வேறு; கூறப்படுவது வேறு. உணர்த்தப்படுவதற்கு மொழி தேவையில்லை; காதலை காதலி காதலனுக்கும், காதலன் காதலிக்கும் உணர்த்தவே மொழி தேவைப்படவில்லை என்பதை முன்பே பார்த்தோம். ஆனால் கூறப்படுவதற்கு

மொழி தேவை. என்ன மொழியால் கூறப்பட்டதாம்? தமிழ் மொழியால் கூறப்பட்டதாம். இது எப்படி தெரிகிறது? திருமூலர்தான் இதை வெளிப்படுத்தினார். 'சதாசிவம் தத்துவம் முத்தமிழ் வேதம்' என்பது அவரது வாக்கு.

''தமிழ் சம்புபட்சத்து சதாசிவர்களுக்கு இறைவனால் கற்பிக்கப்பட்ட மொழி'' என்று வள்ளலாரும் 'தமிழ்' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் தெளிவு படுத்தினார். இங்கே இறைவி கற்பித்தது இறைவன் கற்பித்ததாகக் கூறப்பட்டது. காரணம், இறைவிக்கும் இறைவனுக்கும் இடையே வேறுபாடு இல்லையாதலால்.

இனி சதாசிவர் தன் கீழ் உள்ள அறுபத்து ஆறு பேருக்கு ஆகமங்களைத் தமிழில்தான் கூறினார். அது மொழியால் உரைக்கப்பட்டதனால் 'அரும்பொருள் கேட்டதே' என்று இப்பாடலில் குறிப்பிட்டார். ஆனால் தேவி இறைவனிடம் ஆகமங்களை மொழியால் கேட்கவில்லை; உணர்த்தப்பட்டாள் என்பதைக் குறிக்க, 'அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்' என்பதோடு விட்டு அவன் சொன்னான், கூறினான் என்றெல்லாம் கூறாமல், மொழியின்றி உணர்த்தியதால் எந்தச் சொல்லையும் அங்கே போடாமல் அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம் என்று ஆகமத்தின் தொகையைக் கூறிச் சென்றுவிட்டார் திருமூலர்.

இனி, மொழி என்று வந்தவுடனே திருமூலர் ஒரு விளக்கம் கூற ஆசைப்படுகிறார். அதாவது இருக்கின்ற வளமான மொழிகள் இரண்டு. அப்புறம் காலம் உருண் டோட பல மொழிகள் கிளைத்துப் புறப்பட்டிருக்கலாம். அத்தனையும் இறைவனுக்குச் சொந்தம்தான். ஆனால் இறைவன் அருளிய இரண்டு வளமான மொழிகளாவன தென்தமிழும், வடமொழியும். இதில் எதை முதலில்

சொல்லியிருப்பான்? அது தெரிந்தால் அதுவே உயர்ந்தது என்று கொள்ளலாம் என்று மக்கள் நினைக்கலாம். ஆனால் திருமூலர் இதை எப்படிக் கையாளுகிறார் பார்க்கலாம்.

இறைவன் மக்களுக்கு அறிவு கொளுத்த மொழி தேவை. எனவே எழுத்தோசையை முதலில் படைத்தான் என்று முன்பே பார்த்தோம். அவன் எல்லாவற்றையும் ஒடுக்கியபின் மீண்டும் பொருள் உலகைப் படைக்குமுன் சொல்லுலகைப் படைக்கிறான். இதனை,

"மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்று
ஏரியும் நின்றங் கிளைக்கின்ற காலத்து"

என்றார். பிரளயத்தில் எல்லாம் ஒடுங்கும் என்பர். பிரளயம் வெள்ள நீரால் பொருள்களை எல்லாம் மூழ்கடிக்கும் என்பர். எனவே பெருவெள்ளத்தைக் கூற மாரி என்று தொடங்கினார். பின்னர் கோடை என்றதனால் வெள்ளம் வற்றியதைக் கூறினார். 'வார்பனி தூங்க நின்று ஏரியும் நின்று' என்றது வெள்ள நீர் மற்றும் கோடைக்கு இடையிலான பனி விழும் நாள் எனக் கொள்க. இப்படி மீண்டும் உலகம் புத்துயிர் பெறுங்காலத்து என்று பிரளயத்திற்குப் பின் நடைபெறும் படைப்புக் காலத்தைக் குறித்தார். அப்படைப்புக் காலத்தில் உயிர்களுக்கு அறிவு கொளுத்த மொழி வேண்டுமே! எனவே ஆரியமாகிய வடமொழியையும், தமிழும் உடனே சொன்னான் என்று கூறினார்.

இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஆரியத்திற்கு தமிழ் முந்தியா அல்லது தமிழுக்கு ஆரியம் முந்தியா என்ற கேள்விக்கு விடைகொடுக்கிறார் மூலர். அதாவது ஆரியத்தைக் கூறுவதற்கும், தமிழைக் கூறுவதற்கும் இடையிலே இடைவெளியே இல்லையாம். எனவே,

''ஆரியமும் தமிழும் உடனே சொல்லிக்
காரிகை யார்க்குக் கருணை செய்தானே''

என்று பாடினார். இரண்டு மொழியும் கணநேர இடைவெளியும் இல்லாமல் ஒரே நேரத்தில் இறைவனால் அருளப்பட்ட மொழிகள் என்று கூறினார்.

என்றாலும் கூட பாடலில் ஆரியத்தைத் தானே முதலில் கூறினார் என்று சில வடமொழி விரும்பிகள் வீண்பெருமை அடித்துக் கொள்ளலாம். ஆனால் மாரி, ஏரி என்று முன்னடிகளில் வந்ததற்கு ஏற்ப ஆரியம் என்பதை எதுகை நோக்கி முன் வைத்தாலும் அது தமிழுக்கு முந்தியது என்று ஓர் எண்ணம் வந்துவிடக் கூடாது என்றுதான் தமிழும் உடனே கூறினார் என்றார். இது எதுகை நோக்கி முன்வைத்தார். எனவே வடமொழி விரும்பிகள் முன் பாடலில் கொண்ட பெருமை வீண்பெருமை என்பதை அடுத்த பாடலால் தெளிவு செய்தார். பாடல் வருமாறு:

''அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறும்
சிமிட்டலைப் பட்டு உயிர் போகின்றவாறும்
தமிழ்ச்சொல் வடசொல் எனும் இவ்விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலும் ஆமே''

இந்த இரண்டு பாடல்களையும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக திருமந்திரப் பதிப்பில் உரையாசிரியர் ப. இராமநாதம் பிள்ளை இடைச் செருகல் என்று கருதி விட்டார்.

அந்தணர் ஒழுக்கம்

முத்தமிழ் வேதச் சிறப்பையும், தமிழாகமச் சிறப்பை யும் தெரிவித்த பின் அவற்றைக் கொண்டு ஒழுகும் அந்தணராகிய செந்தண்மை கொண்ட சான்றோர்களால்

நாடு வாழும், நல்லுயிர்கள் உய்தி பெறும் ஆதலால் 'அந்தணர் ஒழுக்கத்தை' இவற்றின் பின் வைத்தார். இதனால் வைப்புமுறை அமைதி காக்கப்பட்டது.

இது பாயிரத்திலேயே வரவேண்டியது. இதனை வரன் முறையாகக் கடைப்பிடித்து சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் ப. ராமநாதம் பிள்ளை சரியாக அமைத்தார். ஆனால் திருப்பனந்தாள் மடத்துப் பதிப்பில் என்ன காரணத்தால் முதல் தந்திரத்தில் கொண்டு போய் சேர்த்துள்ளார்கள் என்பது புலனாகவில்லை.

இங்கே இந்தத் தலைப்பில் இரண்டாவது பாடலில் 'மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே' என்று கூறியதால் மறையோர்கள் என்பவர் மாயாமலம் இல்லாதவர்கள் என்றார். எனவே அவர்கள் இரு மலத்தினர் என்பதாயிற்று. அதாவது பிரளயாகலர். அதற்கு அடுத்த பாடலில் 'சொரூபமதானோர் துகளில் பார்ப்பாரே' என்றதனால் இவர்கள் சாரூப முத்தியைக் கூறியதால் இவர்கள் தனக்கென வினைகளும் இல்லாதவர் என்று தெரிவித்தார். எனவே மாயை, கன்மம் என்ற இரு மலங்களையும் நீங்கிய விஞ்ஞானாகலர் என்று தெளிவு செய்தார். இவ்விரண்டைப் பார்த்த முறைமையால் முதல் பாடல் சகலரைக் குறிப்பிட்டது என்று தெளிகிறோம்.

முதல் பாடல் வருமாறு:

"அந்தணராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமம் செய்து
அந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் பார்களே"

சகலராய், ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் உடைய அந்தணர்கள் அறுதொழில் பூண்டவர்கள். அறுதொழிலாவன: ஓதல், ஓதுவித்தல்,

வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். தமிழ் வேதாகமங் களை தான் ஓதுதல், அவற்றைப் பயில விரும்புவார்க்கு ஓதுவித்தல், தம் நன்மைபொருட்டு தான் வேள்வி செய்தல், உலக நன்மை பொருட்டு, பிறர் பொருட்டு வேள்வி செய்தல், தமக்கு பிறர் அளிக்கும் கொடையை ஏற்று அதனால் அவர்க்கு நன்மை செய்தல், கொடை யாகப் பெற்றவற்றைத் தாம் மட்டுமே அனுபவிக்காமல் பிறர்க்கு அதிலிருந்து ஈதல் என்பன அந்தணர்க்கு உரிய ஆறு தொழில்களாம்.

தொழில் என்பது வினையைக் குறிக்கும். இங்கே இந்த ஆறு வினைகளையும் செய்வதால் புதிதாக ஏறும் வினையைக் குவிக்காது எல்லாம் ஈசன் செயல் என்று எண்ணி வினைகளை ஆற்றினால் புதிதாக வினை ஏறாது. அவ்வாறு வினைகள் ஏறாதவண்ணம் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராக இருப்பதால் வினைகள் அறும் என்பதைக் குறிக்க 'அறுதொழில் பூண்டுள்ளோர்' என்று கூறினார்.

இவர்கள் சடங்கறுப்பவர்கள் என்றார். எனவே சடங்கை ஒழித்தவர்கள் என்று கொள்ளக் கூடாது. அறுத்தல் என்பது இங்கே கடமைகளை ஆற்றி நிறை வேற்றியதைக் குறிக்கும். காரணம் பாடலில் முன்னே நியமம் செய்பவர்கள், முப்போதும் தீயை ஓம்புபவர்கள் என்று கூறியமையால் கடமைகளை ஆற்றி நிறை வேற்றுவது என்பதே பொருந்திய பொருளாகும்.

அடுத்து இரண்டாவது பாடலில் காயத்திரி மந்திர செபம் மட்டும் மேற்கொண்ட இரண்டாவது வகை அந்தணர்களைக் கூறுகிறார்.

காயத்திரியே கருது சாவித்திரி
ஆய்தற்கு உவப்பார் மந்திரம் ஆங்குன்னி

நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே.

இங்கே கூறப்படும் மறையோர்கள் முன்னவரை விட மேலானவர். முன்னவர்கள் மறைப்படி உலகியலில் நடப்பவர்கள். அதாவது உலகியலில் ஒருவர் எப்படி நடக்க வேண்டும் என்று மறை கூறியுள்ளதோ அதன்படி நடப்பவர்கள். அடுத்தவர்கள் மறையின் உள்பொருளை உணர்ந்து அருளியலில் நடைபோடுபவர்கள். எனவே தான் இவர்களை 'நேயத் தேரேறியவர்கள்' என்றார். முன்னவர்களுக்கு மறையவர் என்று பெயர்; பின்ன வருக்கு மறையோர் என்று பெயர். மறையவருக்கும் மறையோருக்கும் உள்ள வேறுபாடு இது. இதை திருமூலர் உணர்த்த உணர்ந்துதான், திருப்போரூர் சிதம்பர சுவாமிகள், திருப்போரூர் திருமுருகன் பள்ளி எழுச்சியில் காலையில் முருகனைப் பள்ளியெழ விண்ணப்பம் சொல்ல வந்தவர்கள் யார் யார் என்று கூறும் போது இந்த இருவகையினரையும் கூறினார்.

'மறைமுடி உணர்ந்தவர் மறையவர் அடியார்
வருபரிசாலகர் அரசர்கள் வணிகர்
குறைவறு வளவர்கள் மற்றுளர் எவரும்
குழுமியே வடமொழித் தென்மொழிப் பாவால்
நிறைதயவுடன் நினைப்புகழ்ந்து நின்று ஏத்தி
நீளுறு தண்டெனப் பணிந்தெழுகின்றார்
எறிமணி அருவிகள் சொரிகிரிப் போரூர்
இறையவனே! பள்ளி எழுந்தருளாயே!'

இங்கே மறைமுடி உணர்ந்தவர் வேறு, மறையவர் வேறு எனக் காட்டியதைப் பாருங்கள்! மறைமுடி உணர்ந் தவர் மறையோர், மறைப்படி உலகியல் நடத்துவோர் மறையவர் என்பது புலனாகிறதல்லவா? 'மறையோரவரே

மறையவரானால்' என்று இப்பகுதியின் இன்னொரு பாடலும் தெளிவாக்குகிறது.

மறையோர்கள் 'காயத்திரியே கருது சாவித்திரி' என்ற வடமொழி வேதச் சந்தங்களை ஆய்ந்து பார்ப்பர். ஆய்ந்தால் காயத்திரியாகிய சாவித்திரி மந்திரமும் சிவபெருமானையே குறிப்பது என்று உணர்வர். காயத்திரி மந்திரம் அந்தி சந்தியில் சூரியனைப் பார்த்து வடமொழி வைதிகர்கள் வணங்கும் மந்திரம். சூரியனை வணங்குகிறாயே அதனை உள்ளிருந்து இயக்குவது சிவ பரம்பொருள் என்பதை உணர்ந்து, சிவ பரம்பொருளை வணங்கு என்று கூறுபவராய், அப்பர் சுவாமிகள் 'அருக்கனாவான் அரன்உரு அல்லனோ' என்று பாடினார். அருக்கன் என்றால் சூரியன். சூரியன் அரன் உரு அல்லவா என்று கேட்கிறார். ஞானசம்பந்தரும்,

'அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே'

என்று தெளிவு படுத்தினார்.

எதையெதையோ வணங்கியவர்க்கு நடுநிலையாக ஆய்ந்து பார்க்க காயத்திரி, சாவித்திரி போன்ற எல்லா மந்திரங்களுக்கும் மேலானது ஐந்தெழுத்து என்று சிவ பரம்பொருளின் மீது ஓர் நாட்டம் உண்டாகும். அந்த நாட்ட உணர்வால் அவர்க்கு சிவ பரம்பொருள் மீது அன்பு பெருகும். அந்த அன்பாகிய நேயத் தேரேறி 36 தத்துவங்களின் கலவையாகிய இந்த உடம்பு என்னும் மாயையை நீங்கி நிற்பர். எனவே இன்னொரு வகையில் சொல்லப் போனால் மாயா மலம் நீங்கியவர் மறையோர். எனவே 'மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே' என்று பாடலில் கூறினார்.

எனவே பிரளயாகலர் மறையோர்; சகலர் மறையவர் என்று கூறலாம். இது இருவர்க்கும் உள்ள வேறுபாடு.

இதன்பின் அவர்க்கு பரநாத அனுபவம் உண்டாகும். எனவே பிரணவத்தில் மூழ்கி பிரணவதேகம் பெறுவர். அதன்பின் முன்னம் குரு காட்டிய வழியில் அவர் உரையின் படி நடக்க மெல்ல மெல்ல சாரூபம் கிடைக்கும். சாரூபம் என்றால் எந்த வழிபடு தெய்வத்தின் உருவை நினைந்து வழிபட்டார்களோ அந்த உருவமே பெற்று நிற்பது.

அன்னையின் கருவிலிருந்து தாம் பெற்ற உருவம் ஒன்றாக தவ முயற்சியால் இப்போது வழிபடு தெய்வத்தின் உருவத்தைப் பெற்றதால் இவர்களை இரு பிறப்பாளர் என்று கூறலாம்.

பார்ப்பு என்கிற தமிழ்ச் சொல் பறவைக் குஞ்சுகளின் பொதுப்பெயர். பறவைகளைப் பொறுத்தவரை அவற்றிற்கு முட்டையாகப் பிறப்பது ஒரு பிறப்பு; பின்னர் அடைகாத்த பின் குஞ்சாகப் பிறப்பது இன்னொரு பிறப்பு. எனவே பார்ப்பாகிய பறவைக்கு இரு பிறப்பு உண்டு. அதைப்போல தவ முயற்சியால் மறையோர்களும் கருவிலிருந்து பெற்ற உருவம், பின்னர் தவ முயற்சியால் சாரூபம் என்ற உருவம் இரண்டையும் பெறுவதால் இவர்கள் பார்ப்பைப் போன்றவர்கள். அதாவது பார்ப்பு அன்னார். இது ஒரு சொற்றொடராக்க பார்ப்பனர் என்று ஆகும். ஆகவே பார்ப்பார் என்பது இரு பிறப்பாளரை. எனவே 'சொரூப மதானோர் துகளில் பார்ப்பாரே' என்று பாடலில் கூறினார். முழுப்பாடல் வருமாறு:

பெருநெறியான பிரணவம் ஓர்ந்து
குருநெறியால் உரைகூடி நால்வேதத்
திருநெறியான கிரியை இருந்து
சொரூபம தானோர் துகளில் பார்ப்பாரே.

இந்தப் பாடலில் நால் வேதம் என்பது தமிழ் வேதம். எப்படி எனில், மேல் பாடலில் காயத்திரியைத் தாண்டி வந்து சிவ பரம்பொருளை அன்பு செய்தவர்களைக் கூறியதால் மீண்டும் நால்வேதம் என அவ்வடமொழி வேதத்திலே கொள்வதற்கு எதுவும் இல்லை என்பதால். அது மட்டுமல்லாமல் நால் வேதத் திருநெறி என்ற சொல்லாலும் இதை உறுதிப்படுத்தினார். திருநெறியாவது தமிழ் நெறியே அல்லவா?

இனி அடுத்த பாடலில் தான் அவனானவரைப் பற்றிக் கூறுகிறார். அதாவது இறைவனாகவே இயைந்து விட்டவனைக் குறிப்பிடுகிறார். இவன் வடமொழியில் கூறும் பிரம்மமாகவே மாறி பிறப்பறுத்தவன் என்கிறார்.

எனவே அந்தணரொழுக்கம் என்ற தலைப்பில் நான்கு வகையினரைக் காட்டுகிறார்:

1) சகலராகிய அந்தணர் என்னும் மறையவர்

2) பிரளயாகலராகிய மறையோர்

3) விஞ்ஞானாகலராகிய பார்ப்பார்

4) தான் அவனாகி பிரம்மமாகிய பிராம்மணர்.

ஒவ்வொருவர்க்கும் வந்த பெயர்க் காரணங்களையும் காட்டியதால் அந்தணர் வேறு, மறையோர் வேறு, பார்ப்பார் வேறு, பிராம்மணர் வேறு என்பதை அறிந்து கொள்ள வேண்டும். இந்த சொற்களை முன்னும் பின்னு மாக ஒன்றிற்கொன்றாகக் காவியங்களில், புராணங்களில் மாற்றிக் கூறியிருப்பர். ஆனால் திருமூலர், திருப்போரூர் சிதம்பரம் சுவாமிகள் போன்ற அருளாளர்கள் எங்கேயும் பிறழ்ந்து விடாமல் இந்த சொற்களைச் சரியாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள் என்பதை ஆய்ந்து படிக்கும் அறிஞர்கள் உணர்வர்.

அடுத்து, இங்கே 'வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்' என்ற பாடலும், 'வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்' என்ற பாடலும் ஆறந்தத்தில் எட்டாம் தந்திரத்தில் சேர்க்க வேண்டியது. இவற்றைத் தவறாக இங்கே சில பதிப்புகள் சேர்த்திருக்கின்றன.

இனி, பொதுவாக அந்தணர் என்றால் பூணூலும், குடுமியும் அவர்களுக்கு உரிய அடையாளங்களாக அந்தணர் ஒழுக்கமாக கொள்கிறோம். இந்த இரண்டினால் ஒருவன் பிராம்மணன் ஆவதில்லை என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார்:

"நூலும் சிகையும் நுவலில் பிரமமோ
நூலது கார்ப்பாசம் நுண்சிகை கேசமாம்"

என்று திருமூலர் மிக ஆணித்தரமாக அறைகிறார். என்ன பெரிய நூல்? ஒரு பருத்தியின் விளைவு தானே அது? அது எல்லார்க்கும் கிடைப்பது. பருத்தியின் விளைவான ஒரு நூல் எப்படி ஒருவனைப் பிராம்மணனாக்கி விட முடியும்? அடுத்து குடுமி! என்ன பெரிய குடுமி? அது தலையில் எல்லார்க்கும் முளைக்கும் முடி! அவ்வளவு தானே! முளைக்கும் முடியால் ஒருவன் பிராம்மணன் ஆவது எப்படி?

இப்படி மேற்பாடலில் திருமூலர் கேட்கிறார். கேட்ட தோடு நில்லாமல் அவற்றின் உட்பொருளை அடுத்த இரண்டு வரிகளில் கூறுகிறார்.

"நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே"

அதாவது வேதாந்தம் என்பது பிண்டத்தில் இறை யொளியுடன் ஆன்ம ஒளி இணையும் இன்ப அருளனு பவம் என்று முன்பே சொன்னோம். உடம்பினுள் சுழி முனை நாடியில் தான் இந்த அருளனுபவமான

ஒளியனுபவம் கூடும். அந்த நாடியில் இறையொளியும் ஆன்ம ஒளியும் கூடும்போது அந்த உடம்பே ஒளியால் ஜொலிக்கும். அந்த உள்ளொளி மூலாதாரத்திலிருந்து நெற்றி நடு வரை ஒளி இழைபோல செல்லும். அந்த ஒளி அனுபவத்தை அடைந்தவர்கள் என்ற அடையாளத்தைக் காட்ட மார்பின் நடுவே வெண்பூணூல் அணிந்தார்கள். அந்த அனுபவம் பெறாவிட்டால் அது வெறும் பருத்தி நூல்தான்.

அடுத்து சாயுச்சிய அனுபவத்தைக் குறிப்பது உச்சிக் குடுமி. அதாவது எல்லாவற்றையும் தாண்டி ஞானம் ஆகிய அருட்சத்தி இதோ! உனது தந்தை எனக் காட்ட இறைவனைக் கண்டு தலைக்கு மேலே அண்டத்தில் இறைவனுடன் இரண்டறக் கலக்கும் இன்ப அனுபவமே சாயுச்சியம். இதைத் தான்,

'தலையாலே பலி தேரும் தலைவனை
தலையே நீ வணங்காய்'

என்று அப்பர் பாடினார். இந்த சாயுச்சிய அனுபவத்தை அடையத் தகுதி பெற்றவன் என்று காட்ட உச்சிக் குடுமி வைத்தார்கள். வெறும் முடியால் ஆனதா உச்சிக் குடுமி? என்று திருமூலர் மிகச் சரியாக கேட்டு மிகச் சரியான விளக்கத்தையும் தருகிறார்.

ஆகுதி வேட்டல் (அ) அக்கினி காரியம்

அந்தணர் ஒழுக்கத்தை மேலே கூறிய திருமூலர் அந்தணர்களாகிய சகலர் - அதாவது மறையவர் ஆற்றும் வேள்வியில் ஆகுதி வேட்டல் என்பது எப்படி அமைய வேண்டும் என்று திருமூலர் கூறுகிறார். எப்படி அமைய வேண்டும் என்பதற்கு முன்னால் ஏன் வேள்வியில் ஆகுதி கொடுக்க வேண்டும்? என்ற கேள்வியை எழுப்பி விடை

யளிக்கிறார். இந்தக் கேள்வியும் விடையும் அமைந்த முதல் பாடல் வருமாறு:

'வசையில் விழுப்பொருள் வானும் நிலனும்
திசையும் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே'

இந்தப் பாடலை 'அந்தணர் ஆகுதி வேட்கிலே' என்று தொடங்கிப் பொருள் காண வேண்டும். ஆகுதி வேட்கில்? என்ன ஆகும்? என்ற கேள்வி தொக்கி நின்றது. 'அந்தணர் ஆகுதி வேட்கிலே வசையில் விழுப்பொருள் வானும் நிலனும், திசையும் திசைபெறு தேவர் குழாமும் விசையம் பெருகிய வேத முதலாம் அசைவிலா' என்று பாடலைக் கொண்டு கூட்ட வேண்டும்.

வசையில் விழுப்பொருள் ஆகிய வானும் நிலனும் என்றார். வானமும் சரி, மண்ணும் சரி இரண்டும் விழுப்பொருள்கள் என்றார். காரணம் வானம் இறைவன் நின்று இயக்குவதால் விழுப்பொருளாயிற்று. அதுமட்டுமா அவனே ஆகாயமாய் இருக்கிறான். சித் + அம்பரம் என்பதுதான் சிதம்பரம் ஆயிற்று. அம்பரம் என்றால் ஆகாயம். அவன் சித்துப் பொருளாகிய ஆகாயம் என்பது அதன் பொருள். எனவே வானம் விழுமியதாயிற்று.

அடுத்து மண் என்பது எப்படி விழுமிய பொருளா யிற்று என்றால் நமது பாவ மூட்டைகளை கழுவ உதவுவதால் மண்ணாகிய இந்த நிலம் விழுமியதாயிற்று. நாம் பெரிய பெரிய மூட்டைகளாகக் கட்டிச் சேமித்த வினைகள் எல்லாம் கழுவப்படும் இடம் இந்த நிலம். எனவேதான் தேவர்கள் கூட இந்த நிலத்திற்கு வந்து இறைவனைத் துதித்து தங்கள் வினை மாசுகளைக் கழுவ விரும்புகிறார்களாம்.

புவனியில் போய் பிறவாமையில் நாள்நாம்
போக்குகின்றோம் அவமே! இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறுஎன்றுநோக்கி
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன் விருப்பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்த மெய்க்கருணையும் நீயும்
அவனியில் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமுதே பள்ளி எழுந்தருளாயே

- திருவாசகம்

"வானிடத்தவரும் மண்மேல் வந்தரன்
தனையர்ச்சிப்பர்"

- *சிவஞான சித்தியார்*

மண் என்ற தமிழ்ச் சொல்லுக்கே கழுவு என்று பொருள். இந்த நிலம் நமது வினைமாசுகளைக் கழுவுதற்கு உதவுவதால் இதற்கு மண் என்று பெயர். இதை உணராமல் இங்கே வந்து பிறந்து பல பாவ மூட்டைகளைச் சம்பாதித்து எடுத்துப் போகிறோமே நம்மை என்ன சொல்ல? அழுக்கைக் கழுவ வந்த இடத்தில் அழுக்கை ஏற்றிக் கொள்வது நியாயமா? அதனால் தான்,

'ஊனெடுத்து உழலும் ஊமர் ஒன்றையும் உணரார் அந்தோ!' என்று சிவஞான சித்தியார் நமக்காக இரங்குகிறது.

ஆகவே 'வானமும் விழுப்பொருள்; நிலமும் விழுப்பொருள்' என்று பாடினார் திருமூலர். நிலம் என்றால் திசைகள் வேண்டுமல்லவா? எனவே திசைகளையும் அந்தந்த திசைக்குரிய தேவர் கூட்டங்களையும் அடுத்து குறிப்பிடுகிறார் திருமூலர்.

திசைகள் நான்கு; கோணத் திசைகள் நான்கு. ஆக இவற்றைச் சேர்க்க மொத்தம் எட்டு. ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு அதி தேவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விவரம் வருமாறு:

கிழக்கு	-	இந்திரன்
தென்கிழக்கு	-	தீக்கடவுள்
தெற்கு	-	அறக்கடவுள் (யமன்)
தென்மேற்கு	-	நிருதி
மேற்கு	-	வருணன்
வடமேற்கு	-	காற்றுக் கடவுள்
வடக்கு	-	நிதிக் கடவுள் (குபேரன்)
வடகிழக்கு	-	ஈசானன்

இவர்கள் எல்லாம் இறைவன் ஆணையை ஏற்று அந்தந்த திசையில் நின்று அந்தந்த திசையைக் காக்கிறார்கள்.

இவர்களும், இந்தத் தேவர்கள் கூட்டமும், வெற்றியையே தரும் வேதம் ஆகியவையும் அசைவில்லாது நிற்கும் என்று பாடலில் கூறுகிறார் திருமூலர். அசைவில்லாது நிற்கும் என்பதன் பொருள் நிலைபிறழாது நிற்கும் என்பது ஆகும். வானவெளியில் திரிகின்ற கோள்கள் பாதை மாறி ஒன்றுக்கொன்று மோதிவிடாமல் நிலைபெறும்; அவற்றை அப்படிக் காக்கின்ற தேவர்கள் கூட்டம் நிலைபெறும்; இவற்றையெல்லாம் கூறுகின்ற முத்தமிழ் வேதம் நிலைபெறும் என்பது ஆகுதி வேட்டலால் விளையும் பயன் என்று பாடலில் விடை தருகிறார் திருமூலர்.

ஆகுதி வேட்கும் அந்தணர்கள் 'செல்லும் தேயத்திற்கு' உறுதியை நாடி ஆகுதியைப் புறம் கொடுத்து உண்ணு

வார்களாம். அதாவது உலகப் பயனாகியதைப் புறம் கொடுத்து அகத்தே ஒளியைப் பெருக்குவார்களாம். ஆகுதியாக ஆட்டு இறைச்சியை வேள்வியில் இட்டு அது வெந்தவுடன் எடுத்து தாம் உண்ணும் வேள்வி வேறு; நான் சொல்லும் வேள்வி வேறு என்று திருமூலர் காட்டு கின்றார். இவர்கள் அகத்தே இறையனுபவம் துய்த்து, புறத்து இன்பங்களை நீத்து விதிப்படி மெய்ந் நெறியைத் தலைப்படுபவர்கள் என்கிறார் இன்னொரு பாடலில்.

வைதிக வேள்வியும், ஆகம வேள்வியும் எப்படி வேறுபடுகிறது என்று இன்னொரு பாடலில் கூறுகிறார். அதாவது,

"கண்சுடரோன் உலகேழுங் கடந்தஅத்
தண்சுடர் ஓமத் தலைவனும் ஆமே"

வடமொழி வேத வழிப்பட்ட வைதிகப் பிராமணர்கள் ஆற்றும் வேள்வியில் சிவபெருமானுக்கு இடமில்லை. ஆனால் நான் சொல்லும் தமிழாகம, தமிழ்வேத வேள்வியில் சிவபெருமானுக்கே முதன்மை. வைதிக வேள்வியில் தீக்கடவுள் வழிபடப் பெற்று அவன் மூலம் பிற தேவர்களுக்கு அவியளிக்கப்படும். ஆனால் இங்கே சிவ வேள்வித் தீயில் சிவ பரம்பொருளே எழுந்தருள அது சிவாக்கினியாக விளங்கும். எனவே இந்த வேள்வியில் ஓமத்தின் தலைவனாக கண்சுடரோன் - அதாவது நெற்றிக் கண்ணனாகிய சிவபெருமானே விளங்குகிறான் என்கிறார். இதனால் இங்கே கூறிய வேள்வியிலிருந்து திருமூலர் வடமொழி வேத வழிப்பட்ட வைதிக வேள்வியை விலக்கியது காண்க.

அரசாட்சி முறைமை

இனி, அந்தணர்கள் தீ வேட்டு உலகங்களெல்லாம் தன்னிலை பிறழாது அருவ நிலையில் உள்ள திசையதி

பதிகள் மூலம் உலகைக் காக்கிறார்கள் என்றால், அடுத்து உருவமாக நம்முன் காட்சிப் பொருளாய் நாட்டைக் காப்பவர்கள் அரசர்கள். எனவே அக்கினி காரியம் செய்து ஆகுதி வேட்டலைக் கூறிய பின் அரசரது ஆட்சிமுறைமை பற்றி கூறுகிறார். இதன்மூலம் வைப்பு முறை எவ்வளவு அழகாக அமைத்திருக்கிறார் என்பதை அறிகிறோம்.

உலகில் நன்னடை நிலவுமாறு செய்வது வேந்தனின் கடமை.

அதனால் தான் புறநானூறு,

'நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே'

என்று கூறியது.

அரசன் நல்ல கல்வி கேள்விகளை உடையவனாய் இருக்க வேண்டும் என்கிறார் திருமூலர் முதல்பாட்டில். அதுமட்டுமல்ல; நாள்தோறும் மன்னன் மக்களைச் சந்தித்து நாட்டில் தவநெறி ஓங்கும்படி செய்தல் வேண்டுமாம். அத்துடன் நீதி நெறி நாட்டில் ஓங்கும் படி செய்யவேண்டும். நீதிநெறியும், தவநெறியும் கை கோர்த்துக் கொண்டு நாட்டில் உலாவ வேண்டுமாம்.

பாடல் வருமாறு:

நாள்தோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாள்தோறும் நாடிஅவன்நெறி நாடானேல்
நாள்தோறும் நாடு கெடும்; மூடம் நண்ணுமால்
நாள்தோறும் செல்வம் நரபதி குன்றுமே

மன்னன் நீதி நெறி காக்க வேண்டும் என்பது சரி. நீதி இல்லாத நாட்டில் எப்படி வாழ்க்கை சாத்தியமாகும்? இறைவன் நீதியே வடிவானவனாம்.

''நீதியே செல்வத் திருப்பெருந்துறையில்
நிறைமலர்க் குருந்தம் மேவிய சீர்எம் ஆதியே''

என்பார் மணிவாசகர்.

''நீதி பலவும் தன்னவுருவாக மிகுத்தவன்''

என்பார் சம்பந்தர்.

எனவே தான் நீதியின் வடிவாகத் திகழும் மன்னனை இறை என்று வழங்கினர் தமிழர்.

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்''

என்று திருவள்ளுவனாரும் இதை வழி மொழிந்தார்.

இவ்வாறு நீதி நெறி ஓங்கச் செய்வது மட்டுமல்லாமல், மன்னவன் தவநெறியும் ஓங்கச் செய்தல் வேண்டும் என்பது நினைவில் வைக்கத்தக்கது. அதுவும் நாள்தோறும் தவநெறி ஓங்கச் செய்தல் வேண்டுமாம். நாட்டில் எத்தனையோ வகையான சமய நெறிகள் இருந்தாலும் அந்தச் சமயநெறிகள் வழியாக அந்தந்த சமயம் சார்ந்த குடிகள் அந்தந்த சமய ஒழுக்கத்தைச் சரிவர கடைப்பிடித்து நாட்டின் அமைதிக்கு ஊறு விளைவிக்காமல் ஒழுகி வருகிறார்களா என்று பார்ப்பது மன்னவன் பொறுப்பு.

அதனால்தான் இராஜ இராஜ சோழன் பெருவுடையார் கோயிலைக் கட்டி தேவார பண்டார நாயகம் என்று ஓர் அமைச்சகத்தையே நிறுவினான். தான் சைவன் என்பதற் காக பிற மதங்களை வெறுத்தானில்லை. பெளத்த மதத் துறவிகள் வேண்ட நாகைப்பட்டின சூடாமணி விஹாரத்தைச் செப்பனிட்டு அமைத்தான் என்றெல்லாம் வரலாற்றில் காண்கிறோம்.

இப்படியெல்லாம் நீதிநெறி, தவநெறி என்ற இரு நெறிகளை அரசன் பிழைத்தால் உடனே அக்காலங்களில்

கோயில் கதவுகள் தானாக மூடிக் கொள்ளும் என்று சங்க கால நூல்கள் சொல்கின்றன. இன்றும்கூட இந்து சமய அறநிலையத் துறை, வஃப் வாரியம் என்பன போன்று மத ஒழுகலாறுகளைச் சரிவரக் காக்க அரசு துறையமைத்துச் செயல்பட்டு வருகிறது. இதைத் திருமூலர் வெகு அழகாக ஒரு பாடலில் கூறுகிறார்:

தத்தம் சமயத் தகுதிநில்லா தாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண்டமும் செய்யும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டம் செய்வது அவ்வேந்தன் கடனே

யார் யார் எந்தெந்த சமயத்தைச் சார்ந்தவர்களோ அவர்களையெல்லாம் அரசன் தான் சார்ந்த மதத்திற்கு மத மாற்றம் செய்து விடு என்று திருமூலர் சொல்லவில்லை. ஆனால் அப்படித் தான் கத்திமுனையில் இஸ்லாமிய அரசர்கள் நடந்து கொண்டார்கள் என்று வரலாறு கூறுகிறது. அப்படித்தான் ஆங்கிலேய அரசு பணம் - பதவி ஆசைகளைக் காட்டி கிறித்துவ மதத்தைப் பரப்பினார்கள் என்பதும் நாடறிந்த உண்மை.

திருமூலர் சொல்கிறார்: இப்படி மதமாற்றம் செய்வது மன்னனின் வேலையல்ல. அவனவன், அவனவன் மதத்தை ஒழுங்காகக் கடைப்பிடிக்கும்படி செய்வதுதான் மன்னனின் வேலை.

அப்படி அவரவர் தத்தம் மத ஒழுகலாறுகளைச் சரிவர கடைப்பிடிக்காவிட்டால் என்ன ஆகும்? மறுமை உலகில் அவனுக்காக தண்டனை காத்திருக்கிறது என்றும் இறைவன் அவர்கள் உணரும்வண்ணம் தண்டிப்பான் என்றும் சிவாகம நூல்கள் சொல்கின்றன என்கிறார் திருமூலர். சிவாகம நூல்கள் சிவனை வணங்காதவர்க்கு

தண்டனை என்று சொல்லவில்லை. ஒரு வைணவன் வைணவனாக சரிவர ஒழுகவில்லையானால், ஒரு கிறித்துவன் சரியான கிறித்துவனாக நடந்து கொள்ள வில்லையானால், ஒரு முஸ்லீம் சரியான முஸ்லீமாக இஸ்லாத்தைக் கடைப்பிடிக்கவில்லையானால் சிவம் என்ற அந்தப் பொதுப் பரம்பொருள் தண்டிக்கும் என்ற கருத்து எவ்வளவு பெருந்தன்மையான கருத்து?

சிவாகமம் சிவனையே வணங்கு என்று சொல்லாமல் நீ, உன் சமயநெறிப்படி ஒழுங்காக வணங்கு! என் வழியில் தான் நீ ஆண்டவனை வணங்க வேண்டும் என்று கூற மாட்டேன்! எல்லோருக்கும் ஆண்டவன் ஒருவர்தானே. எந்த வழியில் சென்றாலும் அவரிடம்தானே அடைய வேண்டும்! உன் வழியை நான் மதிக்கிறேன். நீ உன் வழியிலேயே வா! நீயும் நானும் ஆண்டவனிடம் சந்தித்து மகிழ்வோம்! ஆனால் ஒன்று, ஒரு வழியைத் தேர்ந்தெடுத்த பின் அந்த வழிக்குத் துரோகம் செய்யாதே! இப்படிச் சொல்வது எவ்வளவு பெரிய விஷயம்! இப்படி ஒவ்வொரு மதத்தாரும் பரந்த மனப்பான்மையோடு இருப்பார்களேயானால் மதத்தின் பேரால் போர்கள் நடக்குமா? உலகையே உலுக்கிக் கொண்டு இருக்கும் மதத் தீவிரவாதம் தான் உலாவுமா? நான் சைவனாகப் பிறந்த காரணத்தால் அல்ல; இத்தகைய பெருமனப்பான்மை கொண்ட சைவநெறியைச் சார்ந்தவன் என்பதை நினைக்கும் போது என் உள்ளம் பெருமிதத்தால் பூரிக்கிறது; ஒவ்வொரு சைவனும் பூரிக்க வேண்டும். ஏன்? மானுடமே மகிழ்ந்து இதனைப் போற்றுமல்லவா?

திருமூலர் சொல்கிறார்: எவனெவன் தான் சார்ந்த சமய ஒழுகலாறுகளைச் சரிவரக் கடைப்பிடிக்கவில்லையோ அவனவனை ஆண்டவன் மறுமையில் தண்டிப்பான் என்று சிவாகமங்கள் கூறுவது இருக்கட்டும். இவ்வுலகில்

அவனைத் தண்டிக்க வேண்டியது மன்னனின் கடமை என்கிறார்.

அது மட்டுமல்ல ஒவ்வொரு சமயத்தார்க்கும் ஒவ்வொரு அடையாளம் உண்டு. அவர்கள் அந்த அடையாளங்களுடன் பொலிவது தான் பொருத்தமாக இருக்கும். சைவர் திருநீறும், கண்டிகையும் துலங்க நிற்பர்; வைணவர் நாமமும், துழாயும் மேனியில் பொலிய நிற்பர்; கிறித்துவ பிஷப் நீண்ட அங்கியும், ஜெபமாலையுடனும் சிறப்பர்; மௌல்வி தலையில் குல்லாவும், வாயில் நமாஸும் நிறைந்து நிற்பர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேடப் பொலிவு. வேடம் உள்ளத்திலும் உறைவ தானால் வேடம் பொலியும்; உதட்டளவிலானால் வெற்று வேடமாய் கழியும். தத்தம் வேட நெறி நில்லாதவர்களை வேந்தன் என்ன செய்ய வேண்டுமாம்? வேட நெறியில் அவர்களை நிற்க வைப்பது அல்லது போட்ட வேடத்திற்கு உண்மையாக நடக்க வைப்பது வேந்தன் கடமை என்கிறார். நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனல்லவா?

'வேடநெறி நில்லாதார் தம்மை விறல்வேந்தன்
வேடநெறி செய்தால் வீடதுவாகுமே'

என்று பாடுகிறார் திருமூலர்.

திருமூலர் இதில் சைவ வேடம், வைணவ வேடம் என்றெல்லாம் கூறாமல், பொதுவாக வேடம் என்று எல்லாச் சமய வேடங்களையும் தழுவிச் சொன்ன பரந்த மனப்பாங்கினைப் பாராட்ட வேண்டுமல்லவா?

திருமூலர் பொதுவாக எல்லா சமய வேடங்களைப் பற்றிக் கூறும்போது வார்த்தைகளில் நிதானம் தவறாது, ஆனால் சொல்ல வேண்டியதை சுருக்கென மனதில் பதியும்படி கூறினார். ஆனால் சிறப்பாக சைவத்தை

எடுத்துக் கொள்ளும்போது தனக்கு அதன்மீது உரிமை இருப்பதால் வேடத்தைப் பொய்யாக போடுபவர்களிடம் சற்று கடுமையாகவே கண்டிக்கிறார்.

அதாவது ஞானமில்லாதவன் ஞானத்தின் அடையாள மான குடுமியை மட்டும் வைத்துக் கொண்டு ஒளியனு பவம் இல்லாதவன் அதன் அடையாளமான பூணூலை மட்டும் அணிந்து கொண்டு ஆடம்பரம் செய்து கொண்டு திரிந்தால் மன்னன் அவனை அழைத்து, அவனது குடுமியையும், பூணூலையும் அறுத்துத் தண்டிக்க வேண்டும். இது மன்னனது கடன் என்கிறார். பாடல் வருமாறு:

''மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடுஒன் றிலனாகும் ஆதலால் பேர்த்துணர்ந்து
ஆடம்பர நூல் சிகையறுத் தால்நன்றே''

இது மட்டுமல்ல; சிலர் கடவுளுக்குக் கள் படைப்ப தாகச் சொல்லி தான் குடித்து ஏமாற்றுவான். அந்தக் காலத்தில் காபாலிகர், வாம மதத்தவர் போன்றவர்கள் எல்லாம் இதைத்தான் செய்து கொண்டிருந்தார்கள். இப்பவும் கிராமங்களில் இந்த ஏமாற்று தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

இப்படிக் கடவுள் பேரால் ஏமாற்றிக் கள்ளுண்டு திரிபவர்களைத் தண்டிப்பதும் மன்னன் கடமை என்கிறார்:

''மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டம் செய் வேந்தன்கடனே''

அது மட்டுமல்ல, மன்னன் குடிகளிடமிருந்து வரிகளை அதிகமாக விதித்தல் கூடாது. வேற்றரசன் பிறன். அவ னுக்கு தன்னுடைய நாட்டுக் குடிமக்கள் மீது அக்கறை

யிருக்காது. அவன் வந்தால் மக்களைச் சூறையாடிவிட்டுப் போவான். அதுபோல மன்னன் தன்னாட்டு மக்களைத் தானே சூறையாடினால் பிற நாட்டு அரசனுக்கும் இவனுக்கும் என்ன வேறுபாடு? பிறன் வந்து கொள்வதை இவன்தானே கொள்கிறான்! அவ்வளவுதானே! இவன் அந்த நாட்டிற்கு மன்னனா? அந்த நாட்டின் மீது பாய்ந்து வரும் புலியல்லவா? என்கிறார்.

''போந்து இவ்வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ள

பாய்ந்த புலியன்ன பாவகத்தானே''

என்பது திருமூலர் வாக்கு. பிறர் கொள்ளத் தாங் கொள்ள என்பது பிறர்கொள்வதைப் போல தாங்கொள்ள என்று விரியும்.

இப்படியெல்லாம் நீதி நெறியும், தவநெறியும் ஒரு சேரக் காக்கின்ற மன்னவனுக்கு மக்கள் ஆறில் ஒரு பங்கு வருமானத்தை வரியாகச் செலுத்தலாம். இல்லையேல் அந்த ஆறில் ஒரு பங்கு வருமானத்தை வரியாகப் பெற அவனுக்கு அருகதையில்லை என்கிறார் திருமூலர்.

''சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்

அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே''

அதென்ன ஆறில் ஒன்று? ஒவ்வொரு குடிமகனும் தனது வருமானத்தை ஆறில் ஒன்றாகப் பிரிக்க வேண்டு மாம். தெய்வ வழிபாட்டிற்கு ஒரு பங்கு, தென்புலத்தார் என்னும் தன் முதாதையர்க்கு செய்யும் வழிபாட்டிற்கு ஒரு பங்கு, வீட்டைத் தேடி வரும் விருந்தினர்க்கு ஒரு பங்கு, தன் வாழ்க்கைக்கு ஒரு பங்கு, தன் சுற்றத்தார் நலனுக்கு ஒரு பங்கு, நாட்டு நலனுக்காக அரசனிடம் வரியாக செலுத்த ஒரு பங்கு என ஆறு பங்குகளாகத் தன் வருமானத்தைப் பிரித்து வாழ வேண்டுமாம்.

தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல்தான் என்றாங்கு
ஐம்புலத்தால் ஓம்பல் கலை

என்பது வள்ளுவர் வாக்கு.

தமிழ்நாட்டில் முன்னெல்லாம் இப்படி அரசுக்குச் செலுத்தும் வரியை ஆறில் ஒரு பங்கு என்றே வைத்தார்கள், அதாவது 16.66% தான் மொத்த வரி. ஆனால் இன்று நாம் அரசுக்கு வருமானத்தில் 30% செலுத்த வேண்டி இருக்கிறது. அதற்கு மேல் மரணவரி, ஜனன வரி என்று எதற்கு எடுத்தாலும் வரி! வருடம் தொடங்கும் போதே ஜனவரி, பிப்ரவரி என்று ஆரம்பிக்கிறோம். அந்த வரி மாதங்களில் அலுவலகப் பணியாளர்கள் வருமான வரி கட்டிவிட்டு சம்பளத்தையே மொத்தமாகப் பறிகொடுத்து விட்டு வீட்டிற்கு 'மார்ச்' செய்வது எப்படி? நெடுமூச்சு விடுவதைவிட வேறொன்றறியார் பராபரமே!

திருமூலர், சீரான நெறிமுறைப்படி அரசன் நாட்டைக் காப்பானாகில் அவனுக்கு ஆறில் ஒன்று வரி செலுத்து என்கிறார்.

"......செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்றாமே'

என்றால் அவ்வாறு செய்யாவிடில் ஆறில் ஒன்று வரிக்கு அவன் அருகதையில்லை. அந்த வரியைச் செலுத்தாதே! என்பது பொருள். சரியான புரட்சிப் புயலாய் இருக்கிறார் திருமூலர்! இன்றைய அரசாங்கங்கள் கவனிக்குமாக!

வானச் சிறப்பு

இறைவன் நெருப்பான மேனியன். 'தீ வண்ணன்' என்பார் திருநாவுக்கரசு சுவாமிகள். பொன் வண்ணம்

மேனி பொலிந்திலங்கும் என்பார் சேரமான் பெருமாள் நாயனார்.

''நெருப்பான மேனியர் செங்காட்டில்
ஆத்தி நிழலருகே
இருப்பார் திருவுளம் எப்படியோ''

என்று பாடினார் பட்டினத்தார்.

இறைவன் நெருப்பு என்றால், இறைவனை யாராலும் நெருங்க முடியாதே! அப்புறம் உயிர்கள் எப்படி அவனை நெருங்குவது; நெருங்கி, இறவாத இன்ப அன்பு பெறுவது? எனவே உயிர்களின் மீது வைத்த கருணையினால் தன்னிற்பிரிவிலாத சத்தியை உயிர்கள் தாங்குமாறு செய்து தொடர்பு கொண்டான். உயிர்கள் நீரில் திளைத்து விளையாடும். எனவே தமது சத்தியால் கருணையான நீராக ஒழுகினான். சத்தி, அருள், கருணை, இரக்கம், நீர் என்பன ஒரே பொருளைக் குறிப்பன. இரக்கம் இல்லாதவனை நெஞ்சில் ஈரம் இல்லாதவன் என்கிறோம். எனவே கடவுளிடமிருந்து பிரிந்த சத்தி நீராகப் பொழிந்து உலகை உய்விக்கிறாள் என்று கண்டு கூறினர் ஞானியர். நீருக்கு ஆதாரம் வான் மழை. வான்மழையே வான் சிறப்பு.

எனவேதான் திருக்குறளில் கூட கடவுள் வாழ்த்து கூறியவுடன் அடுத்ததாக அவனது கருணையாகச் சொரியும் வான் சிறப்பைப் பாடிப் பரவினார். எனவே கடவுள் வாழ்த்து கடவுளைப் பாடியது என்றால்; வான் சிறப்பு கடவுளின் இடப்பாகமான அம்பிகையைப் பாடியது என்று அறிய வேண்டும். திருக்குறளில் பாயிரத்திலேயே அப்பனுக்கு ஒரு அதிகாரம், அம்மைக்கு ஒரு அதிகாரம் என்று வைத்ததைப் பார்த்தால் திருவள்ளுவரின் நுண்மான் நுழைபுலத்தை என்னென்று கூறி வியப்பது! அதனால்தான் அவரை வெறும் புலவர்

என்னாமல் தெய்வப் புலவர் என்று கூறினார்கள் பெரியோர்.

அடுத்து அருட்சத்தி தான் உயிர்களோடு தொடர்பு கொள்வது. அதுதான் உயிர்களை நீராய்ப் பொழிந்து பயிர் பச்சைகளை உற்பத்தி செய்து உலகில் உயிர் வாழ்க்கையை சாத்தியமாக்குகிறது. எனவே தான் இன்று விண்வெளி விஞ்ஞானிகள்கூட சந்திரனுக்கும், செவ்வாய்க்கும், வியாழனுக்கும் விண்வெளிக் கலங்கள் விட்டு அங்கே உயிர்கள் வாழ்கின்றனவா என்பதை அறிவதற்கு முன்னால் அந்தக் கோள்களில் நீர் இருக்கிறதா என்பதைக் கண்டறிகிறார்கள். அண்மையில் செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பதாகவும், அதனால் அங்கே உயிர்கள் வாழக்கூடும் என்றும் விஞ்ஞானிகள் கண்டறிந்திருக் கிறார்கள். எனவேதான் வள்ளுவர், 'நீரின்றி அமையாது உலகு' என்றார். இங்கே உலகு என்று பொதுவாகக் கூறினாரே ஒழிய நிலவுலகு என்று நில அளவில் அதைக் குறுக்கி விடவில்லை. நிலவுலகு மட்டுமல்ல எந்த உலகானாலும் அதற்கு நீரே அடிப்படை என்று இன்றைய விண்வெளி விஞ்ஞான ஆராய்ச்சியையும் உள்ளடக்கிப் பொதுவாக 'நீரின்றி அமையாது உலகு' என்று பொதுவாகக் கூறிய வள்ளுவரின் திறம் எவ்வளவு வாழ்த்தினாலும் தகும்.

சரி, உயிர்களின் உலக வாழ்க்கைக்கு மட்டுமா நீராகிய அருட்சத்தியின் உதவி அமைகிறது? உயிர்கள் இந்த உலகிற்கு அனுப்பபட்டதன் நோக்கம் ஒன்றிருக்கிறதே! அதாவது இந்த உலகில் வாழ்வாங்கு வாழ்ந்து பின்னர் தெய்வத்துள் வைக்கப்பட வேண்டுமே! அதுவரையிலும் அருட்சத்தியின் உதவி தொடர்கிறது.

அதாவது அதை இப்படிச் சொல்லலாம். கடவுள் உயிர்களை அறிவு கொளுத்தி தன்னுடன் இரண்டறக்

கலக்கச் செய்து பேரா இயற்கைப் பேரின்பத்தில் திளைக்கச் செய்ய எண்ணுகிறார். அவர் ஆற்றல் அப்படியே நீளுமானால் உயிர்கள் தாங்கா. எனவே அவரிடமிருந்து உயிர்கள் தாங்கும் வண்ணம் ஒரு சத்தி பிரிந்து உலகில் வாழச் செய்து, அறிவு கொளுத்தி, அந்த உயிர்களை இறைவனிடம் சேர்த்துத் தானும் இறைவனிடம் ஒடுங்கி விடுகிறது.

உலகில் வாழச் செய்வது மேலிருந்து உயிர் கீழிறங்குவது. பின்னர் இறைவனோடு மேலான நிலையில் உயிரை இரண்டறக் கலக்கச் செய்வது மேலேறுவது. உயிர்களைக் கீழிறங்கச் செய்யும் அதே சத்திதான் உயிர்களை மேலேற்றவும் செய்கிறது. அந்த சத்தி உயிர்களைக் கீழிறங்கச் செய்யும்போது அதனை மறைப்புச் சத்தி (திரோதான சத்தி) என்கிறோம். அதுவே மேலேற்றும் போது அருட்சத்தி என்கிறோம்.

எனவே திருமூலர் மறைப்புச் சத்திக்கு ஒரு பாடல்; அருட்சத்திக்கு ஒரு பாடல் என்று வான் சிறப்பில் இரண்டு பாடல்களை வைத்தார். முதலில் மறைப்புச் சத்தியாக உலக வாழ்க்கைக்கு உதவி செய்யும் வானின்று இழியும் மழைநீரின் இன்றியமையாமையைப் பாடினார். பாடல் வருமாறு:

"அமுதூறு மாமழை நீரதனாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறும் காஞ்சிரை ஆங்கது வாமே"

இங்கே, 'அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றும்' என்ற வரியினால் மழையினால் பல மரங்கள் உற்பத்தியாகும் என்றார். இறைவனது சத்தியினால் பல மரங்களும், பயிர்களும் உற்பத்தியாவதால்தான் அந்த

சத்தியைத் தாய் என்று உருவகம் செய்து, அது இறைவனிடமிருந்து பிரிந்து வந்ததால் அதனை இறைவனுக்கு மனைவி என்று உருவகம் செய்தார்கள். இதனால்தான் "அகிலாண்டமும் பன்முறை ஈன்றும் அழகு முதிர முதிராஎன் அம்மை" என்று பாடினார் குமர குருபரர்.

இனி, முன்வரியில் ஏற்கெனவே பல மரங்கள் உற்பத்தியாகும் என்று கூறிவிட்டு, மறுபடியும் அடுத்த வரியில் கமுகாகிய பாக்கு மரம், தெங்காகிய தென்னை மரம், கரும்பு, வாழை இதெல்லாம் மழையால் அமுதூறி நிற்கும் என்று கூறியதும் இங்கே எண்ணத்தக்கது. இதென்னடா! இவர், சொன்னதையே திருப்பித் திருப்பிக் கூறுகிறார். கூறியது கூறல் குற்றமல்லவா? பன்மரங்கள் தோன்றின என்றால் முடிந்துவிட்டது; அப்புறம் கமுகு, தெங்கு, கரும்பு, வாழை என்று பட்டியலை ஏன் நீட்ட வேண்டும்? என்று நமக்குத் தோன்றும். ஆனால் அதற்கும் ஒரு காரணம் உண்டு.

அதாவது பன்மரங்கள் என்ற சொற்றொடர் பயன்தரும் மரங்கள், பயன்தராத மரங்கள் என்று எல்லா மரங்களையும் உள்ளடக்கியது. அடுத்து கமுகு, தெங்கு, கரும்பு, வாழை என்பன பயன்தரும் மரங்களை மட்டும் தனியே எடுத்துக் கூறியது.

இந்தப் பயன்தரும் மரங்கள் ஓங்கி வளர வேண்டு மானால், மழை வேண்டும். மழை வேண்டுமானால் மரங்கள் வேண்டும். "கல்யாணம் செய்தால் பைத்தியம் தீரும்; பைத்தியம் தீர்ந்தால் கல்யாணம்" என்று ஒன்றையொன்று ஒட்டிக் கொள்வதுபோல இது. அதாவது மழை வந்தால் மரம் வளரும்; மரம் வளர்ந்தால் மழை வரும் என்று ஒன்றையொன்று அவாவி நிற்கிறது.

எனவே மரங்கள் இரண்டு வகைப்படும். 1) உயிர்களுக்கு நேரடியாகப் பயன் தரும் மரங்கள், 2) உயிர்களுக்கு நேரடியாகப் பயன் தராவிட்டாலும் வளந்தரும் மழையைத் தருவதாகிய மறைமுகமான பயன் தரும் காட்டு மரங்கள்.

எனவே எதுவுமே பயன் தராத மரமில்லை என்பதை திருமூலர் தெரிவிக்கிறார்.

இந்த அடிப்படையில் பாடலை இப்படி கொண்டு கூட்டிக் கொள்ள வேண்டும். நீரதனாலே அமுதூறும் மாமழை, மாமழை அமுதூறும் பார்மிசை தோற்றும் பன் மரம், (அதனால்) அமுதூறும் கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை, (இல்லையேல்) காஞ்சிரை ஆங்கதுவாமே!

இங்கே மாமழை என்பது தாப்பிசையாக வந்தது. அதாவது தாள் இரண்டு பக்கமும் செல்வது போல முன்னடிக்கும் பின்னடிக்கும் என இரண்டிடத்திலும் சேர்ந்து பொருள்தரும்.

மாமழையினாலே நேரடியாகப் பயன்தராது மழையைத் தருவதாகிய மறைமுகப் பயனை காட்டு மரங்களாகிய பன்மரங்கள் உதவும். அதனால் மழை பெருக பயன்தரும் மரங்களாகிய கமுகு, தெங்கு, கரும்பு, வாழை போன்றன பச்சை பிடித்து ஓங்கி வளரும் என்பது பாடலின் பொருள். அதனால் இது நேரடிப் பயன் தரும் மரங்களை மட்டும் வளர்த்து காட்டு மரங்களை எல்லாம் வெட்டிச் சாய்த்து அழித்து விடாதே! அதில் மழையைத் தரும் மறைமுகப் பயன் உண்டு என்பது பாடலின் பொருளெச்சம்.

இன்றைக்கு மரங்களை வெட்டக்கூடாது என்று இயக்கமே நடைபெறுகிறது. அரசாங்கமே 'வீட்டிற்கு ஒரு

மரம் வளர்ப்போம்' என்று விளம்பரம் செய்கிறது. காடு வளர்ப்போம் என்று காட்டிலாகாவையே அரசாங்கம் அமைத்து வருகிறது. ஆனால் இதற்கெல்லாம் வித்திடுவது போல திருமூலர் அன்றைக்கே பாடிச் சென்றதைப் பார்த்தால் எவ்வளவு வியப்பாக இருக்கிறது? எவ்வளவு நுண்ணிய சமுதாயப் பார்வை!

இப்படியெல்லாம் மரங்களை வளர்க்கவில்லை என்றால் என்ன ஆகும்? மழை இல்லாமல் பூமி காஞ்சிரங் காய் போல துன்பம் தந்து வறண்டு போகும் என்று சொல்லி காஞ்சிரை ஆங்கதுவாமே என்று திருமூலர் பாடலை முடிக்கிறார்.

இது மறைப்புச் சத்தி உலகை வான்மழையால் வாழ்விப்பது பற்றியது. இனி உயிர்களை அருட்சத்தியால் மேலேற்றுவது பற்றி அடுத்த பாடலில் கூறுகிறார். பாடல் வருமாறு:

''வரையிடை நின்றிழி வானீர் அருவி
உரையில்லை உள்ளத்து அகத்துநின்று ஊறும்
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தைக் கழுமணி யாறே''

வரை என்றால் மலை. இனி இந்தப் பாடலின் பொருளை இவ்வாறு கூறலாம். அருளாகிய மலையிடைத் தோன்றி வாலறிவு என்னும் ஞானமாகிய அருவி அறிவாகாயத்தின் வழியாக உரையிட்டுச் சொல்ல ஒண்ணாததாய் ஆருயிர்கள் உள்ளே அதாவது அகத்தே பொழிய அது ஆறாய்ப் பெருகி இறவாத இன்பம் கரை புரண்டு ஊற்றெடுக்கும். அதில் வேண்டுதல் வேண்டாமை யாகிய நுரை என்ற குற்றம் இருக்காது. இருவினையும் அதற்குக் காரணமான ஆணவம் என்ற இருளால்

அதைப்போக்க வந்த மாயையும் ஆகிய மும்மலங்கள் என்னும் மாசு அதில் இல்லையாகிப் போகும். அந்தப் பேரின்ப வெள்ளமாகிய நுண்ணிய தெண்ணீர்க்கு கரையாகிய எல்லையே இல்லை.

இந்த ஆறு அறிவாகாயமாகிய வானிலிருந்து ஓடி வருவதால் இது மண்ணதியன்று; வானதி. இந்த வானதியே உயிர்களின் மல மாசுகளைக் கழுவ எந்தையாகிய இறைவன் கொண்ட கழுமணியாகும். இதுவே பாடலின் முழுப்பொருள்.

இந்த அருட்சத்திப் பொழிவு அருளனுபவத்தில் உயிர்களுக்கு நிகழும். இதைத்தான் வடமொழியில் சத்திநிபாதம் என்று கூறினர்.

எனவே மறைப்புச் சத்தியின் புறப் பொழிவுக்கு ஒன்று, அருட்சத்தியின் அகப் பொழிவுக்கு ஒன்று என வான்சிறப்பில் இரண்டு பாடல்களை அருளினார் திருமூலர்.

அறம் செய்வான் திறம் - அறம் செய்யான் திறம்

அடுத்து உலக வாழ்க்கை நீரில் மட்டும் அமைவ தில்லை; உயிர்களின் வாழ்க்கையில் உயர்ந்த நோக்கத்தை அடைய வேண்டுமானால் அறம் செய்தல் வேண்டும் என்று அறம் செய்வான் திறம் என்ற தலைப்பினை அமைத்தார் திருமூலர். இது வைப்பு முறைக்கு ஏற்ப அமைத்தது. அத்துடன் அறம் செய்யாவிட்டால்? என்ன ஆகிவிடும்? என்று உயிர்கள் அலட்சியம் செய்துவிடக் கூடாதே என்று அறம் செய்யான் திறம் என்றும் உடனாக வைத்து அறத்தை வலியுறுத்துகிறார் திருமூலர்.

அறம் செய்வான் திறத்தில் வரும் முதல் பாடல் வருமாறு:

'ஆர்க்கும் இடுமின் அவர்இவர் என்னன்மின்
பார்த்திருந்து உண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணும் காலம் அறிமினே!'

அறம் செய்தலில் முன்னிற்பது பிறர் பசியைப் போக்குவித்தல். இதன் பிறகுதான் மற்ற அறங்கள் எல்லாம். அதனால்தான் திருமூலர் பிறர்க்கு உண்ண இடுவதாகிய அறத்தை முதலில் எடுத்துக் கொண்டார். அதனால் தான் என்ன தானத்திலும் சிறந்தது அன்ன தானம் என்றனர் பெரியோர். இப்படிச் சொன்னது மட்டுமல்ல; முன்னாளில் எல்லா ஊரிலும் அன்ன சத்திரங்கள் கட்டி வைத்து ஆதுலர்களுக்கு அதாவது ஆதரவற்றவர்கட்கு நாள்தோறும் அன்னமிட்டு வந்தனர். அக்காலங்களில் எல்லாம் ஊருக்கு ஊர் அன்ன சத்திரம் இருக்குமே ஒழிய இந்நாள் போல ஓட்டல்கள் கிடையா. அப்போதெல்லாம் எதை விற்றாலும் விற்பார்கள், உணவை மட்டும் விற்க மாட்டார்கள். அப்படி உணவை விற்பதைக் கேவலமாக எண்ணினார்கள். என்ன விக்கிரயம் செய்தாலும் அன்ன விக்கிரயம் செய்யார் என்பது பழமொழி. இப்போது சாப்பாட்டை விற்பதிலேயே சாதனையாளர்கள் கிளம்பி விட்டார்கள்.

அறத்திலேயே பிறர்க்கு உணவு இட்டு உண்பதே சிறந்த முதலாவது அறம் என்பதனை இந்தப் பாடலில் குறிப்பு காட்டப்பட்டதன் அடிப்படையில் தான் வள்ளலார் பிறர் பசியாற்றுவதிலேயே குறிக்கொண்டு தருமச் சாலை கட்டி அதற்கு முதன்மை கொடுத்தார். அவர் அன்று ஏற்றிய தீ அணையாது 130 ஆண்டு

கட்கு மேலாக அந்த அறம் இன்றும் தொடர்வது நாமெல்லாம் நினைக்கத்தக்கது. இன்னும் பசியாற்று வித்தலே எல்லா அறங்களில் முதன்மையானது என்பதற்கு வள்ளலார் விவரித்த காரணங்களை எல்லாம் எனது நூலான "அருட் பிரகாச வள்ளலாரின் அருள்நெறியும் அமைப்புகளும்" என்ற நூலின் முதல் பாகத்தில் காண்க.

அத்துடன் பசியாற்றுவிக்கும் போது இவர் சாதி இன்னது என்று பாராதே! இவர் மொழி இன்னது என்று பாராதே!

அப்படியே மதம், இனம், நாடு போன்ற குறியீடுகளை யெல்லாம் பாராதே! ஏனெனில் பசி எல்லார்க்கும் பொது. எனவே 'ஆர்க்கும் இடுமின், அவர் இவர் என்னன்மின்' என்று பாடினார் திருமூலர்.

அதோடு, நீ சாப்பிடும்போது உடன் வேறு யாராவது ஒருவரையாவது உடன் வைத்துக் கொண்டு சாப்பிடு! என்றார். ஏனெனில் யாருக்காவது தனியே உணவிட்டால் நிறைய உணவிட்டு விட்டோமோ என்ற எண்ணம் வந்து அடுத்துப் போடுவனவற்றைக் குறைக்கச் சொல்லும். எனவே அவரை உன்னோடு அமர்த்திக் கொண்டு சாப்பிடு என்றார். அதுமட்டுமல்ல நீ தனியாக சாப்பிட்டால் என்ன ஆகும்? பசிக்குச் சாப்பிடுவது போய், ருசிக்கு நீ சாப்பிட ஆரம்பித்து மற்றவர்க்கு என எதையும் மீதம் வைக்காமல் சாப்பிட்டாலும் சாப்பிட்டு விடுவாய். எனவே எப்படிப் பார்த்தாலும் ஆதரவற்ற வேறு ஒருவருடன் சேர்ந்து உண்பதே நலம் என்பார், 'பார்த்திருந்து உண்மின்' என்றார். அருணகிரியார் தனக்கு என்னென்ன கெட்ட குணங்கள் உண்டு என்று பட்டியலிடும் போது தன்னை 'சாட்சியறப் பசியாறியை' என்று நொந்து பாடுகிறார். சாப்பிடும் போது சாட்சியுடன் உட்கார்ந்து சாப்பிட

வேண்டுமாம். கதவைச் சாத்திக் கொண்டு தனியே சாப்பிடக் கூடாது. யாருக்கும் தெரியாமல் திருடிச் சென்றதை வளையில் சாப்பிடும் எலியா நாம்?

'ஐயம் இட்டு உண்'

என்பது ஔவை வாக்கு.

எனவே தான் ஆதரவற்றவர்கள் யாராவது வருகிறார்களா என்று பார்த்து அவர்கள் வந்தவுடன் அவர்களோடு இருந்து உண்மின் என்றார் திருமூலர். இப்படிச் சாப்பிடுவதே தமிழர் நெறி. 'பகடு நடந்த கூழ் பல்லாரோடு உண்க' என்பது புறப்பாட்டு. தான் தலைவனானாலும் மற்றவர்களோடு சேர்ந்து தான் உண்ண வேண்டும் என்று நியதியைக் கொண்டிருந்தார்களாம் தமிழ் மன்னர்கள். இதைப் புறநானூறு கூறுகின்றது.

அடுத்து பழம்பொருள் போற்றன்மின் என்றார். சமைத்து வைக்கப்பட்டதை பிறர்க்கு இட்டு உண்ணும் போது எதை இடுவது என்பது பற்றி இங்கே கூறுகிறார். சமைத்து வைக்கப்பட்ட உணவில் மீதமானது அப்படியே வைத்துக் காக்கப்படுமானாலும் பதனழிந்து விடும். பதனழிந்து விட்ட பழைய உணவுப் பொருளை காப்பாற்றி வைத்து வருகிற ஆதரவற்றவர்களுக்கு, அறம் செய்கிறேன் பேர்வழி என்று, போட்டு விடாதே என்கிறார் திருமூலர். பதனழிந்த பொருளை நீயும் உண்ணாதே! அதைவிட முக்கியம் பிறர்க்கு இட்டு விடாதே என்பார் ப்ழம்பொருள் போற்றன்மின் என்றார்.

இங்கே அறம் பற்றிக் கூறுவதால், பழம்பொருள் போற்றன்மின் என்பதற்கு அறம் செய்வதற்காகப் பழம்பொருள் போற்றன்மின் என்று ஏற்புடைக் கோடலாகப் பொருள் கொள்ள வேண்டும்.

அடுத்து அதே போல 'வேட்கையுடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்.' என்பதற்கும் பொருள் கொள்ள வேண்டும். சாப்பிடும் போது வேகம் வேகமாக அள்ளிக் கொட்டிக் கொள்ளக் கூடாது. "நொறுங்கத் தின்றார்க்கு அகவை நூறு" என்பது பழமொழி. ஆகவே மெல்லச் சாப்பிட வேண்டும். காரணம் நீங்கள் தனியே சாப்பிடக் கூடாது என்று ஏற்கெனவே குறிப்பிட்டுச் சொல்லி விட்டோம். நீங்கள் ஆதரவற்ற விருந்தினர்களுடன் அமர்ந்து உண்ணும்போது அவசரம் அவசரமாக அள்ளிக் கொட்டிக் கொண்டு இலையை மூடிவிட்டால் உடன் உண்பவரால் வேண்டிய அளவு உண்ண இயலாது. நீங்கள் இலையை மூடிவிட்டீர்களே என்று அவர் சாப்பிடுவதைப் பாதியில் நிறுத்தி அவரும் இலையை மூட வேண்டி வரும். எனவே அவரை முழுமையாக உண்ண விடாத பாவத்திற்கு ஆளாவீர். எனவே 'வேட்கை உடையீர் விரைந்து ஒல்லை உண்ணன்மின்' என்று பாடினார்.

என்னவோ, ஆறறிவு உடையவன் நான் என்று பெருமைப்பட பேசிக் கொள்ளும் மனிதர்களே! உம்மை விட தாழ்ந்த அறிவுடைய காக்கைகூட உணவு கண்ட போது மற்ற எல்லாக் காக்கைகளையும் கூப்பிட்டுக் கரைந்து அவை பலவும் பகிர்ந்துண்பதைப் பார்க்கிறோம் அல்லவா? அவற்றிற்கு இருக்கிற அறிவு, ஆறறிவு படைத்த நமக்கு இருக்க வேண்டாமா என்று கேட்கிறார் திருமூலர்.

அடுத்து ஒரு பாடல் நம் சிந்தனைக்கு உரியது. பாடல் வருமாறு:

'யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்குமாம் உண்ணும்போது ஒரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே!'

இந்தப் பாடலில் நாடோறும் செய்யத்தக்க அறங்களை எடுத்துரைக்கிறார். அறம் செய்கிறேன் என ஆடம்பரம் செய்து தூள் கிளப்ப வேண்டாம். அல்லது அப்படியெல்லாம் செய்வதுதான் அறமோ? நம்மால் முடியாதே! என்றெல்லாம் கலங்க வேண்டாம். அறம் செய்யுங்கள்; எளிமையாகச் செய்யுங்கள். உதாரணத்திற்கு இறைவனுக்கு வழிபாடு செய்கிறோம்; பெரிய ஆடம்பர பூசையாகத் தான் செய்ய வேண்டும் என்பதில்லை. உள்ளம் உருகி வழிபட்டால் இறைவன் அருளுவான். 'உள்ளம் உருக உடனாவர் அல்லது தெள்ள அரியர் என்று உந்தீ பற' என்று திருவுந்தியார் கூறுகிறது.

கோடி தீர்த்தம் கலந்து குளித்தவை
ஆடி னாலும் அரனுக்கு அன்பிலலையேல்
ஓடும் நீரிடை ஓட்டைக் குடத்தட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கரோடு ஒக்குமே

என்று பாடினார் அப்பர். "பத்தி அடியவர் பச்சிலை இடினும்" முத்தி கொடுப்பர் என்று திருவிடை மருதூர் மும்மணிக் கோவையில் பட்டினத்தார் பாடுகிறார்.

இறைவழிபாட்டில் அன்புதான் முக்கியம்; அளவு முக்கியமல்ல. "ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே" என்று பாடுகிறார் மணிவாசகர். "உனக்கு நான் இடுவது ஒரு பச்சிலை; எனக்கு நீ கொடுப்பதோ முத்தி. அதனால் தான் உனக்குப் பித்தன் என்று பெயர் வந்ததா" என்று பாடுகிறார் அப்பைய தீட்சிதர்.

இவ்வாறு எப்படி இறைவனுக்கு என்று ஆடம்பர பூசை செய்யாமல் எளிமையாக ஒரு பச்சிலையை உள்ள

உருக்கமுடன் இட்டால் போதுமோ அப்படியே அறம் செய்ய வேண்டும் என்று ஆடம்பரம் செய்ய வேண்டாம். தினந்தோறும் பசுவுக்கு ஒரு வாய் புல்; அகத்திக் கீரை; இல்லை அதுபோன்ற வாயளவு கொடுத்தாலே போதும்; சாப்பிடும்போது பிறர்க்கு பெரிய விருந்து வைக்க வேண்டாம்; ஆதரவற்றவர்க்கு ஒரு கைப்பிடி கொடுத்து விட்டுச் சாப்பிட்டாலே போதும்; எல்லாவற்றிற்கும் மேலாக அதுவும் செய்ய இயலாதவர்கள் பிறர் மீது எக்காரணம் கொண்டும், எக்காலத்தும் எதற்கும் எரிந்து விழாமல் சொல்லுவதை இனிய சொற்களால் யார் மனதும் புண்படாதபடி பேசினாலே போதும்; அதுவே பெரிய அறம் என்று மிக எளிமைய்யாகச் செய்யக் கூடிய மிகப் பெரிய அறங்களை எடுத்துக் கூறினார்.

இங்கே செய்வது சிறியது; ஆனால் பெறுவதே பெரிது என்பதற்கு உவமையாக 'யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை' என்பதை உதாரணம் காட்டினார்.

இன்னொரு பாடலில், துறந்தவனுக்குச் சுற்றமில்லை, நெறிமுறைப்படி இல்லறம் காக்காமல் செத்தவன் போல திரியும் துறந்தானுக்கு இல்லறப் பயனாகிய இன்பம் இல்லை. அதுபோல அறத்தின் பெருமையை உணராது அதை மறந்தவனுக்கு இறைவன் எதிர்ப்படவே மாட்டான். எந்த அளவிற்கு நீ அறத்தை அறிந்து மேற்கொள்கிறாயோ அந்த அளவிற்குத் தான் இறைவனையும் அவனது அருளையும் அறிவாய் என்றார்.

பாடல்:

துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவு அறிவாரே

அது மட்டுமல்ல வினையாகிய கடலில் மூழ்கிவிடாமல் நம்மைக் கரை சேர்ப்பது திருவருள் என்கிற தோணி. இந்தத் தோணியை ஓட்ட வேண்டுமானால் இரண்டு துடுப்புகள் வேண்டும். ஒரு துடுப்பு தவம்; இன்னொரு துடுப்பு அறம் என்று கூறுகிறார் திருமூலர்.

பாடல் வருமாறு:

"திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்கும் தனக்கும் அக்கேடில் புகழோன்
வினைக்கும் தவம் அறம்மேல் துணையாமே"

இதுவரை அறத்தின் பெருமையை உடன்பாட்டில் கூறியவர் அதன் இன்றியமையாமையை வலியுறுத்திக் கூற அறம் செய்யான் திறம் என்ற தலைப்பில் இப்படி எதிர்மறையில் வைத்துக் கூறுகிறார். பாடல் வரிகள்:

"அறம் அறியார் அண்ணல் பாதம் நினையும்
திறம் அறியார் சிவலோக நகர்க்கும்
புறம் அறியார்"

அறம் செய்யாதவன்பால் துன்பங்கள் பிணியாக வந்து சேரும் என்று கூறுகிறார்.

"இருமலும் சோகையும் ஈளையும் வெப்பும்
தருமம் செய்யாதவர் தம்பால தாகும்"

'வீட்டிற்கு ஒரு மரம் வளர்ப்போம்' என்பது இப்போது அரசாங்கமே விளம்பரம் செய்து வரும் வரிகள். இப்படி மரம் வளர்ப்பதே ஒரு அறம். இங்கே ஒரு மரத்தையாவது வளர்த்து நிற்கச் செய்யாதவன் நரகத்தில் தனியாக நிற்பான் என்று எச்சரிக்கை செய்கிறார்.

'கரகத்தால் நீராட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நன்னெஞ்சினீரே'

இங்கே 'நன்னெஞ்சினீரே' என்பது கிண்டலாகக் கூறியது.

அறம் என்பது இல்லறத்தில் வைத்து ஆற்றக் கூடியது. ஒருவன் அறத்தால் கனிய வேண்டும். அப்படிக் கனிந்தால் அவன் ஈசன் கழலடியான வீடுபேற்றை அடைந்து இன்புறுவான். அப்படியின்றி அறம் சேர்ந்த இல்லறத்தை விட்டுத் தனித்து தவமாற்றத் துணிந்த துறவிகள் துறக்கத்தை வேண்டுமானால் பெறலாம். துறக்கம் என்பது சொர்க்கத்தை. சொர்க்கம் வேறு; வீடு பேறு வேறு. சொர்க்கத்தில் செய்த புண்ணியத்தின் அளவு தீர்ந்தவுடன் மறுபடியும் பூமியில் பிறக்க வேண்டும். ஆனால் வீடுபேறோ மீட்டு வாரா நெறி. கற்றுத் தெளிந்தவர்கள் (சாகாக் கலையை) மீண்டு வாரா நெறியையே விரும்புவார்கள்; சொர்க்கத்தையல்ல என்று வள்ளுவரும் கூறுகிறார்.

கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

எனவே இறைவன் கழலடியாகிய வீடு பேறு தரும் அறம்சார்ந்த இல்லறம் வேண்டுமா? அல்லது அது தவிர்த்து சொர்க்கம் மட்டுமே தருகிற துறவு வேண்டுமா? என்று கேட்கிறார் திருமூலர். பாடல் வருமாறு:

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கமது ஆள்வர்
மலிந்தவர் மாளும் துணையும் ஒன்றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந்தாரே

அறம் சார்ந்த இல்லறத்தால் கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர் என்று பொருள் கொள்ள வேண்டும். அப்படி இல்லறத்தை வேண்டாம் என்று துணிந்தவர் ஈசன்

துறக்கமது ஆள்வர் என்று பொருள் காணவேண்டும். இங்கே அறம் செய்யான் திறம் என்கிற தலைப்பிற்கு ஏற்ப ஏற்புடைக் கோடல் என்ற உத்தியால் 'அறம் சார்ந்த இல்லறத்தால்' என்பதையும் 'அவ்வில்லறம் வேண்டாம் என்று' என்பதையும் சொல்லெச்சமாக வருவித்தும் பொருள் காண வேண்டும்.

இதை இன்னொரு பாடலிலும் திருமூலர் தெளிவாக்கு கிறார். அதாவது 'இல்லம் கருதி இறைவனை ஏத்துமின்' என்று பாடி அப்படி ஏத்தினால் வரும் பயனை "வில்லி இலக்கெய்த விற்குறியாமே" என்று பாடினார். இங்கே தலைப்பு அறத்தைப் பற்றியது ஆதலால் இல்லம் என்பது இல்லறத்தைக் குறிக்கும். இல்லறத்தை சான்றோர் காட்டிய நெறிமுறையாலே பின்பற்றி அறம் சார்ந்து கனிந்து இறைவனை இல்லறத்திலிருந்தே ஏத்தினால் குறி தவறாது எய்யும் வல்லமை படைத்த வில்லாளன் எய்திய அம்பு தவறாது இலக்கை அடைவதைப் போல் மானிடப் பிறவியின் நோக்கமான வீடு பேறு என்கிற பயனை தவறாது அடையலாம் என்று கூறினார்.

இதையே தான்,

"பெற்ற சிற்றின்பமே பேரின்பமாயங்கே
முற்ற வரும் என்று உந்தீப் பற
முளையாது மாயை என்று உந்தீப்பற."

என்று சித்தாந்த சாத்திர நூலான திருவுந்தியார் பாடியது.

எனவே திருமூலர், திருவள்ளுவர், தொல்காப்பியர் மற்றும் தமிழ்ச் சான்றோர்கள் எல்லாம் அறம்சார்ந்த இல்லற நெறியே வீட்டு நெறியில் செலுத்தி விடும் என்று தவறாது வலியுறுத்தினர்.

இதுவே தமிழர் நெறி.

அவையடக்கம்

அவையடக்கம் என்பது திருமூலரைப் பொறுத்தவரையில் ஒரு மரபு என்கிற வகையில் எடுத்துக் கொள்ள வேண்டுமேயல்லால் அவரைவிடப் பெரிய அருளாளர்கள் யார் இருக்கிறார்கள் - அவர்கள் அடங்கிய அவைக்கு அடக்கம் கூறுவதற்கு? அவையடக்கம் என்பது இரண்டு வகைப்படும். ஒன்று அவைக்கு அடங்கிப் பாடுவது; மற்றொன்று, அவையை அடக்கிப் பாடுவது. மெய்கண்டார் சிவஞான போதம் அருளியபோது இந்த இரண்டையும் ஒரே வெண்பாவில் அடக்கி அவையடக்கம் கூறினார். இங்கே திருமூலர் முதல் வகையை மட்டுமே மேற்கொண்டார். அதாவது அவைக்கு அடக்கம் கூறியதையே எடுத்துக் கொண்டார். ஒரு வேளை, திருமூலர் கூற்றுகளுக்கு மாறுபாடான கருத்துக்களைக் கூற வல்லவர் அவர் காலத்தில் இல்லை என்று கொள்ளலாம். அப்படியே சிலர் இருந்திருப்பாராயினும் அவர்களை திருமூலர், மெய்கண்டார் கூறியதுபோல 'கேளாம் புறன்' (Ignore) என்று தள்ளி விட்டார்போலும்.

இனி இறைவனது பெருமை நோக்க, தன்னுடைய சிறுமை காட்டி ஒரு பாடலும், அடுத்து இறைவனது அடியார்களை நோக்கி தெண்டனிட்டு ஒரு பாடலும் ஆக இரண்டு பாடல்களை திருமூலர் அவையடக்கமாகப் பாடி இருக்கிறார். பாடல் வருமாறு:

ஆரறிவார் எங்கள் அண்ணல் பெருமையை
ஆரறிவார் இந்த அகலமும் நீளமும்
பேரறியாத பெருஞ்சுடர் ஒன்று; அதின்
வேரறியாமை விளம்புகின் றேனே!

இந்தப் பாடலுக்கு உரை தேவையில்லை. பொருள் வெளிப்படையாகத் தெரியும்படி பாடினார். இதுவே

அவையடக்கத்தின் இலக்கணம் என்று காட்டினார். ஒருவருக்கு அடக்கம் கூற வந்த போது அந்தப் பணிவு வெளிப்படையாகத் தெரிய வேண்டும். 'மரியாதை மனசுக்குள்ளே இருந்தால் போதும்' என்று தற்காலத்தில் கூறுவது நாகரிகமாகிவிட்டது. வெளியில் தெரிந்தால் தான் மரியாதை; உள்ளே இருப்பது உப்புக்கும் பெறாது. எனவே உள்பொருள், இறைச்சிப் பொருள், உள்ளுறை உவமம், கொண்டு கூட்டிப் பொருள் கோள் என்றிவற்றை எல்லாம் வைத்துப் பாடாமல் வெளிப்படையாகப் பொருளும், பொருளில் பணிவும் தெரியும்படி பாடிய அழகே அழகு.

''தெரிந்த மொழியால் செவ்விதிற்கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றல்
புலன்என மொழிப புலன் உணர்ந்தோரே''

என்பது தொல்காப்பியம். எனவே இங்கே இது புலன் என்னும் வனப்பு தோன்ற திருமூலர் பாடியுள்ளார் என்று சொல்ல வேண்டும்.

எல்லையற்ற பரம்பொருள் சோதி வடிவாக எங்கும் நிறைந்திருக்க அதற்கு நீளமும், அகலமும் கூறிக் காட்டி விளக்க நான் யார்? என்று இந்தப் பாடலில் பாடி அடுத்து இறைவனடியார்களுக்கு அடக்கம் கூறுகிறார். பாடல் வருமாறு:

பாட வல்லார்நெறி பாட அறிகிலேன்
ஆட வல்லார்நெறி ஆட அறிகிலேன்
நாட வல்லார்நெறி நாட அறிகிலேன்
தேட வல்லார்நெறி தேட கில்லேனே!

எனக்கு முன்னரே பல தெய்வச் சான்றோர்கள் இருந்திருக்கிறார்கள்; இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் நின்ற நெறிகளில் ஒன்றையும் அவர்கள்போல் கடைப்

பிடிக்கும் ஆற்றல் இல்லாதவன் நான் என்று திருமூலர் அவர்களுக்குத் தம்மைத் தாழ்த்திக் கூறும் போது நெகிழ்ந்து போகிறோம். இவரே இப்படிக் கூறுவாரானால் நாமெல்லாம் என்ன கூறுவது என்று மலைத்துப் போகிறோம்.

இங்கே பாடல், ஆடல், நாடல், தேடல் என்கிற நான்கு நெறிகளைக் கூறுகிறார். பாடல் இறைவனை ஊர் ஊராகத் திரிந்து காணும் பாடுகளை மேற்கொள்ளலாகிய சரியை நெறியைக் குறித்தது. ஆடல், இறைவன் ஆனைந்தாகிய பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் ஆகியவற்றால் அடியார்கள் ஆட்டுவிக்க ஆடலாகிய கிரியை நெறியைக் குறித்தது. நாடல் உள் நாடுதலாகிய யோக நெறியைக் குறித்தது. தேடல் ஞானத்தால் இறைவனைத் தேடும் ஞான நெறியைக் குறித்தது.

எனவே சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நால் நெறிகளைக் குறிப்பிட்டு அவற்றில் ஒவ்வொன் றிலும் ஒவ்வொரு அடியார் தலைசிறந்து நிற்க அவர்கள்போல ஒன்றிலும் வல்லவனாக இல்லாதவன் அடியேன் என்று திருமூலர் அவர்கட்கு அவையடக்கம் கூறுகிறார்.

இங்கே சரியை சீலமென்றும், கிரியை நோன்பு என்றும், யோகம் செறிவு என்றும், ஞானம் அறிவு என்றும் தமிழ்ப்படுத்திக் கூறி இதில் ஒன்றிலேனும் அறிவில்லாத நான் என்று மணிவாசகர் திருமூலரை ஒட்டிக் கூறுகிறார். அந்த வரிகள் வருமாறு:

''சீலமின்றி நோன்பின்றிச் செறிவே இன்றி
அறிவின்றித்
தோலின் பாவைக் கூத்தாட்டாய்ச் சுழன்று
விழுந்து கிடப்பேனை''

இந்த வாழையடி வாழையென வந்த திருக்கூட்டத்தை நாமும் அடி வணங்குவோமாக!

பொதுப் பாயிர விளக்கம்
(முடிந்தது முடித்தல்)

பொதுவாக தொல்காப்பிய இலக்கண முறைப்படி அறுவகை வாழ்த்துக்களும் பாயிரத்தில் அடங்கும். வாழ்த்து புறத்திணையில் பாடாண் துறையைச் சேர்ந்தது. இதை தொல்காப்பியர்,

'அமரர்கண் முடியும் அறுவகை யானும்
புரைதீர் காமம் புல்லிய வகையினும்
ஒன்றன் பகுதி ஒன்றும் என்ப'

என்று பாடினார். இங்கே அமரர்கண் முடியும் அறுவகை என்றால் என்ன என்று நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் ஒருமித்த கருத்துக்களைக் கூறி உரை செய்கின்றனர்.

அறுவகை: முனிவரும், பார்ப்பாரும், ஆனிரையும், மழையும், முடியுடை வேந்தரும், உலகுமாம் - இது நச்சினார்க்கினியர் உரை.

அறுவகை: முனிவரும், பசுவும், பார்ப்பாரும், அரசரும், மழையும், நாடும் ஆம் - இது பேராசிரியர் உரை.

இந்த அறுவகையையும் ஏன் வாழ்த்த வேண்டும்? காரணம், இவை ஆறும் வாழாவிட்டால் உயர்ந்தோர் வாழும் உலகாக உலகம் வாழாது. எனவே இவற்றை வாழ்த்தினர். இந்த நெறிப்படி தான் ஞானசம்பந்தரும் வாழ்த்து பாடினார்:

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன்நாமமே
சூழ்க வையக மும்துயர் தீர்கவே

இங்கே வானவர் - இறைபணி முன்னி (கருதி) வாழும் முனிவர்; அந்தணர் - உலகில் வேதம் கூறும் அறங்களைக் காக்கும் செந்தண்மையாளர்; ஆனினம் - பசுக்கள்; தண்புனல் - மழை; வேந்தன் - அரசன்; வையகம் - அரன்நாமமே சூழ்ந்த வையகம். தொல்காப்பிய நெறிப்படி ஞானசம்பந்தர் கூறிய வாழ்த்தைக் காண்க.

இந்த அடிப்படையில் தான் திருமூலர் பொதுப் பாயிரத்தை அமைத்தார்.

முதலில் சடைமுனியாகிய சிவனை வாழ்த்திக் கடவுள் வாழ்த்து பாடியும், அதன்பின்னர் சிவபெருமானின் ஆணைப்படி இயங்கிவரும் மும்மூர்த்திகளாகிய முனிவர் களைப் பாடியும் முதலதனை நிறைவு செய்தார்.

அதன்பின்னர், வேதச் சிறப்பு, ஆகமச் சிறப்பு, அந்தணர் ஒழுக்கம், அக்கினி காரியம் ஆகியன இந் நூலில் முன்னர் காட்டியபடி ஒன்றிற்கொன்று இயைபாய் வந்து அந்தணரைப் பாடி இரண்டாவதை நிறைவு செய்தார்.

அடுத்து அரசனது ஆட்சி முறையைப் பாடி, வேந்தனையும், நாட்டையும் குறித்து மூன்றாவதையும் நாலாவதையும் நிறைவு செய்தார்.

பின்னர், வான்சிறப்பு என்று மழையைப் பாடி ஐந்தாவதை நிறைவு செய்தார்.

அதன்பின் அறத்தினை வலியுறுத்திப் பாடியதில் 'யாவர்க்குமாம் பசுவுக்கு ஒரு வாயுறை' என்று பசுவைக் காக்கும் அந்த அறத்தை உள்ளடக்கி ஆறாவதையும் நிறைவு செய்தார்.

எனவே தொல்காப்பிய நெறிப்படி அமரர்கண் முடியும் அறுவகையானும் பாயிரத்தைத் திருமூலர் பாடியருளி யுள்ள அழகைப் பாருங்கள்!

இதனையறியாது அந்தணர் ஒழுக்கம், அக்கினி காரியம், அரசனது ஆட்சி முறைமை, அறம்செய்வான் திறம், அறம் செய்யான் திறம் ஆகிய பகுதிகளை பாயிரத்தில் பதிப்பிக்காது முதல் தந்திரத்தில் பதிப்பிப்பது பொருள் பொருந்தாது முடியும் அல்லவா?

அன்றி, சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப்பாயிரம், பொதுப் பாயிரம் என்ற வகையில் பதிப்பிப்பதே நூல் வரன் முறையில் பொருந்திவரும். இதில் சிறப்புப் பாயிரமும், தற்சிறப்புப் பாயிரமும் நூலில் சேராது. ஆகையால் சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம் ஆகியவற்றில் அடங்குகிற பாடல்களை திருமந்திர நூலின் பாடல் எண்ணிக்கையில் சேர்க்கக் கூடாது.

இங்கே சிறப்புப் பாயிரத்தையும், தற்சிறப்புப் பாயிரத்தையும் முதலில் வரன்முறைப் படுத்தினோமானால் நூல் இதுதான் என்று பிரித்து அறிந்திடத் தெளிவாகிவிடும். அப்படிப் பார்த்தால், சிறப்புப் பாயிரப் பாடல்களையும், தற்சிறப்புப் பாயிரம் பாடல்களையும் இவ்வாறு தொகுக்கலாம்.

சிறப்புப் பாயிரம்

1) குரு மட வரலாறு - பாடல்கள்
2) திருமந்திரத் தொகைச்சிறப்புப் பாடல்கள்
3) மூலன் கூறினான் என்று மூலர் படர்க்கையில் வைத்துப் பேசப்படுகிற பாடல்கள்.

தற்சிறப்புப் பாயிரம்

1) குரு பாரம்பரியப் பாடல்கள்
2) திருமூலர் வரலாறு (திருமூலர் தம் வரலாறு கூறுதல்) கூறும் பாடல்கள்.
3) அவையடக்கம்

இவற்றிலே கூட ஒன்றில் வர வேண்டியது இன்னொன்றில் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. இவற்றையெல்லாம் செம்மை செய்து பதிப்பித்தால் அது சைவமும், தமிழும் தழைத்தினிதோங்கும் நற்பணியாகும்.

இனி, பொதுப் பாயிரம் பற்றி ஏற்கெனவே பாடல் தொகைக் குறிப்புகள் கூறப்பட்டன. அவற்றின் உள்ளடக்கம் தொல்காப்பிய இலக்கணப்படி அறுவகை வாழ்த்தாக அமைந்ததைப் பார்த்தோம். இந்த பொதுப் பாயிரத்தில் உள்ள ஆறில் இரண்டை நீக்கி நான்கைக் கொண்டு பாயிரம் அமைத்தார் வள்ளுவர். அவையாவன:

1) கடவுள் வாழ்த்து

2) வான்சிறப்பு

3) நீத்தார் பெருமை

4) அறன் வலியுறுத்தல்

எடுத்துக் கொண்ட பாவகை குறட்பா ஆதலால் திருமூலர் கூறிய ஆறை நான்காகச் சுருக்கினார் வள்ளுவர்.

நீத்தார் பெருமையில் 'அந்தணர் என்போர் அறவோர்' எனத் தொடங்கும் குறட்பாவால் அந்தணரைக் கூறினார். அதிலேயே 'ஐந்தவித்தான் ஆற்றல் அகல் விசும்புளார் கோமான் இந்திரனே சாலும் கரி' என்ற திருக்குறளால் முனிவர் பெருமையைக் கூறினார். எனவே நீத்தார் பெருமையில் அந்தணர், முனிவர் என்ற இருவரையும் கூறியதோடு இந்திரன் என்று கூறியதால் வானவரையும் கூறியது காண்க.

பசுவுக்கு வாயுறை அளித்தல் அறம் 32இல் அடங்கும். அதாவது அறங்களை மொத்தம் முப்பத்திரண்டாக விரித்துக் கூறுவர். அதில் பசுவிற்கு வாயுறை அளித்தலும் ஒன்று. எனவே அறன் வலியுறுத்தலில் பசுவும் அடங்கி

விட்டதறிக. திருமூலர் 'அறம் செயவான் திறம்' என்று அறத்தின் பெருமையை உடன்பாட்டில் கூறியதோடு விடாமல் 'அறம் செய்யான் திறம்' என்று அறம் செய்யாமையால் விளையும் தீங்கையும் விளக்கியதால் அறம் வலியுறுத்திக் கூறப்படுவதைக் கண்ட வள்ளுவர் தாமும் அப்படியே 'அறன் வலியுறுத்தல்' என்ற ஓர் அதிகாரத்தை அமைத்தார்.

ஆகவே திருமூலர் திருவுள்ளப்படியே திருவள்ளுவரும் பாயிரமாக நான்கு அதிகாரங்களை ஆறு வாழ்த்துக்களுடன் அமைத்தார் எனலாம்.

ஆமாம்! இங்கே வேந்தனைக் காணோமே என்று கேட்கலாம். 'சிறப்பீனும் செல்வமும் ஈனும்' என்ற குறளாலும், 'சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான்' என்ற குறளாலும் அரச செல்வத்தை உள்ளடக்கினார். பின்னாளில் முடியரசு நீங்கி குடியரசு வரும் என்பதை வள்ளுவர் தீர்க்க தரிசனமாகக் கண்டார் போலும். எனவே அரசனைக் கூறாது அரச செல்வத்தை எடுத்துக் கூறினார் எனக் கொள்ளலாம்.

எனவே திருமூலரும் திருவள்ளுவருமே தமிழ்நெறியின் தலைமக்கள் எனக் கொண்டு அவர்கள் பாயிரத்தில் காட்டிய நெறிமுறைகளை அடியொற்றி வாழ்ந்து அவர்கள் அடிபோற்றி சிறப்போமாக!

❑ ❑ ❑

திருமந்திரம்

நூல் வரன்முறைப்படி ஆய்ந்து வகுத்த செம்பதிப்பு (பாயிரப் பகுதி)

திருமூலர் துதி

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்

- திருத்தொண்டத் தொகை

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்பான் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே

- திருத்தொண்டர் திருவந்தாதி

நலஞ்சிறந்த ஞானயோ கக்கிரியா சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்மலர்க் கழல்வணங்கே

- சேக்கிழார் வாக்கின் தழுவல்

கயிலாயத் தொருசித்தர் பொதியில் சேர்வார்
காவிரிசூழ் சாத்தனூர் கருதும் மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயரநீடும்
பசுக்களைக்கண் டவனுடலில் பாய்ந்துபோத

அயலாகப் பண்டையுடல் அருளால்மேவி
ஆவடுதண் துறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரும் அரசடியில் இருந்து கூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாரே

- உமாபதி சிவம்

ஐய மாகடல் ஆழ்ந்த உயிர்க்கெலாம்
கையில் ஆமல கம்மெனக் காட்டுவான்
மையல் தீர்திரு மந்திரஞ் செப்பிய
செய்ய பொற்றிரு மூலனைச் சிந்திப்பாம்

- பதிபசுபாச விளக்கம்

திருமூல தேவனையே சிந்தை செய்வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்

- தனிப் பாடல்

திருமந்திர சிறப்புப் பாயிரம்

ஆக்கியோன் பெயரும் குருமட வரலாறும்

வந்த மடமேழு மன்னுஞ்சன் மார்க்கத்தின்
முந்தி உதிக்கின்ற **மூலன்** மடவரை
தந்திரம் ஒன்பது சார்வுமூ வாயிரம்
சுந்தரன் ஆகமச் சொல்மொழிந் தானே 1

கலந்தருள் காலாங்கர் தம்பால கோரர்
நலந்தரு மாளிகைத் தேவர்நா தாந்தர்
புலங்கொள் பரமானந் தர்போக தேவர்
நிலந்திகழ் மூலர் நிராமயத் தோரே 2

திருமந்திரத் தொகைச் சிறப்பு

மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த மூவாயிரந் தமிழ்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே 3

திருமந்திரத் தெளிவு

அத்தன் நவதீர்த்தம் ஆடும் பரிசுகேள்
ஒத்தமெய்ஞ் ஞானத் துயர்ந்தார் பதத்தைச்
சுத்தமதாக விளக்கித் தெளிக்கவே
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே 4

வித்தக மாகிய வேடத்தர் உண்ட ஊண்
அத்தன் அயன்மால் அருந்திய அன்னமாம்
சித்தம் தெளிந்தவர் சேடம் பருகிடின்
முத்தியாம் என்றுநம் மூலன் மொழிந்ததே 5

நூல் யாப்பு

வைத்த பரிசே வகைவகை நன்னூலின்
முத்தி முடிவிது மூவாயி ரத்திலே
புத்திசெய் பூர்வத்து மூவாயி ரம்பொது
வைத்த சிறப்பு தருமிவை தானே 6

நூற்பயன்

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
ஞாலம் அறியவே நந்தி அருளது
காலை எழுந்து கருத்தறிந் தோதிடின்
ஞாலத் தலைவியை நண்ணுவ ரன்றே 7

திருமூலர் - தற்சிறப்புப் பாயிரம்

நூற் பெயர்

பிறப்பிலி நாதனைப் பேர்நந்தி தன்னைச்
சிறப்பொடு வானவர் சென்றுகை கூப்பி
மறப்பிலர் நெஞ்சினுள் மந்திர மாலை
உறைப்பொடுங் கூடிநின் றோதலு மாமே. 1

நூல்வழி - இது முதனூல்

நந்தி இணையடி நான்தலை மேற்கொண்டு
புந்தியின் உள்ளே புகப்பெய்து போற்றிசெய்
தந்தி மதிபுனை அரனடி நாடொறுஞ்
சிந்தைசெய் தாகமஞ் செப்பலுற் றேனே. 2

நூல் எல்லை

அங்கிமி காமைவைத் தானுடல் வைத்தான்
எங்குமி காமைவைத் தானுல கேழையுந்
தங்கிமி காமைவைத் தான்தமிழ்ச் சாத்திரம்
பொங்கிமி காமைவைத் தான்பொருள் தானுமே 3

நூல் நுதலிய பொருள்

ஞேயத்தை ஞானத்தை ஞாதுரு வத்தினை
மாயத்தை மாமாயை தன்னில் வரும்பரை
யாயத்தை யச்சிவன் தன்னை யகோசர
வீயத்தை முற்றும் விளக்கியிட் டேனே. 4

நூல் கேட்போர் - சரியை கடந்தவர்

நேர்ந்திடுமூல சரியை நெறிஇ தென்று
ஆய்ந்திடும் காலாங்கி கஞ்ச மலையமான்
ஓர்ந்திடும் கந்துரு கேண்மின்கள் பூதலத்து
ஓர்ந்திடும் சுத்த சைவத்து உயிரிதே. 5

நூற் பயன்

நான்பெற்ற இன்பம் பெறுகஇவ் வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வுறு மந்திரந்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே. 6

குரு பாரம்பரியம்

நந்தி அருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்ரமர்
என்றிவர் என்னோ டெண்மரு மாமே. 7

நந்தி அருளாலே நாதனாம் பேர்பெற்றோம்
நந்தி அருளாலே மூலனை நாடினோம்
நந்தி அருளாவ தென்செயும் நாட்டினில்
நந்தி வழிகாட்ட நானிருந் தேனே. 8

மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன்
இந்திரன் சோமன் பிரமன் உருத்திரன்
கந்துருக் காலாங்கி கஞ்ச மலையனோ
டிந்த எழுவரும் என்வழி யாமே. 9

நால்வரும் நாலு திசைக்கொன்று நாதர்கள்
நால்வரும் நானா விதப்பொருள் கைக்கொண்டு
நால்வரும் நான்பெற்ற தெல்லாம் பெறுகென
நால்வருந் தேவராய் நாதரா னார்களே. 10

மொழிந்தது மூவர்க்கும் நால்வர்க்கும் ஈசன்
ஒழிந்த பெருமை இறப்பும் பிறப்புஞ்
செழுஞ்சுடர் மூன்றொளி யாகிய தேவன்
கழிந்த பெருமையைக் காட்டகி லானே. 11

எழுந்துநீர் பெய்யினும் எட்டுத் திசையுஞ்
செழுந்தண் நியமங்கள் செய்ம்மினென் றண்ணல்
கொழுந்தண் பவளக் குளிர்சடை யோடே
அழுந்திய நால்வர்க் கருள்புரிந் தானே. 12

திருமூலர் தம் வரலாறு கூறுதல்

செப்புஞ் சிவாகமம் என்னும்அப் பேர்பெற்றும்
அப்படி நல்கும் அருள்நந்தி தாள்பெற்றுத்
தப்பிலா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின்
ஒப்பில் எழுகோடி யுகம்இருந் தேனே. 13

இருந்தவக் காரணங் கேளிந் திரனே
பொருந்திய செல்வப் புவனா பதியாம்
அருந்தவச் செல்வியைச் சேவித் தடியேன்
பரிந்துடன் வந்தனன் பத்தியி னாலே. 14

சதாசிவந் தத்துவம் முத்தமிழ் வேதம்
மிதாசனி யாதிருந் தேனின்ற காலம்
இதாசனி யாதிருந் தேன்மன நீங்கி
உதாசனி யாதுட னேஉணர்ந் தோமால். 15

மாலாங்க னேயிங்கு யான்வந்த காரணம்
நீலாங்க மேனியள் நேரிழை யாளொடு
மூலாங்க மாக மொழிந்த திருக்கூத்தின்
சீலாங்க வேதத்தைச் செப்பவந் தேனே. 16

நேரிழை யாவாள் நிரதிச யானந்தப்
பேருடை யாளென் பிறப்பறுத் தாண்டவள்
சீருடை யாள்சிவ னாவடு தண்டுறை
சீருடை யாள்பதஞ் சேர்ந்திருந் தேனே. 17

சேர்ந்திருந் தேன்சிவ மங்கைதன் பங்கனைச்
சேர்ந்திருந் தேன்சிவ னாவடு தண்டுறை
சேர்ந்திருந் தேன்சிவ போதியின் நீழலிற்
சேர்ந்திருந் தேன்சிவன் நாமங்கள் ஓதியே. 18

இருந்தேன்இக் காயத்தே எண்ணிலி கோடி
இருந்தேன் இராப்பகல் அற்ற இடத்தே
இருந்தேன் இமையவர் ஏத்தும் பதத்தே
இருந்தேன் என்நந்தி இணையடிக் கீழே. 19

பின்னைநின் றென்னே பிறவி பெறுவது
முன்னைநன் றாக முயல்தவஞ் செய்கிலர்
என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே. 20

ஞானத் தலைவிதன் நந்தி நகர்புக்கு
ஊனமில் ஒன்பது கோடி யுகந்தனுள்
ஞானப்பா லாட்டி நாதனை அர்ச்சித்து
நானும் இருந்தேன்நற் போதியின் கீழே. 21

செல்கின்ற வாறறி சிவமுனி சித்தசன்
வெல்கின்ற ஞானத்து மிக்கோர் முனிவராய்ப்
பல்கின்ற தேவர் அசுரர் நரர்தம்பால்
ஒல்கின்ற வான்வழி யூடுவந் தேனே. 22

சித்தத்தின் உள்ளே சிறக்கின்ற நூல்களில்
உத்தம மாகவே ஓதிய வேதத்தின்
ஒத்த உடலையும் உள்நின்ற உற்பத்தி
அத்தன் எனக்கிங் கருளால் அளித்ததே. 23

பெற்றமும் மானும் மழுவும் பிறிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமும் நல்கி அடியேன் சிரத்தினில்
நற்பத மும்அளித் தான்எங்கள் நந்தியே. 24

விளக்கிப் பரமாகும் மெய்ஞ்ஞானச் சோதி
அளப்பில் பெருமையன் ஆனந்த நந்தி
துளக்கறும் ஆனந்தக் கூத்தன்சொற் போந்து
வளப்பில் கயிலை வழியில்வந் தேனே. 25

நந்தி அருளாலே மூலனை நாடிப்பின்
நந்தி அருளாலே சதாசிவ னாயினேன்
நந்தி அருளால்மெய்ஞ் ஞானத்துள் நண்ணினேன்
நந்தி அருளாலே நானிருந் தேனே. 26

இருக்கில் இருக்கும் எண்ணிலி கோடி
அருக்கின்ற மூலத்துள் அங்கே இருக்கும்
அருக்கனுஞ் சோமனும் ஆரழல் வீச
உருக்கிய ரோமம் ஒளிவிடுந் தானே. 27

பிதற்றுகின் றேன்என்றும் பேர்நந்தி தன்னை
இயற்றுவன் நெஞ்சத் திரவும் பகலும்
முயற்றுவன் ஓங்கொளி வண்ணன்எம் மானை
இயற்றிகழ் சோதி இறைவனு மாமே. 28

அவையடக்கம்

ஆரறி வார்எங்கள் அண்ணல் பெருமையை
யாரறி வார்இந்த அகலமும் நீளமும்
பேரறி யாத பெருஞ்சுடர் ஒன்றதின்
வேரறி யாமை விளம்புகின் றேனே. 1

பாடவல் லார்நெறி பாட அறிகிலேன்
ஆடவல் லார்நெறி ஆட அறிகிலேன்
நாடவல் லார்நெறி நாட அறிகிலேன்
தேடவல் லார்நெறி தேடகில் லேனே. 2

மன்னிய வாய்மொழி யாலும் மதித்தவர்
இன்னிசை உள்ளே எழுகின்ற ஈசனைப்
பின்னை உலகம் படைத்த பிரமனும்
உன்னும் அவனை உணரலு மாமே. 3

தத்துவ ஞானம் உரைத்தது தாழ்வாரை
முத்திக் கிருந்த முனிவருந் தேவரும்
ஒத்துடன் வேறா யிருந்து துதிசெயும்
பத்திமை யால்இப் பயனறி யாரே. 4

சுந்தர நாதன் என்கிற திருமூலர் அருளிய

திருமந்திரம்

விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

- (ஓர் அன்பர் இணைப்பு)

நூல் - பொதுப் பாயிரம்

1. கடவுள் வாழ்த்து

ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந் தான்ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந் தானுணர்ந் தெட்டே. 1

போற்றிசைத் தின்னுயிர் மன்னும் புனிதனை
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை
மேற்றிசைக் குள்தென் திசைக்கொரு வேந்தனாங்
கூற்றுதைத் தானையான் கூறுகின் றேனே. 2

ஒக்கநின் றானை உலப்பிலி தேவர்கள்
நக்கனென் றேத்திடு நாதனை நாடொறும்
பக்கநின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின் றுன்னியான் போற்றிசெய் வேனே. 3

அகலிடத் தார்மெய்யை அண்டத்து வித்தைப்
புகலிடத் தென்றனைப் போதவிட் டானைப்
பகலிடத் தும்இர வும்பணிந் தேத்தி
இகலிடத் தேஇருள் நீங்கிநின் றேனே. 4

சிவனொடொக் குந்தெய்வந் தேடினும் இல்லை
அவனொடொப் பார்இங்கு யாவரும் இல்லை
புவனங் கடந்தன்று பொன்னொளி மின்னுந்
தவனச் சடைமுடித் தாமரை யானே. 5

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவனன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவனன்றி மூவரால் ஆவதொன் றில்லை
அவனன்றி ஊர்புகு மாறறி யேனே. 6

முன்னையொப் பாயுள்ள மூவர்க்கு மூத்தவன்
தன்னையொப் பாயொன்றும் இல்லாத் தலைமகன்
தன்னையப் பாஎனில் அப்பனு மாய்உளன்
பொன்னையொப் பாகின்ற போதகத் தானே. 7

தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன்
ஆயினும் ஈசன் அருளறி வார்இல்லை
சேயினும் நல்லன் அணியன்நல் அன்பர்க்குத்
தாயினும் நல்லன் தாழ்சடை யோனே. 8

பொன்னாற் புரிந்திட்ட பொற்சடை யென்னப்
பின்னாற் பிறங்க இருந்தவன் பேர்நந்தி
என்னால் தொழப்படும் எம்இறை மற்றவன்
தன்னால் தொழப்படு வாரில்லை தானே. 9

தானே இருநிலந் தாங்கிவிண் ணாய்நிற்குந்
தானே சுடும்அங்கி ஞாயிறுந் திங்களுந்
தானே மழைபொழி தையலு மாய்நிற்குந்
தானே தடவரை தண்கட லாமே. 10

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்
இயலும் பெருந்தெய்வம் யாதுமொன் றில்லை
முயலும் முயலில் முடிவுமற் றாங்கே
பெயலும் மழைமுகிற் பேர்நந்தி தானே. 11

கண்ணுத லான்ஒரு காதலின் நிற்கவும்
எண்ணிலி தேவர் இறந்தார் எனப்பலர்
மண்ணுறு வார்களும் வானுறு வார்களும்
அண்ணல் இவன்என் றறியகி லார்களே. 12

மண்ணளந் தான்மல ரோன்முதல் தேவர்கள்
எண்ணளந் தின்ன நினைக்கிலார் ஈசனை
விண்ணளந் தான்தன்னை மேல்அளந் தாரில்லை
கண்ணளந் தெங்குங் கடந்துநின் றானே. 13

கடந்துநின் றான்கம லம்மல ராதி
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்
கடந்துநின் றான்அவர்க் கப்புறம் ஈசன்
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே. 14

ஆதியு மாய்அர னாய்உட லுள்நின்ற
வேதியு மாய்விரிந் தார்ந்திருந் தான்அருட்
சோதியு மாய்ச்சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்த மாகிநின் றானே. 15

கோது குலாவிய கொன்றைக் குழற்சடை
மாது குலாவிய வாணுதல் பாகனை
யாது குலாவி அமரருந் தேவருங்
கோது குலாவிக் குணம்பயில் வாரே. 16

காயம் இரண்டுங் கலந்து கொதிக்கினும்
ஆயங் கத்தூரி யதுமிகும் அவ்வழி
தேசங் கலந்தொரு தேவனென் றெண்ணினும்
ஈசன் உறவுக் கெதிரில்லை தானே. 17

அதுபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவ நோக்கி
அதுபதி யாதரித் தாக்கம தாக்கின்
இதுபதி கொள்ளென்ற எம்பெரு மானே. 18

இதுபதி ஏலங் கமழ்பொழில் ஏழும்
முதிபதி செய்தவன் மூதறி வாளன்
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே. 19

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அறநெறி நாடில்
இடியும் முழக்கமும் ஈசர் உருவங்
கடிமலர்க் குன்ற மலையது தானே. 20

வானப் பெருங்கொண்டல் மாலயன் வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே. 21

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் என்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே. 22

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரண
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே. 23

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வ
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே. 24

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே 25

தொடர்ந்துநின் றானைத் தொழுமின் தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே. 26

சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படும்அவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே. 27

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னாகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை யாமே. 28

காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய னாகி அமர்ந்துநின் றானே. 29

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனுந்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே. 30

மண்ணகத் தான்ஒக்கும் வானகத்தான் ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே. 31

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருட் பாடலு மாமே. 32

பதிபல வாயது பண்டிவ் வுலகம்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே. 33

சாந்து கமழுங் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே. 34

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப் புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே. 35

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினால்
அப்பரி சீசன் அருள்பெற லாமே. 36

நானும்நின் றேத்துவன் நாடொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்கு மேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே. 37

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே. 38

வாழ்த்தவல் லார்மனத் துள்ளூறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே. 39

குறைந்தடைந் தீசன் குரைகுழல் நாடும்
நிறைந்தடை செம்பொனின் நேரொளி ஒக்கும்
மறஞ்சடஞ் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறஞ்சடஞ் செய்வான் புகுந்துநின் றானே. 40

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்த நெஞ்சிடை போற்றவல் லார்க்குக்
கனஞ்செய்த வாணுதல் பாகனும் அங்கே
இனஞ்செய்த மான்போல் இணங்கிநின் றானே. 41

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே. 42

அரனடி சொல்லி அரற்றி அழுது
பரனடி நாடியே பாவிப்ப நாளும்
உரனடி செய்தங் கொதுங்கவல் லார்க்கு
நிரனடி செய்து நிறைந்துநின் றானே. 43

போற்றிஎன் பார்அம ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்அசு ரர்புனி தன்அடி
போற்றிஎன் பார்மனி தர்புனி தன்அடி
போற்றிஎன் அன்புள் பொலியவைத் தேனே. 44

விதிவழி அல்லதிவ் வேலை உலகம்
விதிவழி இன்பம் விருத்தமும் இல்லை
துதிவழி நித்தலுஞ் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவ னாமே. 45

அந்திவண் ணாஅர னேசிவ னேஎன்று
சிந்தைசெய் வண்ணந் திருந்தடி யார்தொழ
முந்திவண் ணாமுதல் வாபர னேஎன்று
வந்திவ் வண்ணன்எம் மனம்புகுந் தானே. 46

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்
பனையுள் இருந்த பருந்தது போல
நினையாத வர்க்கில்லை நின்இன்பந் தானே. 47

அடியார் பரவும் அமரர் பிரானை
முடியால் வணங்கி முதல்வனை முன்னிப்
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்கென்று மேவிநின் றேனே. 48

பரைபசு பாசத்து நாதனை உள்ளி
உரைபசு பாசத் தொருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசங் கடந்தெய்த லாமே. 49

சூடுவன் நெஞ்சிடை வைப்பன் பிரான்என்று
பாடுவன் பன்மலர் தூவிப் பணிந்துநின்
றாடுவன் ஆடி அமரர்பி ரான்என்று
நாடுவன் நானின் றறிவது தானே. 50

2. மும்மூர்த்திகளின் முறைமை

அளவில் இளமையும் அந்தமும் ஈறும்
அளவியல் காலமும் நாலும் உணரில்
தளர்விலன் சங்கரன் தன்னடி யார்சொல்
அளவில் பெருமை அரிஅயற் காமே. 1

ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
ஆதிக் கமலத் தலர்மிசை யானுஞ்
சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனார்
பேதித் துலகம் பிணங்குகின் றார்களே. 2

ஈசன் இருக்கும் இருவினைக் கப்புறம்
பீசம் உலகிற் பெருந்தெய்வ மானது
ஈசன் அதுஇது என்பார் நினைப்பிலார்
தூசு பிடித்தவர் தூரறிந் தார்களே. 3

சிவன்முதல் மூவரோ டைவர் சிறந்த
அவைமுதல் ஆறிரண் டொன்றொடொன் றாகும்
அவைமுதல் விந்துவும் நாதமும் ஓங்கச்
சவைமுதற் சங்கரன் தன்பெயர் தானே. 4

பயன்அறிந் தவ்வழி எண்ணும் அளவில்
அயனொடு மால்நமக் கன்னியம் இல்லை
நயனங்கள் மூன்றுடை நந்தி தமராம்
வயனம் பெறுவீர்அவ் வானவ ராலே. 5

ஓலக்கஞ் சூழ்ந்த உலப்பிலி தேவர்கள்
பாலொத்த மேனி பணிந்தடி யேன்தொழ
மாலுக்கும் ஆதிப் பிரமற்கும் ஒப்புநீ
ஞாலத்து நம்மடி நல்கிடென் றானே. 6

வானவர் என்றும் மனிதர்இவர் என்றுந்
தேனமர் கொன்றைச் சிவனருள் அல்லது
தானமர்ந் தோருந் தனித்தெய்வம் மற்றில்லை
ஊனமர்ந் தோரை உணர்வது தானே. 7

சோதித்த பேரொளி மூன்றைந் தெனநின்ற
ஆதிக்கண் ஆவ தறிகிலர் ஆதர்கள்
நீதிக்கண் ஈசன் நெடுமால் அயன்என்று
பேதித் தவரைப் பிதற்றுகின் றாரே. 8

பரத்திலே ஒன்றாய்உள் ளாய்ப்புற மாகி
வரத்தினுள் மாயவ னாய்அய னாகித்
தரத்தினுள் தான்பல தன்மைய னாகிக்
கரத்தினுள் நின்று கழிவுசெய் தானே. 9

தானொரு கூறு சதாசிவன் எம்இறை
வானொரு கூறு மருவியும் அங்குளான்
கோனொரு கூறுடல் உள்நின் றுயிர்க்கின்ற
தானொரு கூறு சலமய னாமே. 10

3. வேதம் - ஆகமம்

வேதமோ டாகமம் மெய்யாம் இறைவன்நூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென் றுள்ளன
நாதன் உரையவை நாடில் இரண்டந்தம்
பேதம தென்பர் பெரியோர்க் கபேதமே

4. வேதச் சிறப்பு

வேதத்தை விட்ட அறம்இல்லை வேதத்தின்
ஓதத் தகும்அறம் எல்லாம் உளதர்க்க
வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடுபெற் றார்களே. 1

வேதம் உரைத்தானும் வேதிய னாகிலன்
வேதம் உரைத்தானும் வேதா விளங்கிட
வேதம் உரைத்தானும் வேதியர் வேள்விக்காய்
வேதம் உரைத்தானும் மெய்ப்பொருள் காட்டவே. 2

இருக்குரு வாம்எழில் வேதத்தி னுள்ளே
உருக்குணர் வாயுணர் வேதத்துள் ஓங்கி
வெருக்குரு வாகிய வேதியர் சொல்லுங்
கருக்குரு வாய்நின்ற கண்ணனு மாமே. 3

திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாஞ்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே. 4

ஆறங்க மாய்வரு மாமறை ஓதியைக்
கூறங்க மாகக் குணம்பயில் வாரில்லை
வேறங்க மாக விளைவுசெய் தப்புறம்
பேறங்க மாகப் பெருக்குகின் றாரே. 5

பாட்டும் ஒலியும் பரக்குங் கணிகையர்
ஆட்டும் ஆறாத அவனியின் மாட்டாதார்
வேட்டு விருப்பார் விரதமில் லாதவர்
ஈட்டும் இடஞ்சென் றிகலலுற் றாரே. 6

5. ஆகமச் சிறப்பு

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொ டிருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும்
அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே. 1

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணில் இருபத்தெண் கோடிநூ றாயிரம்
விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்
எண்ணிநின் றப்பொருள் ஏத்துவன் நானே. 2

பண்டித ராவார் பதினெட்டுப் பாடையுங்
கண்டவர் கூறுங் கருத்தறி வார்என்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே. 3

அண்ணல் அருளால் அருளுந்திவ் யாகமம்
விண்ணில் அமரர் தமக்கும் விளங்கரி
தெண்ணில் எழுபது கோடிநூ றாயிரம்
எண்ணிலும் நீர்மேல் எழுத்தது ஆகுமே. 4

பரனாய்ப் பராபரங் காட்டி உலகிற்
றரனாய்ச் சிவதன்மந் தானேசொல் காலத்
தரனாய் அமரர்கள் அர்ச்சிக்கு நந்தி
உரனாகி ஆகமம் ஓங்கிநின் றானே. 5

சிவமாம் பரத்தினிற் சத்தி சதாசிவம்
உவமா மகேசர் உருத்திர தேவர்
தவமால் பிரமீசர் தம்மில்தாம் பெற்ற
நவஆ கமம்எங்கள் நந்திபெற் றானே. 6

பெற்றநல் ஆகமங் காரணங் காமிகம்
உற்றநல் வீரம் உயர்சிந்தம் வாதுளம்
மற்றவ் வியாமள மாகுங்கா லோத்தரந்
துற்றநற் சுப்பிரஞ் சொல்லு மகுடமே. 7

ஆகமம் ஒன்பான் அதிலான நாலேழு
மோகமில் நாலேழு முப்பேதம் உற்றுடன்
வேகமில் வேதாந்த சித்தாந்த மெய்ம்மை ஒன்று
ஆக முடிந்த அருஞ் சுத்த சைவமே. 8

அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம்
எண்ணிலி கோடி தொகுத்திடு மாயினும்
அண்ணல் அறைந்த அறிவறி யாவிடின்
எண்ணிலி கோடியும் நீர்மேல் எழுத்தே. 9

மாரியும் கோடையும் வார்பனி தூங்கநின்
றேரியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்உட னேசொல்லிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே. 10

அவிழ்க்கின்ற வாறும் அதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் எனும்இவ் விரண்டும்
உணர்த்தும் அவனை உணரலு மாமே. 11

6. அந்தணரொழுக்கம்

அந்தண ராவோர் அறுதொழில் பூண்டுளோர்
செந்தழல் ஓம்பிமுப் போதும் நியமஞ்செய்
தந்தவ நற்கரு மத்துநின் றாங்கிட்டுச்
சந்தியும் ஓதிச் சடங்கறுப் போர்களே. 1

வேதாந்தங் கேட்க விருப்பொடு முப்பதப்
போதாந்த மான பிரணவத் துள்புக்கு
நாதாந்த வேதாந்த போதாந்த நாதனை
ஈதாந்தம் எனாதுகண் டின்புறு வோர்களே. 2

காயத் திரியே கருதுசா வித்திரி
ஆய்தற் குவப்பர் மந்திரமாங் குன்னி
நேயத் தேரேறி நினைவுற்று நேயத்தாய்
மாயத்துள் தோயா மறையோர்கள் தாமே. 3

பெருநெறி யான பிரணவம் ஓர்ந்து
குருநெறி யாலுரை கூடிநால் வேதத்
திருநெறி யான கிரியை யிருந்து
சொருபம தானோர் துகளில்பார்ப் பாரே. 4

சத்திய முந்தவம் தான்அவன் ஆதலும்
எய்த்தகும் இந்தியம் ஈட்டியே வாட்டலும்
ஒத்த உயிர்கள் உண்டா யுணர்வுற்றுப்
பெத்தம் அறுத்தலு மாகும் பிரமமே. 5

நூலுஞ் சிகையும் நுவலிற் பிரமமோ
நூலது கார்ப்பாச நுண்சிகை கேசமாம்
நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்
நூலுடை அந்தணர் காணும் நுவலிலே. 6

சத்தியம் இன்றித் தனிஞானந் தானின்றி
ஒத்த விடையம்விட் டோரும் உணர்வின்றிப்
பத்தியும் இன்றிப் பரன்உண்மை யின்றிப்
பித்தேறும் மூடர் பிராமணர் தாம்அன்றே. 7

திருநெறி யாகிய சித்தசித் தின்றிக்
குருநெறி யாலே குருபதஞ் சேர்ந்து
கரும நியமாதி கைவிட்டுக் காணுந்
துரிய சமாதியாந் தூய்மறை யோர்க்கே. 8

மறையோ ரவரே மறையவ ரானால்
மறையோர்தம் வேதாந்த வாய்மையில் தூய்மை
குறையோர்தன் மற்றுள்ள கோலா கலமென்
றறிவோர் மறைதெரிந் தந்தண ராமே. 9

அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேருஞ் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியுஞ் சந்தியும் ஆகுதி பண்ணுமே. 10

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்குந் திருவுடை யோரே. 11

தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணிய போகனாய்
ஓமேவும் ஓரா குதிஅவி உண்ணவே. 12

7. அக்கினி காரியம்

வசையில் விழுப்பொருள் வானும் நிலனுந்
திசையுந் திசைபெறு தேவர் குழாமும்
விசையம் பெருகிய வேத முதலாம்
அசைவிலா அந்தணர் ஆகுதி வேட்கிலே. 1

ஆகுதி வேட்கும் அருமறை அந்தணர்
போகதி நாடிப் புறங்கொடுத் துண்ணுவார்
தாம்விதி வேண்டித் தலைப்படு மெய்ந்நெறி
தாமறி வாலே தலைப்பட்ட வாறே. 2

அணைதுணை அந்தணர் அங்கியுள் அங்கி
அணைதுணை வைத்ததின் உட்பொரு ளான
இணைதுணை யாமத் தியங்கும் பொழுது
துணையன்ன யாயதோர் தூய்நெறி யாமே. 3

போதிரண் டோதிப் புரிந்தருள் செய்திட்டு
மாதிரண் டாகி மகிழ்ந்துட னேநிற்குந்
தாதிரண் டாகிய தண்ணம் பறவைகள்
வேதிரண் டாகி வெறிக்கின்ற வாறே. 4

நெய்நின் றெரியும் நெடுஞ்சுட ரேசென்று
மைநின் றெரியும் வகையறி வார்கட்கு
மைநின் றவிழ்தரு மத்தின மாம்என்றுஞ்
செய்நின்ற செல்வம் தீயது வாமே. 5

பாழி அகலும் எரியுந் திரிபோலிட்
டூழி அகலும் உறுவினை நோய்பல
வாழிசெய் தங்கி உதிக்க அவைவிழும்
வீழிசெய் தங்கி வினைசுடு மாமே. 6

பெருஞ்செல்வங் கேடென்று முன்னே படைத்த
வருஞ்செல்வம் தந்த தலைவனை நாடும்
வருஞ்செல்வத் தின்பம் வரவிருந் தெண்ணி
அருஞ்செல்வத் தாகுதி வேட்கநின் றாரே. 7

ஒண்சுட ரானை உலப்பிலி நாதனை
ஒண்சுட ராகி என்னுள்ளத் திருக்கின்ற
கண்சுட ரோன்உல கேழுங் கடந்தஅத்
தண்சுட ரோமத் தலைவனு மாமே. 8

ஓமத்துள் அங்கியின் உள்ளுளன் எம்இறை
ஈமத்துள் அங்கிஇர தங்கொள் வானுளன்
வேமத்துள் அங்கி விளைவு வினைக்கடல்
கோமத்துள் அங்கி குரைகடல் தானே. 9

அங்கி நிறுத்தும் அருந்தவர் ஆரணத்
தங்கி இருக்கும் வகையருள் செய்தவர்
எங்கும் நிறுத்தி இளைப்பப் பெரும்பதி
பொங்கி நிறுத்தும் புகழது வாமே. 10

8. அரசாட்சி முறை

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகிநில் லானே. 1

நாடோறும் மன்னவன் நாட்டில் தவநெறி
நாடோறும் நாடி அவன்நெறி நாடானேல்
நாடோறும் நாடு கெடுமூட நண்ணுமால்
நாடோறுஞ் செல்வம் நரபதி குன்றுமே. 2

வேட நெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்
வேட நெறிநிற்போர் வேடம்மெய் வேடமே
வேட நெறிநில்லார் தம்மை விறல்வேந்தன்
வேட நெறிசெய்தால் வீடது வாகுமே. 3

மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடொன் றிலனாகும் ஆதலாற் பேர்த்துணர்ந்
தாடம் பரநூற் சிகையறுத் தால்நன்றே. 4

ஞானமி லாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின் றவர்தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே. 5

ஆவையும் பாவையும் மற்றற வோரையுந்
தேவர்கள் போற்றுந் திருவேடத் தாரையுங்
காவலன் காப்பவன் காவா தொழிவனேல்
மேவும் மறுமைக்கு மீளா நரகமே. 6

திறந்தரு முத்தியுஞ் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறி யேஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலஞ் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக் காறிலொன் றாமே. 7

வேந்தன் உலகை மிகநன்று காப்பது
வாய்ந்த மனிதர்கள் அவ்வழி யாநிற்பர்
பேர்ந்திவ் வுலகைப் பிறர்கொள்ளத் தாங்கொள்ளப்
பாய்ந்த புலியன்ன பாவகத் தானே. 8

கால்கொண்டு கட்டிக் கனல்கொண்டு மேலேற்றிப்
பால்கொண்டு சோமன் முகம்பற்றி உண்ணாதோர்
மால்கொண்டு தேறலை உண்ணும் மருளரை
மேல்கொண்டு தண்டஞ்செய் வேந்தன் கடனே. 9

தத்தஞ் சமயத் தகுதிநில் லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகம நூல்நெறி
எத்தண் டமுஞ்செயும் அம்மையில் இம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே. 10

9. வானச் சிறப்பு

அமுதூறு மாமழை நீரத னாலே
அமுதூறும் பன்மரம் பார்மிசை தோற்றுங்
கமுகூறு தெங்கு கரும்பொடு வாழை
அமுதூறுங் காஞ்சிரை ஆங்கது வாமே. 1

வரையிடை நின்றிழி வான்நீர் அருவி
உரையில்லை உள்ளத் தகத்துநின் றூறு
நுரையில்லை மாசில்லை நுண்ணிய தெண்ணீர்க்
கரையில்லை எந்தை கழுமணி யாறே. 2

10. அறஞ்செய்வான் திறம்

ஆர்க்கும் இடுமின் அவரிவர் என்னன்மின்
பார்த்திருந் துண்மின் பழம்பொருள் போற்றன்மின்
வேட்கை யுடையீர் விரைந்தொல்லை உண்ணன்மின்
காக்கை கரைந்துண்ணுங் காலம் அறிமினே. 1

தாமறி வாரண்ணல் தாள்பணி வாரவர்
தாமறி வாரறந் தாங்கிநின் றாரவர்
தாமறி வார்சில தத்துவ ராவர்கள்
தாமறி வார்க்குத் தமர்பர னாமே. 2

யாவர்க்கு மாம்இறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாம்உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே. 3

அற்றுநின் றாருண்ணும் ஊணே அறனென்னுங்
கற்றன போதங் கமழ்பவர் மானிடர்
உற்றுநின் றாங்கொரு கூவற் குளத்தினிற்
பற்றிவந் துண்ணும் பயன்அறி யாரே. 4

அழுக்கினை ஓட்டி அறிவை நிறையீர்
தழுக்கிய நாளில் தருமமுஞ் செய்யீர்
விழித்திருந் தென்செய்வீர் வெம்மை பரந்து
விழிக்கவன் றென்செய்வீர் ஏழைநெஞ் சீரே. 5

தன்னை அறியாது தானல என்னாதிங்
கின்மை யறியா திளையரென் றேராது
வன்மையில் வந்திடுங் கூற்றம் வருமுன்னந்
தன்மையின் நல்ல தவஞ்செய்யும் நீரே. 6

துறந்தான் வழிமுதற் சுற்றமும் இல்லை
இறந்தான் வழிமுதல் இன்பமும் இல்லை
மறந்தான் வழிமுதல் வந்திலன் ஈசன்
அறந்தான் அறியும் அளவறி வாரே. 7

தான்தவஞ் செய்வதாஞ் செய்தவத் தவ்வழி
மான்தெய்வ மாக மதிக்கும் மனிதர்கள்
ஊன்தெய்வ மாக உயிர்க்கின்ற பல்லுயிர்
நான்தெய்வம் என்று நமன்வரு வானே. 8

திளைக்கும் வினைக்கடல் தீர்வுறு தோணி
இளைப்பினை நீக்கும் இருவழி உண்டு
கிளைக்குந் தனக்கும்அக் கேடில் புகழோன்
விளைக்குந் தவம்அறம் மேற்றுணை யாமே. 9

பற்றது வாய்நின்ற பற்றினைப் பார்மிசை
அற்றம் உரையான் அறநெறிக் கல்லது
உற்றுங்க ளால்ஒன்றும் ஈந்தது வேதுணை
மற்றண்ணல் வைத்த வழிகொள்ளு மாறே. 10

11. அறஞ்செயான் திறம்

எட்டி பழுத்த இருங்கனி வீழ்ந்தன
ஒட்டிய நல்லறஞ் செய்யா தவர்செல்வம்
வட்டிகொண் டீட்டியே மண்ணின் முகந்திடும்
பட்டிப் பதகர் பயன்அறி யாரே. 1

ஒழிந்தன காலங்கள் ஊழியும் போயின
கழிந்தன கற்பனை நாளுங் குறுகிப்
பிழிந்தன போலத்தம் பேரிடம் ஆக்கை
அழிந்தன கண்டும் அறம்அறி யாரே. 2

அறம்அறி யார்அண்ணல் பாதம் நினையுந்
திறம்அறி யார்சிவ லோக நகர்க்குப்
புறம்அறி யார்பலர் பொய்ம்மொழி கேட்டு
மறம்அறி வார்பகை மன்னிநின் றாரே. 3

இருமலுஞ் சோகையும் ஈளையும் வெப்புந்
தருமஞ்செய் யாதவர் தம்பால தாகும்
உருமிடி நாக முரோணி கழலை
தருமஞ்செய் வார்பக்கல் தாழகி லாவே. 4

பரவப் படுவான் பரமனை ஏத்தார்
இரவலர்க் கீதலை யாயினும் ஈயார்
கரகத்தால் நீரட்டிக் காவை வளர்க்கார்
நரகத்தில் நிற்றிரோ நாள்எஞ்சி னீரே. 5

வழிநடப் பாரின்றி வானோர் உலகங்
கழிநடப் பார்நடந் தார்கருப் பாரும்
மழிநடக் கும்வினை மாசற வோட்டிட
வழிநடக் கும்மள வீழ்ந்தொழிந் தாரே. 6

கனிந்தவர் ஈசன் கழலடி காண்பர்
துணிந்தவர் ஈசன் துறக்கம தாள்வர்
மலிந்தவர் மாளுந் துணையுமொன் றின்றி
மெலிந்த சினத்தினுள் வீழ்ந்தொழிந் தாரே. 7

இன்பம் இடரென் றிரண்டுற வைத்தது
முன்பவர் செய்கையி னாலே முடிந்தது
இன்பம் அதுகண்டும் ஈகிலாப் பேதைகள்
அன்பிலார் சிந்தை அறம்அறி யாரே. 8

கெடுவது மாவதுங் கேடில் புகழோன்
நடுவல்ல செய்தின்ப நாடவும் ஒட்டான்
இடுவதும் ஈவதும் எண்ணுமின் இன்பம்
படுவது செய்யிற் பசுவது வாமே. 9

செல்வங் கருதிச் சிலர்பலர் வாழ்வெனும்
புல்லறி வாளரைப் போற்றிப் புலராமல்
இல்லங் கருதி இறைவனை ஏத்துமின்
வில்லி இலக்கெய்த விற்குறி யாமே. 10

❑ ● ❑

உ

முருகா



நூலாசிரியரைப் பற்றி

ஆசிரியர் திருமந்திரத்தில் தோய்ந்தவர். 12 ஆண்டுகளாக திருமந்திர மாநாடு என ஆண்டு தோறும் கூட்டி தந்திரம் தந்திரமாகத் திருமந்திரத்தை இரு நாட்கள் முற்றோதல் செய்வித்து வேண்டிய விளக்கவுரைகளை அளித்துப் பல அறிஞர்களாலும் பாராட்டப் பெற்றவர். திருமந்திரத் தமிழ் மாமணி, திருமந்திர ஞான சரஸ்வதி என்ற பட்டங்களை முறையே குருவருட்பணி மன்றத்தாலும், வாரியார் விருதாகவும் பெற்றவர். மூதறிஞர் அருணா வடிவேலு, திரு, T.V. வெங்கட்ராமன் I.A.S, பேராசிரியர் வை.ரத்தினசபாபதி, முனைவர் சுப. அண்ணாமலை போன்ற அறிஞர்கள் உள்ளிட்டு தாம் சார்ந்த சோமசுந்தரர் குருவருட்பணி மன்றத்தாரால் இதுவரை 30 அறிஞர்களுக்கு திருமந்திர விருதுகளை அளித்துச் சிறப்பித்து அவர்களால் பாராட்டப் பெற்றவர். திருமந்திரத்திற்கென இணையதளம் ஒன்றை உருவாக்கி அயல் நாட்டவரிடையேயும் திருமந்திர நெறியைப் பரப்பி வருபவர்.